Hilton
COLOMBO

நேர்த்தியானது

தனிச் சிறப்பு மிக்கது. அதிவிசேட மானது.

ஹோடேல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சி

வருடாந்த அறிக்கை 2017

உள்ளடக்கம்

ஹோட்டல் தொடர்பான சுருக்கம் 15

நிதித்துறையின் முக்கியமான குறிப்புகள் 17

தலைவரின் ஆசிச் செய்தி 19

தகுதிவாய்ந்த அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபை 24

முகாமைத்துவக் குழு 30

முகாமைத்துவ மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு 32

நிறுவன கல்லாளுகை 38

இடர்நிலை முகாமைத்துவம் 41

நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கையிடல் 44

கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை 53

நிதி அறிக்கையிடல் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்பு 56

கணக்காய்வு குழு அறிக்கை 57

நிதிக் கூற்றுக்கள்

சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை 60

விபரமான வருமானக் கூற்று 62

நிதி நிலைமைக் கூற்று 63

பங்கு மாற்றல் பற்றிய கூற்று 64

நிதிப் பாய்ச்சல் கூற்று 65

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 66

கூட்டத்திற்கான அறிவித்தல் 91

குறிப்புக்கள் 92

பதிலாள் படிவம் 95

நிறுவனத் தகவல்கள் ..... **கடைசி உட்பக்க அட்டை**

Hilton
COLOMBO

நேர்த்தியானது

தனிச் சிறப்பு மிக்கது. அதிவிசேட மானது.

நேர்த்தியான, கௌரவம் மற்றும் தனக்கேயுரிய அமைப்புடன் கூடிய ஹில்டன் கொழும்பு ஹோட்டல் வியாபரக் குறி மற்றும் உரிய சேவைத் தரங்கள் என்பவற்றுடன் ஹில்டன் ஹோட்டல் திகழ்கிறது.இங்கு நீங்கள் பெறுகின்ற தனிச்சிறப்புமிக்க அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக எம்மை நாடி வருகின்ற உங்களுக்கு எமது விருந்தோம்பல் பணிகளை ஒவ்வொரு பிரிவிலும் தனிச்சிறப்பின் பால் கொண்டு செல்வதற்கு நாம் நடவடிக்கையெடுத்துள்ளோம். அதிசிறந்த முத்திரையைப் பொறிக்கும் ஆவலோடு செயல்பட்டு துறையின் நியதிகளை மேவிச் சென்றுள்ளது.மேலும் தொடர்ச்சியாக முன்னேறிச் செல்லும் ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் மூலவோர் அதன் விசேட செயல்திறன்மிக்க பணியாட்குழுவாகும்.மேலும் எம்மை நாடி வருகின்ற எமது விருந்தினர்கள் அனைவருக்கும் அவர்களின் வாழ்நாள் பூராகவும் மறக்க முடியாத இன்பகரமான அனுபவமொன்றை வழங்குவது எமது வெற்றிக்கான அடித்தளமாகும்.

எமது பணியாட்குழுவினருக்கு நாம் வழங்கியுள்ள நவீன அதிசிறப்புமிக்க பயிற்சி மற்றும் அவர்களிடம் புரையோடிப்போயுள்ள வெற்றி இலக்கை அடைந்துகொள்ளும் வலுவான மனவுறுதி மூலம் எமது ஊழியர் குழு விருந்தோம்பல் துறையின் உயர் மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளது. எமது வழிநடாத்தல்களின் ஓர் அங்கமான வகையில் இவர்களுக்கு வழங்கப்படுகின்ற முதன்மைத்துவம் அவர்கள் மத்தியில் எம்மைப் பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்தியுள்ளது. விருந்தோம்பல் துறையின் பிரகாசமிக்க ஒளி விளக்காக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நற்பெயரைப் பாதுகாத்துக் கொண்டு மூன்று தசாப்பதங்களாக நீண்டு செல்லுகின்ற எமது உரிமையை எதிர்வரும் வருடங்களிலும் தொடர்ச்சியாக அவ்வாறே பிரகாசிக்கும்.

அதிநவீன சிறப்பை நாடி வாருங்கள்

சுகபோகம் மற்றும் தனிச்சிறப்பை அனுபவித்துக் கெள்ளுங்கள், அது நாங்கள் பல தசாப்பத காலமாக விருந்தோம்பல் துறையில் பாதுகாத்து வருகின்ற தரமாகும்.





முதல் பிரதிபலிப்பு

எமது ஹோட்டலுக்கு வருகை தந்த நேரத்திலிருந்து வெளியேறிச் செல்லும் வரை எமது விருந்தினர்களின் தேவைப்பாடுகள் தொடர்பாக எமது அர்ப்பணிப்பு உண்மையில் அதிவிசேடமாகும்.




SHIRANJI

புன்முறுவலுடன் கூடிய சேவை

எமது பணியாட்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரதும் வரவேற்பு பண்புடன் கூடிய நேசமிக்க ஆளுமை எம்மிடம் வருகின்ற விருந்தினர்களின் உள்ளத்தில் அழியாத நினைவுக் குறிப்புக்களை தேற்றுவிக்கின்றன.




JANITHA

நல்லதொரு பார்வை

விருந்தோம்பல் துறையில் மிகச்சிறிய விடயங்கள் தொடர்பாகவும் நாம் எமது பெரும் கவனத்தைச் செலுத்துவது நிச்சயமாக அதிசிறப்பான ஒரு பணிக்காகவேயாகும். ஹோட்டல் தொழிலில் ஏனைய தரப்பினர் மத்தியில் நாம் தனித்துவம் பெறுவது அதன் காரணமாகவேயாகும்.





நிபுணத்துவ கவனிப்பு

தமது தொழில் துறையில் நிபுணர்கள் போன்றே சிறப்பான சேவையின் சின்னஞ்சிறிய இடங்களையும் மிக நன்றாகப் புரிந்து கொண்ட உண்மையான தொழில் வல்லமை கொண்ட பணியாட் குழுவினர் எம்மிடம் காணப்படுவதையிட்டு பெருமை அடைவதோடு அவர்கள் தமது சேவை அனுபவத்தினூடாக தனித்தன்மையை நோக்கிச் செல்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.





விருந்தோம்பல் துறையின் அளவுகோல்களை வகுத்துக்கொள்ளல்

கடந்த பல தசாப்த காலப்பகுதியினுள் எங்களால் இலங்கையில் சர்வதேச மட்டத்திலான விருந்தோம்பல் சேவைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் எதிர்வருகின்ற வருடங்களிலும் பொருத்தமான தர நிர்ணயங்களை தாபிப்பதற்கு மேலும் நடவடிக்கையெடுக்கப்படும்.






Hilton

ஹோட்டல் தொடர்பான சுருக்கம்



அனைத்து வசதிகள் கொண்ட 311 அறைகள்

அதி சொகுசு விசேட அறைகள் 44

நிறைவேற்றுதர அறை

ரியில் அமர்ந்து கொண்டு உணவு உட்கொள்ளும் வசதிகள்
கொண்ட நாள் முழுவதும் தொழிற்படும் உணவகம்

அமர்ந்திருக்கும் அறை மற்றும் குடிபானசாலை (பார்)

கோப்பி அருந்தும் கடை

அனைத்து நவீன வசதிகளுடனான சமையலறை

உண்மையான சீனச் சிற்றுண்டிச்சாலை

பல்வேறுபட்ட கலாச்சார விழா மண்டபம் மற்றும்
போல் ரூம், நடன அறை



நிதித்துறையின் முக்கியமான குறிப்புகள்

	2017 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான	2016 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான
அறைகள் மூலமான வருமானம் இ.ரூபா'000	1,317,248	1,151,954
உணவு மற்றும் குடிபான வருமானம் இ.ரூபா'000	1,635,026	1,330,543
ஏனைய வருமானம் இ.ரூபா'000	63,088	58,183
மொத்த வருமானம் இ.ரூபா'000	3,015,362	2,540,680
மொத்த இலாப எல்லை வீதம் %	82	83
வரிக்கு முந்திய இலாபம் (இழப்பு) இ.ரூபா'000	172,976	172,944
வரிக்கு பின்னரான இலாபம் இ.ரூபா'000	258,017	141,012
பங்கொன்றுக்கான உழைப்பு (இழப்பு) இ.ரூபா	0.13	0.07
சராசரி அறைக்கட்டணம் இ.ரூபா	21,077	20,408
அறைகளில் வசித்திருத்தல் வீதம் %	57	47
நீண்ட கால வட்டிக் கடன்கள் இ.ரூபா'000	Nil	Nil
மொத்தப் பங்குகள் இ.ரூபா'000	14,022,329	13,772,897
கடன்/பங்கு வீதம் %	1.94	2.47
மொத்த சொத்துக்கள் இ.ரூபா'000	15,428,109	15,362,703
கடன்/மொத்தச் சொத்துக்கள் வீதம் %	1.77	2.21
நடைமுறைச் சொத்துக்கள்	755,730	1,016,007
நடைமுறைப் பொறுப்புகள்	875,628	862,057
நடைமுறை விகிதம் (தடவைகள்)	0.86	1.18
துரித சொத்துக்கள் வீதம் (தடவைகள்)	0.80	1.12



தலைவரின் ஆசிச் செய்தி

“இலங்கை முதிர்ந்த சனநாயக நாடொன்று என்ற அடிப்படையில் இப்புவியில் அமையப்பெற்றுள்ள மிகவும் அமைதியான ஓர் இடமாகவும், மேலும் மேலும் அவதானத்திற்குட்பட்டுவருகின்ற மிகவும் ஆற்றல்மிக்க விதத்தில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியினுள் தனது வழிநடாத்தல் அலுவல்களைப் பேணிக் கொண்டு ஹில்டன் கொழும்பு ஹோட்டல் நாட்டின் அமைதியான சூழல் தொடர்பாக சான்று பகர்ந்து, தற்போது மிக முக்கியமான மாற்றங்களை அடைந்து அதன் இடர்மிக்க காலத்தைத்தாண்டிச் செயற்படுகின்ற ஹில்டன் கொழும்பு ஹோட்டல் அதன் மாற்றத்தினூடாக மிக உறுதியான அடிப்படையில் முன்னோக்கி பயணித்துக்கொண்டு இலங்கையில் புதிதாக இணைகின்ற புதிய சர்வதேச ஹோட்டல்களிடையே மிகவும் முன்னணியில் இருந்து கொண்டு, பல ஏற்றங்களை நோக்கி முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது.”

அன்புக்குரிய பங்குரிமையாளர்களே,

ஹோட்டல் டிவலோப்ர்ஸ் (லங்கா) பீஎல்சீ கம்பனியின் 2017 ஆம் நிதி வருடத்திற்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களைச் சமர்பிப்பதற்கு கிடைக்கப்பெற்றமை தொடர்பில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். ஹோட்டல் டிவலோப்ர்ஸ் (லங்கா) பீஎல்சீ கம்பனியின் பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்காகவே அர்ப்பணிக்கப்பட்ட ஓர் ஆதனமான ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் வழிநடாத்தலின் கீழ் நடாத்தப்பட்டுவருகின்ற வெற்றிகரமான 30 வருட நிறைவு நிகழ்வை இவ்வருடத்தில் கொண்டாடக் கிடைத்தமை மிக முக்கியமான விடயமாகும். கடந்த மூன்று தசாப்த காலத்தினுள் நாம் கடந்து வந்த பாதை உணர்ச்சிபூர்வமிக்கதாய் அமைந்ததோடு அக்காலப்பகுதியினுள் இலங்கையில் சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏனைய கைத்தொழிலாளர்களுக்கு பின்பற்றுவதற்காக சேவைத் தர நிர்ணயங்களைத் தயாரித்து வழங்கி அக்கைத்தொழிலின் நீண்ட கால நிலைத்திரு தன்மைக்காக அர்ப்பணித்த ஓர் வியாபாரக் குறியாக மாறுவதற்கு ஹில்டன் ஹோட்டலுக்கு சாத்தியம் கிடைத்தது.

முப்பது வருடங்களுக்கு முன்னர் தனது பணிகளை ஆரம்பித்த முதலாவது சர்வதேச வியாபாரக் குறி ஒன்றென்றவகையில் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் கடந்து வந்த சவால்மிக்க 30 வருட காலத்தினுள் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் போன்றே உள்நாட்டு விருந்தினர்களுக்காகவும் விருந்தோம்பல் துறையில் ஒளிவிளக்காய் வெற்றிகரமாக முன்னேறி வந்துள்ளதுடன், நாட்டினுள் வியாபாரத்துறையில் ஹில்டன் என்ற வர்த்தக நாமம் நிலைத்திருப்பதற்கும், சுற்றுலாப் பயணிகளிடையே நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. கடந்த 03 தசாப்தங்களினுள் விரைவாக விருத்தியடைந்த மிகவும் போட்டித்தன்மையிடையே விருந்துபசார சேவைத் துறையில் பெயர் பெற்ற ஹில்டன் ஹோட்டல் அதன் பங்குதாரர்களின் ஆதரவுடன் தனது வியாபாரப் பங்கை உறுதியாக பாதுகாப்பதற்கும் மேலும் விருத்தி செய்து கொள்வதற்கும் முடிந்துள்ளது.

இலங்கை முதிர்ந்த சனநாயக நாடொன்று என்ற அடிப்படையில் இப்புவியில் அமையப்பெற்றுள்ள மிகவும் அமைதியான ஓர் இடமாகவும், மேலும் மேலும் அவதானத்திற்குட்பட்டுவருகின்ற மிகவும் ஆற்றல்மிக்க விதத்தில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியினுள் தனது வழிநடாத்தல் அலுவல்களை பேணிக் கொண்டு ஹில்டன் கொழும்பு ஹோட்டல் நாட்டின் அமைதியான சூழல் தொடர்பாக சான்றுபகன்று தற்போது மிக முக்கியமான மாற்றங்களை அடைந்து அதன் இடர்மிக்க காலத்தைத்தாண்டி செயற்படுகின்ற ஹில்டன் கொழும்பு ஹோட்டல் அதன் மாற்றத்தினூடாக மிக உறுதியான அடிப்படையில் முன்னோக்கி பயணித்துக்கொண்டு இலங்கையில் புதிதாக இணைகின்ற புதிய சர்வதேச ஹோட்டல்களிடையே மிகவும் முன்னணியில் இருந்து, புதிய ஏற்றங்களை நோக்கி முன்னோக்கி பயனித்துக் கொண்டிருக்கின்றது. மீளாய்வு வருடத்தினுள் விறாந்தை மற்றும் பொது இடங்களைப் புதுமைப்படுத்தும் அலுவல்களின் பூர்வாங்க அலுவல்களை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு சாத்தியம் கிடைக்கப்பெற்றதை இங்கு குறிப்பிடுவதற்கு கிடைக்கப்பெற்றமை ஒரு பாக்கியமாக கருதுகிறேன். ஹோட்டலின் புதிதாக புனரமைக்கப்பட்ட இடங்களில் புதிய முன்தோற்றம் மற்றும் கலை வேலைப்பாடுகள் எமது பங்குதாரர் தரப்புக்களை மகிழ்ச்சியுரச் செய்துள்ளது.

நிதித்துறை செயல்பாட்டு பெறுபேறு

மீளாய்வு வருடத்தின் கூடுதலான காலப்பகுதியினுள் புதுமைப்படுத்தும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும், முன்னைய வருடத்தின் 2.5 பில்லியன் ரூபா வருமானத்தை 2017 ஆம் ஆண்டில் 03 பில்லியன் ரூபா வரை அதிகரித்துக்கொள்வதற்கான வாய்ப்பின் மூலம் தனது நிதி செயலாற்றுகையை விரிவு செய்துகொள்வதற்கு கம்பனிக்கு

தலைவரின் ஆசிச் செய்தி

சாத்தியம் கிடைத்துள்ளது. வரி செலுத்திய பின்னரான இலாபத்தை 141 பில்லியன் ரூபாவிலிருந்து 258 பில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. இந்த வெற்றிக்கு பங்களிப்புச் செய்த மிகப் பெரிய அர்ப்பணிப்போடு செயற்பட்ட எமது பணியாட் குழுவிற்கும், அவர்களின் சேவைச் சிறப்புத் தொடர்பாக ஹில்டன் வர்த்தக குறி எப்போதும் எதிர்பார்கின்ற, எம்மீது விசுவாசம் வைத்துள்ள ஹில்டன் ஹோட்டலின் மதிப்பு மிக்க அங்கத்தவர்களுக்கும் ஏனைய உள்நாட்டு, வெளிநாட்டு விருந்தினர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்தல் வேண்டும். எமது விருந்தினர்களின் பெரும்பாலானோர் உறுதி செய்துகொண்டிருப்பது ஹில்டன் கொழும்பு ஹோட்டலினுள் தாம்பெற்ற அனுபவம் ஹோட்டலுக்கு மீண்டும் மீண்டும் வருகைதர ஊக்குவிக்கின்ற, தூண்டுகின்ற அளப்பரிய அனுபவம் என்பதாகும். மீளாய்வு வருடத்தினுள் ஹோட்டல் கைத்தொழிலின் ஒழுங்குபடுத்தல் மற்றும் சிறந்த நிருவாகம் என்பவற்றை உறுதி செய்துகொள்வதற்கு செயற்பட்ட எமது கம்பனியின் உறுதியான ஐந்தொகையை பேணிக் கொள்வதற்கு அறிவார்ந்த நிதி முகாமை வழிமுறை மற்றும் மூலோபாயத் திட்டம் என்பவற்றை உபயோகப்படுத்தி முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கௌரவத்திற்கு பாத்திரமான பெயர் ஒன்றாக நாட்டின் தலைநகரின் அடையாளமாக ஹில்டன் கொழும்பு ஹோட்டல் சம்பிரதாயங்களுக்கு அமைய எதிர்காலத்தில் செயற்படுவதற்கும், விருந்தோம்பல் துறையில் புதிய போக்கினை நோக்கி ஹோட்டலை முன்கொண்டு செல்வதற்கும் இயலுமான அனைத்தையும் மேற்கொள்வதற்கு நாம் உறுதி பகர்கின்றோம்.

மீளாய்வு வருடத்தினுள் தேசிய பொருளாதார விருத்திக்கு பிரதானமான காரணியொன்றாக சுற்றுலாத் துறை தனது பலத்தை வெளிப்படுத்துதல் என்ற நிலைமையினுள் ஹோட்டல் கைத்தொழிலின் விருத்தி தொடர்பில் உறுதியாகக் காணப்பட்ட எமது சரியான தன்மை உறுதியடைந்தமை தொடர்பாக இங்கு மிகவும் மகிழ்ச்சியோடு குறிப்பிட்டுக்கொள்கின்றேன். தேசிய பொருளாதரத்தை மீண்டும் அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கு அரசினால் அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விருந்துபசார மற்றும் ஹோட்டல் துறையின் சிறந்த முன்னேற்றத்திற்கு வழிவகுக்குமென நாம் நன்நோக்கோடு எதிர்பார்கின்றோம். எதிர்வரும் சில மாதங்களினுள் உறுதியான பொருளாதார விருத்தியொன்றை அடைந்துகொள்வதற்கு ஏற்கனவே அடித்தளமிடப்பட்டுள்ளது. நல்லாட்சி மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அரசினால் மிக முக்கியமான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சுற்றுலா துறையின் விருத்திக்காக எடுக்கப்படுகின்ற அவ்வாறான நடவடிக்கைகள் நிருவாகத்தினால் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுமென நாம் மேலும் எதிர்பார்கின்றோம். உலகின் மிகவும் அமைதியான ஓர் இனம் என்ற அடிப்படையில் உறுதியாக சனநாயகத்தை நோக்கி அடியெடுத்து வைக்கின்ற இலங்கைக்கே உரிய அம்சங்களை உயர்ந்தமட்டத்தில் கொண்டு செல்வதன் மூலம் சர்வதேச சுற்றுலா நிலையமொன்றாக இந்த அழகான நாட்டை உலகில் பிரகாசிக்கச் செய்வதற்கு அரசாங்கத்தினால் உறுதியான மற்றும் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென எமது கைத்தொழில் எதிர்பார்க்கின்றது.

பாரிய கைத்தொழில் மற்றும் பொருளாதாரப் பின்னணி

2017 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் சிறியதொரு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதோடு, சுற்றுலாத்துறை நாட்டின் மூன்றாவது பெரிய வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தருகின்ற ஒரு துறையாக தனது இடத்தை பேணிவருகின்றது.அதே வேளை இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியின் உண்மை விருத்தி 2016 இல் 4.5% மட்டத்திலிருந்து 2017 இல் நூற்றுக்கு 3.1 வரை வீழ்ச்சி கண்டுள்ளது.

2017 இல் வருடாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 2,116,407 என்ற உயர் பெறுமதி அறிக்கையிடப்பட்டதோடு, வருடாந்தம் அவ்வதிகரிப்புப் பெறுமதி நூற்றுக்கு 3.2 என்ற சாதாரண அதிகரிப்பு பெறுமதியைக் கொண்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட விமான ஓடுபாதை திருத்தம் மற்றும் மேம்படுத்தல் பணிகள் காரணமாக சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் பகுதியளவில் மேற்கொள்ளப்பட்டமை காரணமாக விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டமை மற்றும் கால தாமதங்கள் சுற்றுலாத்துறையின் பாதகமான செயலாற்றுகை தொடர்பில் ஓரளவு தாக்கம் செலுத்தியுள்ளது.

இலங்கைக்கு ஆகக் கூடுதலான உல்லாசப் பயணிகள் வருகை தருகின்ற நாடொன்றாக இந்தியா தொடர்ந்தும் தனது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளதோடு, 2017 இல் இந்தியாவிலிருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 384,628 ஆகும். சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இரண்டாவது நாடாக சீனாவைக் குறிப்பிட முடியும். சீனா தனது இரண்டாமிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ள போதிலும் உல்லாசப் பயணிகளின் வருகையில் சிறியதொரு வீழ்ச்சி காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த நாடுகளில் ஐக்கிய இராச்சியம், ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் முறையே மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களை தமதாக்கிக் கொண்டுள்ளன. உல்லாசப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் வருகை தருகின்ற இந்த ஐந்து நாடுகளிலிருந்து 2017 இல் இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 51.2 வீதமாகும்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையில் எதிர்பார்க்கப்பட்ட விருத்தியை விட குறைவான விருத்தியொன்று அறிக்கையிடப்பட்ட போதும் 2017 இல் சுற்றுலாப் பயணிகளின் சாதாரண செலவிடல் தொகை மற்றும் நாட்டில் தங்கியிருந்த காலம் உயர்வடைந்தமை சுற்றுலாக் கைத்தொழிலின் வருமானத்தை திருப்திகரமான மட்டத்தில் பேண

“எமது வியாபாரத்தின் வெற்றி எமது பணியாட் குழுவினரின் வெற்றியோடு, தொடர்புற்றுக் காணப்படுகிறது. எம்மிடம் வருகின்ற சேவை பெறுகின்ற விருந்தினர்கள் எதிர்பார்க்கின்ற மட்டத்தை விடவும் கூடுதலான சேவைகளை வழங்குவதற்கு எப்போதும் அர்ப்பணிப்பு, தேர்ச்சி என்பவற்றைக் கொண்டுள்ள எமது விருந்தோம்பல் தொழிலில் ஈடுபட்டுள்ள குழுவினர் என்பது தொழிலின் உயர்தன்மை, சேவை மட்டம் ஊடாக தெளிவாகின்றது. எமது பணியாட் குழுவினர் உலக மட்டத்திலான ஒரு பணியாட் குழுவினர் என்பதோடு உலகின் சிறந்த பணியாட் குழுவினரோடு இலகுவாக போட்டியிடுவதற்கான சாத்தியவளங்களைக் கொண்டுள்ள மிகத் திறமையான ஒரு குழுவாகும். தமது வாழ்வின் அனைத்து முக்கியமான சந்தர்ப்பங்களிலும் மீண்டும் மீண்டும் எமது ஹோட்டலுக்கு வருகை தருவதற்கு எமது விருந்தினர்களை ஊக்கப்படுத்துகின்ற அளப்பரிய சேவைகள் ஹில்டன் எமது அடையாளமாகும்”

வழிவகுத்தது.. 2017 இல் சுற்றுலாத் துறையின் வருமானம் நூற்றுக்கு 11.6 அதிகரிப்பைக் கொண்டுள்ளதோடு, அது 3,925 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.. 2016 இல் இந்தப் பெறுமதி 3,518 மில்லியன் அமெரிக்க டெரலர்களாக காணப்பட்டது.

திட்டமிடப்பட்ட மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள், மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல், மற்றும் விருத்தி செய்தல் என்பவற்றுக்கு தொடர்ச்சியாகச் செய்யப்பட்ட முதலீடுகளின் பயனாக சுற்றுலாக் கைத்தொழிலின் வருமானம் நிலையாக விருத்தியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை சுற்றுலாத் துறையில் காணப்படுகின்ற சாதகத் தன்மையூடாக உயர் பயனை அடைந்து கொள்ளக் கூடியவாறு சுற்றுலா நோக்கை 2025 இல் அடைந்து கொள்வதற்கான வசதிகளைச் செய்வதற்காகவும், ஐக்கிய நாடுகளின் சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உதவுவதற்காகவும் தயாரிக்கப்பட்ட புதிய சுற்றுலா மூலோபாயத் திட்டம் 2017-2020 போன்ற கொள்கை திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் பல 2017 இல் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைய 2020 இல் சுற்றுலாத் துறையின் வருமானம் 7 பில்லியன் ஐ.அ.டொலர்கள் வரை அதிகரிக்குமெனவும், அக்கைத்தொழில் சார்ந்த 600,000 தொழில் வாய்ப்புக்கள் கிடைக்குமெனவும், சுற்றுலாப் பயணிகளின் அன்றாடச் செலவு 210 ஐ.அ.டொலர் வரை அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் பொருளாதரத்தில் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டுச் செலவாணியை உழைக்கின்ற ஒரு துறையாக சுற்றுலாக் கைத்தொழில் துறை தொடர்ந்தும் காணப்படுகின்ற போதிலும், இலங்கை தனது சாத்திய வளங்களை உலக சந்தையில் உயர்ந்த மட்டத்திட் இன்னும் பயன்படுத்தவில்லை, உலகளாவிய அடிப்படையில் சுற்றுலாக் கைத்தொழிலில் மற்றும் விருந்தோம்பல் துறை சர்வதேச பொருளாதரத்தில் அனைத்து மட்டங்களிலும் மிளிரக்கூடிய பொருளாதாரச் செயற்பாடுகள் பல தொடர்பாக உருவாக்கப்பட்டுவருவதோடு, 1.4 ரில்லியன் ஐ.அ.டொலருக்கு மேற்பட்ட வருமானத்தை உழைத்து 2017 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதியில் நூற்றுக்கு 7 வீதம் மற்றும் உலக உற்பத்தியில் நூற்றுக்கு 10 வீதத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது உலகில் அதிகமான நாடுகளில் சுற்றுலாக் கைத்தொழிலில் உறுதியான விருத்தியொன்று காணப்பட்டமை, கடந்த வருடத்தில் பின்னடைந்திருந்த நாடுகள் உறுதியான அடிப்படையில் நல்ல நிலைக்கு மாறியமை என்பன மீளாய்வு வருடத்தில் குறிப்பிடத்தக்க அம்சங்களாகக் காணப்பட்டன. உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட துரித விருத்தி போன்றே பல வருடங்களாக பின்னடைந்திருந்த பிரேசில் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் சுற்றுலாப் பயணிகளின் செலவிடலை விசேடமாகக் கொண்டு பாரம்பரிய மற்றும் புதிதாக இணைந்து கொண்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்ற நாடுகளிலிருந்து முன்வைக்கப்பட்டுள்ள கேள்வி பலமடங்கு அதிகரித்தமை அதற்குக் காரணமாகும்.

இந்த சாதகமான நிலைமை எதிர்கால எதிர்பார்ப்புக்கள் இலங்கையில் சுற்றுலா கைத்தொழிலின் எதிர்காலத்திற்கு மிக சாதகமான அடிப்படையில் தாக்கம் செலுத்தும். இலங்கையின் சுற்றுலா துறை அபிவிருத்தி அதிகார சபையினால் சுற்றுலா துறையின் உறுதியான முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகளை நான் மிகவும் பாராட்டுகின்றேன். உலக ஹில்டன் வரத்தக நாமத்தின் தரத்திற்கு அமைய மேற்கொள்ளப்படுகின்ற மறுசீரமைப்பு அலுவல்கள் மற்றும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட புதிய உற்பத்திகளோடு ஹில்டன் கொழும்பு ஹோட்டல் இலங்கையின் ஹோட்டல் துறையில் சிறந்ததொரு ஹோட்டலாக அமையும். அதன் மறுசீரமைப்பு பணிகளின் முதலாவது கட்டத்தை நிறைவுசெய்வதன் மூலம் ஏற்கனவே எமது பரிபூரணமான சேவைக் கட்டமைப்பை உறுதி செய்துள்ளதோடு, தனது விசுவாசமிக்க வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த மகிழ்வை வழங்கி நாம் வழங்கிய உறுதியை எமது கம்பனி நிறைவேற்றியுள்ளது.

இந்தப் புனரமைப்பு பணிகளின் இறுதிக் கட்டம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, ஹோட்டலின் தோற்றத்தை அழகுபடுத்தும் பொருட்டு அதன் அறைகள் முழுமையாக மறுசீரமைப்புக்குட்படுத்தல் மற்றும் புதிய சுவைமிகு உணவுகளையும் குடிபானங்களையும் அறிமுகம் செய்வதன் மூலம் அதன் இலாபம் அதிகரிக்கும் இந்த மூலோபாய முதலீட்டின்

தலைவரின் ஆசிச் செய்தி

மூலம் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் இலங்கையின் சிறந்த ஹோட்டல்களில் உறுதியான தெரிவொன்றாக அமையுமெனவும், ஹோட்டல் கைத்தொழில் தொடர்பான நோக்கை அடைந்து கொள்வதற்கு பங்களிக்கும் எனவும் நான் நம்புகின்றேன்.

ஹோட்டல் கைத்தொழிலினுள் விரைவாக அதிகரித்துவரும் போட்டித் தன்மை தொடர்பாக நாம் சிறந்த புரிந்துணர்வோடு இருப்பதோடு ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் அமைவிடம் வழங்கப்படுகின்ற சேவைகளின் உயர்தரம் மற்றும் நம்பிக்கை அறைகளின் காணப்படும் வசதிகளின் தரம், உணவு மற்றும் குடிபானங்களின் பல்வகைத் தன்மை நற்பெயர் மற்றும் எமது அறைவசதிகளை ஒதுக்கும் போது நூற்றுக்கு ஐம்பது வீதம் வரையான பங்களிப்பை வழங்குகின்ற ஹில்டன் ஹொனஸ்ட் லோயல்டி நிகழ்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு பிரிவுகளில் எமது ஹோட்டல் உறுதியாக போட்டிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றதென நாம் நம்புகின்றோம். ஹில்டன் கொழும்பு ஹோட்டல் கடந்த மூன்று தசாப்த காலமாக தனது விசேடமான சேவைகளின் தரத்தை பேணிக் கொண்டு வருவதோடு எழுகின்ற பிரச்சினைகளுக்கு மற்றும் முறையாக வியாபிக்கின்ற நுகர்வாளர்களின் எதிர்பார்ப்புக்களுக்கமைய தொடர்ச்சியாக அதற்கு ஏற்றவாறு செயற்படுகின்றமை தொடர்பில் மிகவும் பெருமை கொள்கின்றது.

எமது வெற்றியின் பலமான தூண்கள்

எமது வியாபாரத்தின் வெற்றி எமது பணியாட் குழுவினரின் வெற்றியோடு, தொடர்புற்று காணப்படுகிறது. எம்மிடம் வருகின்ற சேவை பெறுகின்ற விருந்தினர்கள் எதிர்பார்க்கின்ற மட்டத்தை விடவும் கூடுதலான சேவைகளை வழங்குவதற்கு எப்போதும் அர்ப்பணிப்பு, தேர்ச்சி என்பவற்றைக் கொண்டுள்ள எமது விருந்தோம்பல் தொழிலில் ஈடுபட்டுள்ள குழுவினர் என்பது தொழிலின் உயர்தன்மை, சேவை மட்டம் ஊடாக தெளிவாகின்றது. எமது பணியாட் குழுவினர் உலக மட்டத்திலான ஒரு பணியாட் குழுவினர் என்பதோடு உலகின் சிறந்த பணியாட் குழுவினரோடு இலகுவாக போட்டியிடுவதற்கான சாத்தியவளங்களை கொண்டுள்ள மிகத் திறமையான ஒரு குழுவாகும். தமது வாழ்வின் அனைத்து முக்கியமான சந்தர்ப்பங்களிலும் மீண்டும் மீண்டும் எமது ஹோட்டலுக்கு வருகை தருவதற்கு எமது விருந்தினர்களை ஊக்கப்படுத்துகின்ற அளப்பரிய சேவைகள் எமது அடையாளமாகும். ஹில்டன் ஹோட்டலிலிருந்து வெளியேறிச் செல்கின்ற ஊழியர்கள் அவர்களுக்கு ஹில்டன் ஹோட்டலில் வழங்கப்படுகின்ற உயர்மட்ட பயிற்சி, அபிமானம் மற்றும் உயர் வரவேற்பு என்பன அசாதாரணமென தெரிவித்து மீண்டும் ஹோட்டலின் சேவைக்கு இணைந்து கொள்கின்றனர். கட்டமைக்கப்பட்ட திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக உறுதியான தொழில் முன்னேற்றத்திற்கு அழப்பரிய வாய்ப்புகளை ஹில்டன் ஹோட்டல் வர்த்தகக்குறியின் கீழ் பணியாட் குழுவினருக்கு செய்துகொடுக்கப்படுகின்றன.

கடந்த 30 வருடகாலமாக எம்மோடு ஒன்றிணைந்து சேவையில் ஈடுபட்டுள்ள சகதோர பணியாளர்களுக்கு ஹில்டன் கொழுப்பு ஹோட்டல் தமது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றது. அதிசிறந்த சேவைகளை எப்போதும் வழங்கும் எமது பொறுப்பை ஆற்றுவதற்கு எமக்கு உதவியாக அமைவது எமது பணியாட்குழுவினரின் விசுவாசமாகும்.

புனரமைப்புச் செயற்பாடுகளின் இடையே கூட அந்த சிரமங்களைக் கருத்திற் கொள்ளாது ஹோட்டலின் சேவையை எதிர்பார்த்து இங்கு வருகின்ற எமது ஹில்டன் ஹோனஸ்ட் லோயல்டி அங்கத்துவம் வகிக்கின்ற விருந்தினர்கள் இங்கு விசேடமாக பாராட்டப்படல் வேண்டும். ஹில்டன் ஹொனஸ்ட் என்பது உலகம் பூராகவும் அமையப்பெற்றுள்ள ஹோட்டல்களை தங்குகின்ற ஒவ்வொரு சந்தர்பங்களுக்காவும் விருந்தினர்களுக்கு விசேட புள்ளிகளை வழங்குவதன் மூலம் குறிப்பிடத்தக அடிப்படையில் வியாபார வாயப்புக்களை மீள ஏற்படுத்திக் கொள்வதற்கான வாயப்புக்களை செய்துகொள்வதற்காக தயாரிக்கப்பட்ட விசேட மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமாகும். எமது அறைகளை ஒதுக்கிக் கொள்வோர்களில் அதிகமானோர் இந்த ஹில்டன் ஹோனஸ்ட் லோயல்டி அங்கத்தவர்கள் தொடர்பு கொள்வதோடு வருடத்தினுள் குறிப்பிடத்தக்க வருமானமொன்றை உழைத்துக்கொள்வதற்கும் அந்த நிகழ்ச்சித் திட்டம் பங்களிப்புச் செய்துள்ளது.

மேலும் மக்கள் வாழ்க்கையின் தரத்தை விருத்தி செய்வதற்காக சமூக நலனோம்பல் நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றை நடைமுறைபடுத்துவதனூடாக எமது ஹோட்டல் தேசிய பிரஜைகளின் நலனோம்பலுக்கு தொடராக முதலீடு செய்கின்றது. எமது வர்த்தக நடவடிக்கைகளில் தொடர்புருகின்ற பிரசைகளுக்கு சிறந்த பொருளாதார மற்றும் சமூகத் தாக்கமொன்றை ஏற்படுத்துவதற்காக நாம் அர்ப்பணிப்போடு செயற்படுகின்றோம். சுயமாக முன்வருதல் எமது பணியாட்குழு கலாச்சாரத்தின் விசேட குணாம்சம் என்பதோடு இலட்சியப் பிரசைகளாக அந்த பண்பு எமது ஊழியர்களிடத்தில் வெளிப்படுவதற்கு செயற்பட்டமை தொடர்பில் நாம் பெருமையடைகின்றோம்.

சூழல் பொறுப்பென்பது மூன்று தசாப்த கால எமது நீண்ட பயனத்தில் விசேட அவதானத்துக்குட்படுத்தப்பட்ட ஒரு விடயமென்பதோடு எமது செயற்பாடுகளினுள் மின்வலு வினைத்திறன் மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவம் என்பன எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையர்களின் நளனுக்காக இப்புவியை மிகவும் பாதுகாப்பாகவும் சுத்தமாகவும் உறுதியான ஓர் இடமாகவும் மாற்றுவதற்காக நாம் மிகுந்த கவனத்தோடு செயற்படுகின்றோம்.

ஹில்டன் ஹோட்டலின் கீழ் வழங்கப்படுகின்ற சேவைகள், தங்குமிட வசதிகள், சுவைமிகு உணவுகள் குடிபானங்கள், உயர்வாடிக்கையாளர் சேவை மற்றும் எம்மிடம் வருகின்ற நேரம் தொடக்கம் வீட்டிலிருப்பது போன்ற உணர்வை எமது விருந்தினர்களிடத்தில் ஏற்படுத்துகின்றவாறு மிக உற்சாகத்தோடும் கணிவோடும் எமது விருந்தோம்பலை அனுபவிக்க எதிர்பார்க்கின்றமைக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எமது சேவைப் பெறுனர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்களின் ஒத்துழைப்பு மற்றும் அனுசரனை என்பவற்றுக்காக அவர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி நவிலல்

30 வருட கால நீண்ட எமது பயணத்தை வெற்றிகொள்ள முடிந்தது, எமது அனைத்து பங்குதாரத் தரப்புக்களின் பாரிய பங்களிப்பின் காரணத்தினாலேயாகும். எமது விருந்தினர்கள், பங்குதாரர்கள், வழங்குனர்கள், பங்குடமையாளர்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகாரிகளினால் ஹில்டன் வியாபாரக் குறி தொடர்பில் விசுவாசத்தோடு செயற்பட்டதோடு கடந்த பல வருட காலங்களினுள் எமக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல் தொடர்பாக அவர்களுக்கு எமது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம். பணிப்பாளர் சபையின் எமது சகோதர அங்கத்தவர்கள் போன்றே சிரேட்ட முகாமைத்துவ மற்றும் பணியாட் குழுவினர் எமது பாரிய வெற்றிக்கு பங்களிப்புச் செய்த பலமிக்க தூண்களாகும். எமது வியாபாரக் குறி மற்றும் அதனோடு தொடர்புடைய விசேடத்துவம் ஆகியவற்றை எப்போதும் ஒரே விதத்தில் பேணிச் செல்வதற்கு ஏற்ற விதத்தில் தமது கடமைகளுக்கு அப்பால் சென்று தமது சேவைக்காக அர்ப்பணிப்புச் செய்கின்ற, ஆற்றலுக்கு, திறமைக்கு உரிய இடத்தை வழங்கி சிறியதோர் விடயமொன்று தொடர்பாகவும் கூடுதல் அவதானம் செலுத்தி செயற்படுகின்ற பொது முகாமையாளரின் தலைமைத்துவத்தின் ஊடாக எமது சேவையின் தரத்தை மாறாது பேணிக் கொள்ள எமது பணியாட் குழுவினருக்கு முடிந்துள்ளது. எமது வழிநடாத்தல் செயற்பாடுகளின் இதயமான பணியாட் குழுவினர் ஒன்றாகச் செயற்பட்டு ஹில்டன் கொழும்பு ஹோட்டலை அனைத்து இலங்கை மக்களதும் உள்ளத்தை கொள்ளை கொண்ட விருந்தோம்பல் சேவை வியாபாரப் பெயராகவும், பரிபூரணத்துவம்,உற்சாகம்,நற்புறவு மிக்க தங்குமிடமாகவும் அவர்களின் உள்ளங்களின் குடிகொண்டுள்ளது.



கிரி'ாந்த பிரசாத் குரே
தலைவர்

தகுதிவாய்ந்த அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபை



இடமிருந்து வலமாக

திரு. பிரவீர் சமரசிங்ஹ, திரு. தனுக ரன்ஜித் சமரசிங்ஹ, செல்வி. சொனாலி லியனமான்ன, திரு. திணுக் கொலம்பகே, திரு. ஷெஸ்மின் மன்சூர், செல்வி. தீசனா அமரசேகர



இடமிருந்து வலமாக

செல்வி. தெஹ்ரானி மெதிவ்ஸ், திரு. ஜே. எம்.யூ.பி. ஜெயமக, திரு. கிரிஷாந்த பிரசாத் குரே, திரு.சீ. ராமசந்திர, திரு. அத்துல சேனாநாயக்க

தகுதிவாய்ந்த அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபை

கிரிஸாந்த பிரசாத் குரே
தலைவர்

அரசியல் விஞ்ஞானம் மற்றும் சட்டம் தொடர்பான. பட்டதாரியான திரு பிரசாத் குரே அவர்கள் கூட்டுத்தாபன பிரிவில் பல ஆண்டுகள் அனுபவம் நிறைந்த சிரேட்ட தொழில் வல்லுநராவார். மிடில்செக்ஸ் பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் மற்றும் சட்டம் தொடர்பான (கௌரவப்) பட்டத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் திரு. கிரிஷாந்த குரே வியாபார அபிவிருத்தி பிரதானியாக ரிச்சட் பீரிஸ் கம்பனியில் இணைந்து கொண்டார். பொது பட்டியலிடப்பட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான முழுமையான சுதந்திர வெளியீட்டு நிறுவனமொன்றை உருவாக்குவதற்குச் செயற்பட்ட அவர். செலிங்கோ குழுமம், ரிச்சட் பீரிஸ் குழுமம் மற்றும் மகாராஜா குழுமம் போன்ற முதன்மையான கம்பனிகள் பலவற்றில் நிறைவேற்றுத் தர பதவிகளை வகித்துள்ளார். ரிச்சட் பீரிஸ் கம்பனியின் ஆரம்ப பணிப்பாளர் மற்றும் தலைமை நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவராக பணியாற்றும் காலப்பகுதியில் திரு. கிரிசாந்த அவர்கள் ரிவிர மீடியா கோப்பரேசன் (தனியார் கம்பனியை ஆரம்பித்தல் தொடர்பாக முன்னின்று செயற்பட்டார்) திரு கிரிஷாந்த அவர்களின் வழிகாட்டலின் கீழ் வெளியிடப்பட்ட ரிவிர மற்றும் நேசன் தேசிய பத்திரிகைகள் சுதந்திரமான மற்றும் அனைவரும் வாசிக்கின்ற ஓர் பத்திரிகையாக மிகக் குறுகிய காலப்பகுதியல் பிரபல்யம் அடைந்தன. மகாராஜா குழுமத்தின் ஆலோசகராக மேற்படி கம்பனியின் தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளை காலப்பகுதியில் செய்தி ஒலி / ஒளிபரப்பை சீராக்கல் செய்வதற்கும், அந்த ஒலி / ஒளிபரப்புக்களுக்கிடையில் ஒருங்கிணைந்த நிருவாக இணைப்பை உறுதி செய்வதற்கும் செயற்பட்டார். பொதுமக்களின் நலனுக்காக பரந்து விரிந்த தலைப்புக்கள் பலவற்றில் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் இரண்டிலும் தேசிய பத்திரிகைகளுக்கு அடிக்கடி ஆக்கங்களை எழுதுகின்ற திரு. நிஷாந்த குரே அவர்கள் தற்போது டீஎப்சீசீ (DFCC) வங்கியின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் மற்றும் லேக்ஹவுஸ் என எல்லோராலும் அழைக்கப்படுகின்ற இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரகை கம்பனியின் தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளராகவும் செயற்பட்டுவருகின்றார்.

செல்வி தீசனா அமரசேகர
பணிப்பாளர்

செல்வி தீசனா அமரசேகர விருது பெற்ற பூட்டிக் ஹோட்டலான தேவா ரெஸிடென்ஸி ஹோட்டல் மற்றும் விருது பெற்ற உணவகமான கண்டியில் அமையப்பெற்றுள்ள தேவா குசின் உணவகத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக செயற்படுகின்றார். உலக ஆடம்பர ஹோட்டலுக்கான 2017 ஆம் ஆண்டின் விருதை வெற்றி கொண்ட தேவா ரெஸிடென்ஸி ஹோட்டல் கடந்த எட்டு வருட காலமாக தொடர்ச்சியாக சுற்றுலா மதியுரை சேவை சிறப்பு விருதை வெற்றிகொண்டள்ளதோடு, தேவா குசின் உணவகம் உலக ஆடம்பர ஹோட்டல் 2017 இற்கான விருதையும் வெற்றிகொண்டு கடந்த 02 வருட காலமாக தொடர்ச்சியாக சுற்றுலா மதியுரை சேவை சிறப்பு விருதையும் வெற்றி கொண்டுள்ளது. அமேரிக்க குடியரசின் வெசிங்டன் டீசி அமேரிக்க பல்கலைக்கழகத்தின் வியாபார முகாமைத்துவம், (சர்வதேச சந்தைப்படுத்தல் தொடர்பான நிபுணத்தும் கொண்ட) பல்கலைக்கழகத்தின் பட்டமொன்றை பெற்றுள்ள இவர் அமேரிக்க ஐக்கிய குடியரசின் ஹவாய் பல்கலைகழகத்தின் சுற்றுலாக் கைத்தொழில் முகாமைத்துவம் (ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான நிபுணத்துவத்துடன் கூடிய விஞ்ஞான பட்டப்படிப்பு) அமேரிக்க ஐக்கிய குடியரசின் ஹவாய் நகரில் கெபியோலாஹி கோலிஜியோ உணவகம், சுற்றுலா மற்றும் சுற்றுலா முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். கொழுப்பு டாருவிலா பார்க் ஸ்ரீட் ஹோட்டலின் வதிவிட முகாமையாளராகவும், ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் உணவு மற்றும் குடிபானங்களுக்கான இணைப்பு மற்றும் மக்கள் தொடர்பாடல் நிறைவேற்று அலுவலராகவும் அவர் இதற்கு முன்னர் பணியாற்றியுள்ளார்.

திரு அத்துல சேனாநாயக்க
பணிப்பாளர்

அவுஸ்ரியாவின் சேல்ஸ்பேக் உலக புகழ்பெற்ற ஹோட்டல் முகாமைத்துவம் மற்றும் சுற்றுலா நிறுவனத்தின் தனது தொழிற் கல்வியை திறமை சித்தியோடு நிறைவு செய்துள்ள திரு அதுல சேனாநாயக்க அவர்கள் விருந்தோம்பல் தொழில்வல்லுநராவார்.

ஐக்கிய இராச்சியத்தின் ஹில்டன் இன்டார்நெசனல் நிறுவனத்தில் சேவைக்கு இணைந்து கொண்ட அவர் பாக் லேன் கென்ஸ்டிட்டன் மற்றும் ஸ்டெற்போர்ட்- ஓபோன் -ஏவோன் ஹோட்டல்களில் 05 வருடங்கள் பணியாற்றி சுவைமிகு உணவு மற்றும் குடிபானங்கள் கலை வழிநடாத்தல் வரை தொழில் உயர்வுபெற்ற ஒருவராவார். மீண்டும் இலங்கை நாட்டிற்கு திரும்பிய பின்னர் ஒபரோய் (இப்போது சினிமன் கிரான்ட்) ஹோட்டலின் உணவு மற்றும் குடிபான முகாமையாளராக சேவையில் இணைந்து கொண்ட திரு சேனாநாயக்க அவர்கள், 1987 ஆம் ஆண்டில் ஹில்டன் கொழுப்பு ஹோட்டலில் ஆரம்ப பணியாட் குழுவில் இணைந்து அதன் உணவு மற்றும் குடிபானம் வகைக்கு முகாமையாளராக நியமனம் செய்யப்பட்டார். ஹில்டன் ஹோட்டலின் ஆரம்ப கால மற்றும் பின்னரான ஒழுங்கமைப்பு பணிகளில் இணைந்து கொண்டு அவர் பணியாற்றியுள்ளதோடு ஹில்டன் ஹோட்டல் காலக்கிரமத்தில் கொழும்பின் தலைநகரின் முதன்மையான ஒரு ஹோட்டலாக மாற்றமடைந்தது.

சுவைமிகு உணவு பாணங்களை வழங்கும் விசேட உணவக வழிநடாத்தல், உணவு மற்றும் குடிபானங்களை வழங்குதல் மற்றும் சேவை பெறுனர்களின் தேவைப்பாடுகளுக்கு பொருத்தமானவாறு செய்து கொடுக்கப்படுகின்ற கேட்டரின் சேவைத் துறையின் நிபுணத்துவம் கொண்ட தொன் ஸ்டென்லிக்ஸ் குழுமத்தை சிறப்பாக ஆரம்பிப்தற்காக 1991 ஆம் ஆண்டின் திரு சேனாநாயக்க அவர்கள் ஹில்டன் ஹோட்டலின் பணியிலிருந்து நீங்கினார்.

இத்துறையில் 40 வருட கால நீண்ட சேவைக்காலத்தினுள் பெற்றுக்கொண்ட அனுபவமூடாக சர்வதேச ஹோட்டல் வழிநடாத்துனர்களோடு செயலாற்றுதல் தொடர்பான ஆழ்ந்த அறிவு மற்றும் உணவு குடிபானங்களை வழங்கும் சேவைப் பிரிவின் விசேடமான ஹோட்டல் வழிநடாத்தல் துறையின் அனைத்து துறைகள் தொடர்பாகவும் சிறந்த அறிவும் புரிந்துணர்வும் திரு சேனாநாயக்க அவர்களிடம் காணப்படுகின்றது.

திரு. ஜே.எம்.யூ.வீ ஜயமக
பணிப்பாளர்

பொதுத் திறைசேரியின் பொது வியாபாரத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகமான பணியாற்றுகின்ற திரு. ஜயமக அவர்கள் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, லங்கா புத்தர அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அடிப்படைக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஆவார். இலங்கை அரச கணக்காளர் சேவையின் ஓர் அலுவலரான அவர் நிதி மற்றும் கணக்கியல் துறையில் 25 வருடங்களுக்கு கிட்டிய அவரது சேவைக் காலத்தினுள் அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அரசின் முதன்மை நிறுவனங்கள் பலவற்றில் பணியாற்றியுள்ள ஒரு சிறந்த அலுவலராவார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி கல்வி தொடர்பான முதுநிலைப் பட்டதாரியான திரு ஜயமக அவர்கள் ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக்கழகத்தில் கணக்கியல் மற்றும் நிதிமுகாமைத்துவம் தொடர்பான பட்டபின் டிப்ளோமா படிப்பையும், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா பட்டத்தையும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அனுமதிச் சான்றிதழையும் பெற்றுள்ளார். இலங்கை ஒப்பந்த பணியகத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் ஆகவும் திரு ஜயமக அவர்கள் பணியாற்றியுள்ளார்.

செல்வி. சொனாலி லியனமான்ன
பணிப்பாளர்

தேசிய மற்றும் சர்வதேச கம்பனிகளில் பணியாற்றி 25 வருடங்களிற்கு மேற்பட்ட சேவை அனுபவத்தை பெற்றுள்ள செல்வி சொனாலி லியனமான்ன அவர்கள் சுற்றுலா மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலின் சிரேட்ட விசேட அலுவலர் ஒருவராவார். இலாப நட்டம், பணியாட் குழு முகாமைத்துவம், நட்ட முகாமை, விமான ஊக்குவிப்பு கலந்துரையாடல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி போன்றவற்றின் ஊடாக பணியாற் குழுவின் செயலாற்றுகையை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு செல்லல் உள்ளிட்ட நிறுவனத்தின் கொள்கைகள், மூலோபாயங்கள் பல அவரினால் நடைமுறைப்படுத்தப்பட்டள்ளன. உற்பத்தி அபிவிருத்தி, சர்வதேச சந்தைப்படுத்தல், குழுக்களின் பொழுதுபோக்கு, சுதந்திர ஓய்வுச் சுற்றுலா திட்டமிடல் தொடர்பான நிபுணத்துவம் கொண்டுள்ள செல்வி சொனாலி லியனமான தற்போது வேல்ட் லிங் கம்பனி குழுமத்தின் அங்கத்துவ கம்பனியொன்றான இனடர்நெசனல் டரவல் தனியார் கம்பனியின் பிரதம நிறைவேற்று அலுவலராகப் பணியாற்றுகின்றார். மேலும் இலங்கை இத்தாலி வர்த்தக சபையின் உப தலைவராகவும் அவர் செயற்பட்டுவருகின்றார்.

செல்வி தெஹ்ரானி மெதிவ்ஸ
பணிப்பாளர்

ஐக்கிய இராச்சியத்தின் நியுயோர்க் கொலம்பிய பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் தொடர்பான கலைப் பட்டதாரியான செல்வி தெஹ்ரானி மெதிவ்ஸ் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பிரயோக உளவியல் தொடர்பான முதுமானிப் பட்டதத்தை பெற்றுள்ளார். மொரட்டுவை எக்ஸ்போ 80 மன்றத்தின் (டிரோன் பிரணாந்து மன்றம்) பிரதான பொறுப்பாளரான இவர் விசன் பெகேஜின் தனியார் கம்பனி, வெக்சேல் லங்கா தனியார் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட எல்ஜேஎம் பீரிஸ் கம்பனி ஆகிய கம்பனிகளின் பணிப்பாளராகவும் உள்ளார். 1990 - 1993 வரையான காலப்பகுதியில் தகவல் மற்றும் தொடர்பாடல் அமைச்சின் மற்றும் 2001 - 2004 வரை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவராகவும் பணியாற்றியுள்ள டெகானி அவர்கள் 1996 - 2003 வரை பெண்கள் உதவி நிறுவனத்தின் தொண்டர் ஆலோசகராகவும் செயற்பட்டுள்ளார். இலங்கை அமேரிக்க அலுமினி அசோசியனின் அங்கத்தவரான இவர் இலங்கை மகளிர் கைத்தொழில் மற்றும் வணிக சபையின் அங்கத்தவராகவும் உள்ளார்.

தகுதிவாய்ந்த அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபை

திரு. செஸ்மின் மன்சூர்
பணிப்பாளர்

ஐக்கிய இராச்சியத்தின் எரிசோனா பிராந்திய பல்கலைக்கழகத்தின் விநியோக முகாமைத்துவத்தை பிரதான விடயமாக கற்று விஞ்ஞானப் பட்டமொன்றை பெற்றுக்கொண்டுள்ள திரு மன்சூர் அவர்களுக்கு பட்டப்படிப்பை தொடர்வதற்காக புலமை பரிசில் கிடைக்கப்பெற்றதோடு சிறப்பான கல்விப் பெறுபேறு தொடர்பாக வழங்கப்படுகின்ற கௌரவ பிரிவுத்தலைவர் பட்டியலில் அவரது பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கை ஆடைகள் மற்றும் ஆடைக் கைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் செயற்பட்டு பல கைத்தொழில்கள் தொடர்பில் 19 வருடங்களுக்கு மேற்படட அனுபவத்தைக் கொண்டுள்ள திரு மன்சூர் அவர்கள் அத்துறையின் அதிகாரம் பெற்ற வியாபாரக் குறிகள் பலவற்றை உருவாக்கி தைத்த ஆடைகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தார். ஐக்கிய இராச்சியத்தின் பல்வேறு கம்பனிகளில் விநியோகம் மற்றும் லொஜிச்டிக் பணிப்பாளராக பணியாற்றிய அவர் மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் துறையில் அவரின் சொந்த கம்பனியொன்றைத் தாபித்தார். இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சபைகளின் சங்கத்தின் அங்கத்தவரான திரு மன்சூர் அவர்கள் இலங்கை மாணிக்கக்கல் மற்றும் தங்கம் ஆபரணங்கள் சங்கத்தின் ஒரு அங்கத்தவரும் ஆவார்.

திரு. தினுக் கொலம்பகே
பணிப்பாளர்

அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்தில் கலை பட்டத்தை பெற்றுக்கொண்ட திரு கொலம்பகே அவர்கள் அந்தப் பட்டப்படிப்பின் பிரதான பாடமொன்றாக இருபதாம் நூற்றாண்டின் வரலாறு என்ற பாடத்தை தெரிவு செய்து பயின்றார். 2009 ஆம் ஆண்டில் தனது பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட பின்னர் இலங்கைக்கு மீண்டும் வருகை தந்த இவர் பிரித்தானிய உயர் ஸ்தாணிகராலயத்தில் சிறுது காலம் பணியாற்றி பின்னர் சன்டே லீடர் பத்திரிகைளின் பிரதி விளையாட்டுச் செய்தி ஆசிரியராக் சேவையாற்றினார் பிரதி விளையாட்டு செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய காலப்பகுதியின் போது பங்களாதேஷ், இலங்கை மற்றும் இந்திய ஆகிய நாடுகளால் ஒழுங்குசெய்யப்பட்ட 2011 கிரிகெட் உலகக் கிண்ண போட்டி தொடர்பான செய்திகளைச் சேகரித்து வெளியிடுவதற்கான சந்தரப்பம் அவருக்கு கிட்டியது. 2012 ஆம் ஆண்டில் சன்டே லீடர் பத்திரிகையின் விசேட நிகழ்வுகள் தொடர்பான செய்தி ஆசிரியராக நியமனம் பெற்ற அவர் அப்பதவியை வகித்துக்கொண்டிருந்த காலப்பகுதியில் ஐக்கிய இராச்சியத்தின் சனாதிபதித் தேர்தல் நடைபெற்ற 2013 காலப்பகுதியினுள் ஐக்கிய இராச்சியத்தின் செய்தி அறிக்கையிடல் சுற்றுலாவில் கலந்து கொள்வதற்காக சந்தர்ப்பம் கொழும்பில் அமையப்பெற்றுள்ள ஜக்கிய இராச்சிய தூதுவர் அலுவலகத்தின் அனுசரனையோடு கிடைத்தது. 2013 ஆம் ஆண்டில் அல் ஜஸீரா செய்தி சேவையில் இலங்கை ஊடகவியலாளராக திரு. கொலம்பகே அவர்கள் நியமனம் பெற்றதோடு, அல் ஜஸீரா செய்திச் சேவையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற போது 2013 ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்தப்பட்ட பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்களின் சந்திப்பில் செய்தி சேகரிப்பு அலுவல்கள் உள்ளிட்ட விசேட சந்தர்ப்பங்கள் பலவற்றில் செய்தி சேகரிப்பதற்கான சந்தர்ப்பம் அவருக்கு கிட்டியது. வரையறுக்கப்பட்ட லிட்றோ கேஸ் லங்கா லிமிடட் குழுமத்தின் தொழிற்படு பணிப்பாளராகவும் திரு கொலம்பகே அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.

திரு. பிரவீர் சமரசிங்க
பணிப்பாளர்

கொழும்பு உலக வர்த்தக நிலையம் மற்றும் ஹெவலொக் சிற்றி போன்றவற்றை நிருமாணித்த முதன்மை ஆதன விருத்திக் கம்பனியான ஓவர்சீஸ் ரியலிடி (இலங்கை பிஎல்சீ கம்பனியின் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலராக திரு. பிரவீர் சமரசிங்க அவர்கள் சேவையாற்றுகின்றார்.

30 வருட கால தொழில் துறை மற்றும் வணிக அலுவல்கள் தொடர்பான அனுபவம் கொண்டுள்ள அவர் பொது பட்டியல்படுத்தப்பட்ட மற்றும் பட்டியல்படுத்தப்படாத பல கம்பனியின் பணிப்பாளர் சபையில் பணியாற்றுகின்றார்.

இலங்கை வர்த்தக சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவரான அவர் இலங்கை ஊழியர் சங்கத்தின் உப தலைவராகவும் பணியாற்றுகின்றார். இலங்கை தொடர்மாடிவீடுகள் அபிவிருத்தியாளர்கள் சங்கத்தின், இலங்கை பணிப்பாளர்களின் நிறுவனத்தில், இலங்கை கைத்தொழிலாளர்களின் சங்கத்தின் முன்னாள் தலைவரான அவர் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் இலங்கை பிரிவின் முன்னாள் தலைவரும் சர்வதேச பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் முன்னாள் முகாமைத்துவ ஆலோசனை சபை அங்கத்தவரும் ஆவார்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவரான திரு. சமரசிங்க அவர்கள் வர்த்தக நிருவாகம் தொடர்பான முதுமானி பட்டதாரியும் ஆவார்.

திரு. சீ. ராமசந்திர
தகுதிவாய்ந்த அதிகாரி

ஆசியா எசெட் பினான்ஸ் பிஎல்சீ நிறுவனத்தின் தலைவராகவும், யூபி பினான்ஸ் கம்பனியின் சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளராகவும் செயற்படுகின்ற திரு. சீ. ராமசந்திர அவர்கள் கணக்காய்வு, தேயிலை ஏற்றுமதி, நிதிச் சேவை மற்றும் பொதியிடல் துறைகளில் 40 வருடத்திற்கு மேற்பட்ட சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் ஒரு அங்கத்தவராவார். திரு. சீ. ராமசந்திர அவர்கள் 1975 - 1978 இடைப்பட்ட காலப்பகுதியினுள் ஹுலுக்கல்ல சமரசிங்க கம்பனியின் பங்குதாரராக சேவையாற்றிய பின்னர். 1978 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட லிப்டன் சிலோன் கம்பனிக்கு இணைந்து லிப்டன் யூகே ஐக்கிய இராச்சியத்தின் தலைமை அலுவலகத்தின் 06 மாதங்கள் வரை பணியாற்றி பிரதம கணக்காளர் / கம்பனி செயலாளர் பதவிகளை வகித்துக்கொண்டிருந்த போது 1992 ஆம் ஆண்டில் லிப்டன் கம்பனியிலிருந்து விலகி பின்னர் இலங்கை கொமார்ச்சல் வங்கியின் நிதியியல் முகாமைத்துவ கம்பனியின் பொது முகாமையாளராகவும் வரையறுக்கப்பட்ட வர்ணா கம்பனியின் நிதி முகாமையாளர் / கம்பனி செயலாளராகவும், யுனிவேர்க்கஸ் குழுமத்தின் பிரதம நிதி அலுவலராகவும் பணியாற்றினார். 2005 – 2015 இடைப்பட்ட காலத்தினுள் வரையறுக்கப்பட்ட யுனிவேர்க்கஸ் பெகேஜிங் கம்பனியின் நிறைவேற்று பணிப்பாளராகவும் அவர் செயற்பட்டார். வரையறுக்கப்பட்ட சதோச கம்பனியின் நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளராகவும், வரையறுக்கப்பட்ட கெபிடல் ரீச் ஹோல்டிங் கம்பனியின் வரையறுக்கப்பட்ட கெபிடல் ரீச் கிரடிட் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட கெபிடல் ரீச் லீசிங் கம்பனி தற்போது (சொப்ட் லொஜிக் பினான்ஸ்) சுயாதீன பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. தனுக சமரசிங்க
பணிப்பாளர்

தனது கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்த பின்னர் அவுஸ்திரேலியாவிலிருந்து தாய் நாட்டுக்கு திரும்பி திரு. தனுக சமரசிங்க அவர்கள் குடும்பத்தின் பெருந்தோட்ட மற்றும் இறப்பர் உற்பத்தி வியாபார அலுவல்களில் ஈடுபட்டார். அவரால் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ரீஏடி (TAD) ஹோல்டிங்க்ஸ் தனியார் கம்பனியின் தலைவராகவும் அக்கம்பனி இலங்கையில் வேகமாக விருத்தியடைகின்ற ஒன்றிணைந்த கம்பனியொன்றாகவும் மாற்றம் பெருவதற்கு முன்னின்று செயற்பட்டார்

ரீஏடி ஹோல்டிங்க்ஸ் கம்பனி தற்போது மின்வலு. பெருந்தோட்டம், ஆதனங்கள். விருந்தோம்பல் மற்றும் வியாபார பொருட்கள் இடைத்தரகுச் சேவை போன்ற துறைகளில் தனது வியாபார அலுவல்களை மேற்கொண்டு வருகின்றது.

ரீஏடி பவர் நிறுவனம் தற்போது இலங்கையில் நீர் மின்சார உற்பத்தியில் 21 மெகாவேட் அளவுக்கு உரித்துக் கொண்டுள்ளதோடு, தேயிலை மற்றும் கறுவா தோட்ட உரிமை மற்றும் நிருவாகப் பெருந்தோட்டக் கம்பனியான வரையறுக்கப்பட்ட ரீஏடி பிளான்டேசன் (தனியார்) கம்பனி 4000 ஏக்கருக்கு அதிகமான தோட்டக் காணிகளுக்கு உரித்துக் கொண்டுள்ளது. அக்கம்பனி வசம் ஒரு தேயிலைத் தொழிற்சாலையும் உள்ளது.

இலங்கையின் முன்னணி தேயிலை மற்றும் வியாபாரப் பொருட்கள் இடைத்தரகர்கள் மூன்றில் ஒன்றான மேர்கண்டயில் பிரடியுஸ் புரோக்கர் கம்பனியின் தலைவரான திரு. சமரசிங்க அவர்கள் வேறு பல நிறுவனங்களிலும் பணிப்பாளர் சபையில் அங்கத்தவராக உள்ளார்.

முகாமைத்துவக் குழு



இடமிருந்து வலமாக

திரு. வீ. கனகசபாபதி, திரு. ஷமஹில் மொஹிதீன், திரு. சுதர்சன் ஸ்ரீ ராயன், திரு. ஜுட் விக்கிரமரத்ன

திரு. வீ.கனகசபாபதி

MPA (HARVARD) , CPFA (LONDON) FCA, FPFA, FCMA, FMAAT

பணிப்பாளர் சபை - ஆலோசகர்

பொதுத் திறைசேரியின் அரச தொழிலமுயற்சிகள் திணைக்களத்தின் இளைப்பாரிய பணிப்பாளர் நாயகமான திரு. வீ.கனகசபாபதி அவர்கள், தற்போது இலங்கை நிதி ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகவும், இலங்கை பட்டயக் கணக்காளர் சங்கத்தின் அரச பிரிவுக் கிளையான அரச நிதிக்கணக்காளர் சபைத்தலைவராகவும், அரச பிரிவு கணக்காளர் தரக் குழுவின் தலைவராகவும், கணக்காளர்களின் தெற்காசிய பெடரேசனின் அரச மற்றும் பொதுத்துறை தொழிலாளர் கணக்கியல் குழுவின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார். அரச துறையில் 40 வருடங்களுக்கு மேற்பட்ட சேவை காலத்தை பூரணப்படுத்தியுள்ள திரு.வீ.கனகசபாபதி அவர்கள் நிதி திட்டமிடல் அமைச்சின் நிதி முகாமைத்துவ மறுசீரமைப்பு ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். ஹவார்ட் பல்கலைக்கழகத்தின் பொது நிருவாகத்துறை முதமானிப் பட்டமொன்றைப் பெற்றுள்ள இவர் லண்டன் பட்டய அரச நிதிக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினருமாவார். திரு. வீ.கனகசபாபதி அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தில், இலங்கை அரச நிதி கணக்காளர்களின் சங்கத்தில், இலங்கை அங்கீகாரம் பெற்ற முகாமையாளர்கள் சங்கத்தின்.இலங்கை கணக்காளர் தொழில்நுட்பவியலாளர்களின் சங்கத்தின் ஓர் அங்கத்தவருமாவார்.

இலங்கை அரச நிதி மற்றும் அபிவிருத்தி கணக்காளர் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான திரு.வீ.கனகசபாபதி அவர்கள் நிதி திட்டமிடல் அமைச்சின் நிதி முகாமைத்துவ ஆலோசகராகவும், நிதிக் கல்வி நிறுவனத்தின் சிரேஸ்ட நிதி ஆலோசகராகவும் இருந்துள்ளார் . இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபையில் பணியாற்றிய திரு. கனகசபாபதி அவர்கள் மக்கள் வங்கி, இலங்கை மேர்ச்சட் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி போன்ற அரச பிரிவின் பல நிறுவனங்களின் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். அசோசியேடட் நியுஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிடட்டில் பணிப்பாளர்/ நிதி ஆலோசகராகவும் அவர் செயற்பட்டுள்ளார்.

திரு. ஷமஹில் மொஹிதீன்

ACMA - UK

பிரதம வழிநடாத்தல் அலுவலர்

திரு ஷமஹில் மொஹிதீன் அவர்கள் 2013 ஆம் ஆண்டு முதல் பிரதம வழிநடாத்தல் அலுவலராக சேவையாற்றி வருவதோடு, பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் சங்கத்தில் ஓர் அங்கத்தவராவார். தேசிய மற்றும் சர்வதேச முதன்மை நிறுவனங்கள் பலவற்றில் சிரேட்ட முகாமையாளராக பதவிவகித்து 20 வருடங்களுக்கு மேற்பட்ட சேவை காலமொன்றை இலர் நிறைவு செய்துள்ளார். ஹோட்டல் டிவலபர்ஸ் லங்கா பீஎல்சீ கம்பனிக்கு இணைவதற்கு முன்னர் ஏயிட்கன் ஸ்பென்ஸ் கம்பனிக்குரிய எயிட்கள் ஸ்பென்ஸ் பவர் கம்பனியின் பணிப்பாளர் / உப தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. சுதர்சன் ஸ்ரீ ராயன்

MBA, B.SC (HONS), FCCA, ACMA

பிரதம நிதி அலுவலர்

கொழும்பு பல்கலைக்கழகத்தில் வியாபார நிருவாகப் முதுமானிப்பட்டம் மற்றும் பேராதனிய பல்கலைக்கழகத்தில் பௌதீக விஞ்ஞான (கௌரவப்) பட்டம் என்பவற்றைப் பெற்றுக்கொண்டுள்ள திரு சுதர்சன் ஸ்ரீ ராயன் அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவர் போன்றே ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவனத்தின் அங்கத்தவருமாவார். 1987 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் தொடக்கம் அவர் எமது கம்பனியில் பணியாற்றிவருகின்றார்.

திரு. ஜுட் விக்கிரமரத்ன

ACMA - UK

கணக்காளர்.

ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவரான திரு. ஜுட் விக்கிரமரத்ன அவர்கள் தற்போது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப் பின் படிப்பு முகாமைத்துவ நிறுவனத்தில் முதுநிலை வியாபார நிருவாக பட்டப்படிப்பை பயின்று வருகின்றார். 2012 ஆம் ஆண்டில் எமது கம்பனியில் இணைந்து கொண்ட திரு. ஜுட் விக்கிரமரத்ன அவர்கள் கணக்காளர் துறையில் 09 வருட கால சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

முகாமைத்துவ மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு

“மீளாய்வு வருடத்தினுள் வருமானம் முன்னைய வருடத்தோடு ஒப்பீட்டளவில் 20மூ அதிகரித்து 3.02 பில்லியன் ரூபாவாக காணப்பட்டதோடு, 2016 ஆம் ஆண்டில் 1.2 மில்லியன் ரூபா அறை வாடகை வருமானம் 2017 ஆம் ஆண்டில் 1.32 பில்லியன் வரை அதிகரித்ததோடு, ஹோட்டலின் உணவு மற்றும் குடிபானங்களை வழங்கியதன் மூலம் பெற்றுக்கொண்ட 1.33 பில்லியன் ரூபா வருமானம் 1.64 பில்லியன் ரூபா வரை அதிகரித்தது.”



எம்மைப் பற்றி

ஹோட்டல் டிவலபோர்ஸ் (லங்கா) பீஎல்சீ கம்பனி (இவ் அறிக்கையில் இதன் பின்னர் கம்பனி என குறிப்பிடப்படும்) இலங்கையில் விருந்தோம்பல் சேவை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் உரிமைத்துவம் வகிக்கின்ற மற்றும் வழிநடாத்தல் அலுவல்களை ஆற்றுகின்ற எமது கம்பனி 1983 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் எமது வர்த்தக அணுகுமுறை.

மீளாய்வு வருடத்தினுள் கம்பனியின் நோக்கம், பணிக்கூற்று பலம், பலவீனம் மற்றும் வழிநடாத்தல் சூழலினுள் எழக்கூடிய சந்தர்ப்பங்கள் மற்றும் தடைகளுக்கு இசைவாக பல்வகையான முதன்மை மூலோபாய விதிமுறைகள் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டன. மேலும் மறுசீரமைப்பு ,சிறந்த மனித வள நடைமுறைகளை செயற்படுத்துவதன் ஊடாக சேவை நிலைமையை தொடர்ச்சியாக உயர் நிலைக்கு கொண்டு வந்து அதன் மூலம் சுற்றுலாத் துறையில் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் பெற்றிருக்கின்ற முதன்மை இடத்தை தொடர்ச்சியாக பேணிக் கொள்ளல் மற்றும் அந்த நிலைமையை மேலும் முன்கொண்டு செல்வதற்காக எம்வசமுள்ள வசதிகள், கீழ் கட்டுமான வசதிகளை உயர்நிலைமைக்கு கொண்டுவருவதற்கும் இந்த மூலோபாயங்கள் மூலம் கவனம் செலுத்தப்பட்டன. தேசிய சுற்றுலா துறை போன்றே நகரங்களை அண்மித்த ஹோட்டல் துறையை கூட்டங்கள் ஊக்குவிப்புகள் மற்றும் மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றை மையமாகக் கொண்டு சுற்றுலாப் பயனிகளை குழு அடிப்படையில் வரவழைத்துக் கொள்ளல் (எம்ஐசீ டுவரிசம்) தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்தப்படுவதால் இந்த முதலீடுகள் மூலம் ஹோட்டல் துறையில் ஏனையவர்களை விட முன்னணியில் திகழ்வதற்கு எமது கம்பனிக்கு உதவியாக அமையுமென நாம் எதிர்பார்க்கின்றோம். தேசிய பொருளாதாரம் மற்றும் உலக மற்றும் தேசிய சுற்றுலா கைத்தொழிலில் காணப்பட்ட நிலைமைகளை ஆராய்ந்து பார்த்தல், 2017 ஆம் நிதியாண்டினுள் கம்பனியின் செயலாற்றுகையை பகுப்பாய்வு செய்வதற்கு சிறந்ததொரு பின்னணியை ஏற்படுத்திக்கொடுக்கும்.

பாரிய தொழில்முயற்சிகளுக்கான பொருளாதாரச் சூழல்

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின் பாதகமான தாக்கங்களுக்கிடையே 2017 ஆம் ஆண்டு பொருளாதார அடிப்படையில் இலங்கைக்கு மிகவும் சவால்மிக்க ஆண்டாக அமைந்ததோடு, கடந்த 16 வருடங்களினுள் பொருளாதார விருத்தி விகிதம் அறிக்கையிடப்பட்ட குறைந்த பெருமதியான 3.1 வரை 2017 ஆம் ஆண்டில் அது வீழ்ச்சி கண்டது. நீண்டகாலம் நிலவிய வரட்சி மற்றும் பின்னர் ஏற்பட்ட வெள்ளம் பொருளாதார விருத்தி தொடர்பிலும், வெளிநாட்டு துறை தொடர்பிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியதோடு பணவீக்கம் 6.6 வரை அதிகரித்தது. எவ்வாறாயினும் வட்டிச் செலவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட பற்றாக்குறை சிறிதளவு அதிகரிப்பதில் தாக்கம் செலுத்தியதோடு, ஆரம்ப மிகை மற்றும் ஒப்பீட்டளவில் வெளிநாட்டு செலாவணி மதிப்பிறக்கம் காரணமாக மொத்த தேசிய உற்பத்தியின் அரச கடன் வீதம் வீழ்ச்சியடைந்தது. மேலும் ஆண்டினுள் அமேரிக்க டொலர் ஒப்பீட்டளவில் ரூபா 2% குறைவடைந்தது.

பொருளாதாரத்தின் மூன்று செயற்பாடுகளான (விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவை) என்பவற்றிற்கிடையில் மொத்த தேசிய உற்பத்திக்கு உயர்ந்த பங்களிப்பை வழங்குகின்ற 55.8% சேவைத்துறை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் 3.2% சாதகமான விருத்தி வீதத்தை அறிக்கையிட்டது.

எதிர்காலத்தின் பால் கவனம் செலுத்தும் போது 2018 ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தியின் விருத்தி கீழ்மட்ட பெறுமதியிலிருந்த படிப்படியாக உயர்வடையுமெனவும், தனிநபர் நுகர்வு மற்றும் முதலீட்டின் மூலம் வருட நடுப்பகுதியில் 4.5% வரை அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதார நோக்கு சாதகமான நிலைமையில் தொடர்ந்தும் காணப்பட்ட போதிலும் அதற்காக போட்டித் தன்மையை

விருத்தி செய்தல், நல்லாட்சி மற்றும் அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான அதன் மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரல் அரசினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது. மேலும் சனநாயகம், நல்லிணக்கம் மற்றும் இணக்கப்பாடு மற்றும் நியாயமான அபிவிருத்தி என்பவற்றை பலம் பெறச் செய்தல் மற்றும் நல்லாட்சியை உறுதி செய்வதற்காக அரசினால் அதன் "நோக்கு 2025" கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் வெளியிடப்பட்டது.

உலக சுற்றுலாத்துறையின் செயலாற்றுகை

பொதுவாக பார்க்கும் போது உலக சுற்றுலாக் கைத்தொழில் 2017 ஆம் ஆண்டில் வலுவான அடிப்படையில் விருத்தியடைந்ததோடு, பொருளாதார விருத்தியில் முதன்மையான காரணியொன்றாக சுற்றுலா கைத்தொழில் தனது இடத்தை உறுதி செய்துகொண்டள்ளது. கடந்த ஒரு தசாப்த காலமான காலப்பகுதியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட உயர் விருத்தி வேகத்தின் அடிப்படையில் முன்னேறி சர்வதேச சுற்றுலாக் கைத்தொழில் கடந்த 07 வருடங்களினுள் அறிக்கையிட்ட அதிக எண்ணிக்கையான சுற்றுலா பயணிகளின் வருகை 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் அவ்வாறு வருகைதந்த எண்ணிக்கை முன்னைய வருடத்தோடு ஒப்பீட்டளவில் 7% விருத்தியடைந்து, 1,322 மில்லியானாக காணப்பட்டது.

அதில் குறிப்பிடத்தக்க விடயம்யாதெனில், 2017 ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் வலய நாடுகளிலிருந்து வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 6% வளர்ச்சியை காட்டி 324 மில்லியனாக அறிக்கையிடப்பட்டது. தெற்காசியாவிலிருந்து வருகைதந்த எண்ணிக்கை முன்னைய வருடத்தோடு ஒப்பீட்டளவில் 10% அதிகரித்ததோடு, தென் கிழக்காசியாவிலிருந்து வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் முன்னைய வருடத்தோடு ஒப்பீட்டளவில் 8% உம், வட கிழக்காசியாவிலிருந்து வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிகை முன்னைய வருடத்தோடு ஒப்பிடுகையில் 3% உம் விருத்தியடைந்து காணப்பட்டன.

சர்வதேச அடிப்படையில் நோக்கும் போது சீன சுற்றுலாப் பயணிகள் உயர் செலவொன்றைச் செய்கின்ற நபர்களாக தொடர்ந்தும் காணப்படுவதோடு, சுற்றுலா கைத்தொழிலுக்கு அவர்களின் பங்களிப்பு 258 மில்லியன் அமேரிக்க டொலர்களாகும். அது கடந்த வருடத்துடன் ஒப்பீட்டளவில் 5% விருத்தியொன்றென்பதோடு, அதிக செலவு செய்வோர் இடையே இரண்டாம் இடத்தில் காணப்படுகின்ற அமேரிக்க சுற்றுலா பயணிகள் செலவிட்ட தொகை 135 மில்லியன் அமேரிக்க டொலர்களாகும். அது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 9% விருத்தியாகும். ஜேர்மன் நாட்டு சுற்றுலாப் பயணிகள் 84 மில்லியன் அமேரிக்க டொலர்களை செலவழித்து அதில் பங்கேற்றதோடு, பிரித்தானிய சுற்றுலா பயணிகள் 63 மில்லியன் அமேரிக்க டொலரினால் பங்களிப்புச் செய்தனர. அவ்விரண்டு நாடுகளின் செலவிடல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3% அதிகரிப்பாகும். அதேபோன்று பிரான்ஸ் நாட்டின் சுற்றுலா பயணிகளின் செலவிடல் 1% அதிகரிப்பை காட்டியதோடு அவர்கள் 41 மில்லியன் அமேரிக்க டொலர்களை செலவிட்டனர்

சர்வதேச சுற்றுலா கைத்தொழில் குறிப்பிடத்தக விருத்திகளில் கூட்டங்கள், ஊக்குவிப்புப் படிகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளை மையமாகக் கொண்டு குழுக்களாக வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துச் செல்கின்ற கவர்ச்சிகரமான கேள்வியோடு இணைந்த நிலையான சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பான அவதானம் அதிகரிக்கின்றமை விசேடமான குறிப்பிடுதல் வேண்டும். சுற்றுலா துறையின் கவர்ச்சியை வெற்றிகொள்ளும் பிரிவுகளாக சமூகச் செயற்பாடுகள் மற்றும் சமூகப் பொறுப்புக்களை வெளிப்படுத்தி குழுக்களாக சுற்றுலாப் பயணிகளை வரவழைத்துக் கொள்வதற்கு பல்வேறுபட்ட சலுகைகளை வழங்குதல் குறிப்பிடத்தக்க அளவு விருத்தியடைந்திருந்ததை இவ்வாண்டில் காண முடிந்தது. கூட்டங்கள், ஊக்குவிப்பு படிகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளுக்காக வருகைதருகின்ற சுற்றுலாப் பயணிகள் தமது வியாபார அலுவல்கள் தொடர்பில் மேற்கொண்ட சுற்றுலா பயணங்களின் போது அவர்கள் தரமிக்க உயர்ந்த அழகான ஓய்வொன்றை கழிக்கும் எதிர்பார்பில் உள்ளனர். அதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது சுற்றுலா துறையின் இந்த விளைதிறன்மிக்க சிறந்த பிரிவின் உயர்ந்த பயன்களை அடைந்துகொள்வதற்கு அவ்வாறான சுற்றுலா ஒருங்கிணைப்பாளர்கள், நகர நிருவாகிகள் தேசிய சுற்றுலா அதிகாரிகள் மற்றும் சமூக அமைப்புக்கள் போன்ற தரப்புக்களோடு ஒத்துழைப்போடு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதாகும். இங்குள்ள பல்வகைத் தன்மை நிறைந்த சுற்றுலாக் கவர்ச்சிகள் அக்குழுக்கள் சுற்றுலாவுக்காக இலங்கைக்கு வருவதற்கான ஓர் இடமாக அமையும்.

விரிவடையும் இலங்கையின் சுற்றுலாத்துறை

மீளாய்வு வருடத்தினுள் இலங்கையின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சேவைக் கைத்தொழில் உறுதியான செயலாற்றுகையொன்றை காட்டியுள்ளதோடு, சுற்றுலா பயணிகளின் வருகை 2016 ஆம் அண்டில் அறிக்கையிடப்பட்ட 2.05 மில்லியனை விட அதிகரித்து 2.12 மில்லியன் வரையில் அதிகரித்தள்ளது. இந்த வலுவான விருத்திக்கு ஹோட்டல் அறைகளின் கொள்திறன் மற்றும் ஏனைய இணை சுற்றுலாச் சேவைகள் என்பவற்றை குறிப்பிடத்தக்களவில் விரிவாக்கும் நோக்கத்தோடு, சுற்றுலா கைத்தொழில் சார்ந்த கீழ் கட்டுமான வசதிகள் என்பவற்றைக் குறிப்பிடத்தக்க அடிப்படையில் தொடர்ச்சியாக விருத்தி செய்தல் பெரிதும் உதவியாக அமைந்துள்ளன.

முகாமைத்துவ மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு

சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகின்ற நாடுகள் தொடர்பாக ஆராயும் போது இந்தியா சுற்றுலா பயணிகள் அதிகமாக வருகின்ற ஒரு நாடாக தொடர்ந்தும் காணப்படுவதோடு, 2017 ஆம் ஆண்டில் வருகை தந்த எண்ணிக்கை 384,628 வரை உயர்வடைந்து முன்னைய வருடத்தோடு ஒப்பீட்டளவில் 8% விருத்தியை காட்டியது. இங்கு இரண்டாம் இடத்தில் காணப்படுகின்ற சீனாவிலிருந்து வருகைதந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 268,952 என்பதோடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 1% வீழ்ச்சியாகும்.



ஐக்கிய இராச்சியத்திலிருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 201,879 ஆகும் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 7% விருத்தியை காட்டியதோடு, ஜேர்மன் நாட்டிலிருந்து வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 130,227 ஆகும் இது முன்னைய வருடத்தோடு ஒப்பிட்டளவில் 2% வீழ்ச்சியாகும். இவ்வாண்டு ஒப்பீட்டளவில் பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை முறையே 97,282 மற்றும் 81,281 என்பதோடு இது முன்னைய வருடத்தோடு ஒப்பீட்டளவில் முறையே 1% மற்றும் 9% விருத்தியாகும்.

நாட்டிலிருந்து வருகைதந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை முன்னைய வருடத்தோடு ஒப்பீட்டளவில் 17% வீழ்ச்சியாகும். அங்கிருந்து வருகை தந்த பயணிகளின் எண்ணிக்கை 79,371 ஆக அறிக்கையிடப்பட்டது. நெதர்லாந்து நாட்டிலிருந்து வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை வருடத்தில் உயர்ந்த விருத்தி வீதத்தை அறிக்கையிட்டு முன்னைய வருடத்தோடு ஒப்பீட்டளவில் 24% அதிகரித்து காணப்பட்டது. அவ் எண்ணிக்கை 51,148 ஆகும்.

நாட்டிலிருந்து வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை முன்னைய வருடத்தோடு ஒப்பீட்டளவில் 15% துரித வளர்ச்சியொன்றை காட்டி 6482 வரை அதிகரித்தமையாகும். அதேபோன்று அவுஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையும் 10% எண்ணிக்கையை காட்டி, 92,003 வரை அதிகரித்தது. மத்திய கிழக்கு நாடுகளில் காணப்பட்ட நிலையற்ற சூழ்நிலை அவ்வலையங்களிலிருந்து வருகைதந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை முன்னைய வருடத்தோடு, ஒப்பீட்டளவில் 11% வீழ்ச்சி கண்டு 95,581 வரை வீழ்ச்சியடைந்து காணப்படுகின்ற போதிலும் அவ்வலயத்திற்கு அப்பாற்பட்ட ஏனைய வலயங்களில் சுற்றுலா பயணிகளின் வருகை மட்டம் பொதுவாக ஓர் உறுதியான நிலையில் காணப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் சுற்றுலா பயணிகளின் வருகையில் குறிப்பிடத்தக்கதோர் போக்காக காணப்படுவது மாலைதீவு

மீளாய்வு ஆண்டினுள் சுற்றுலா பயணிகளின் வருகையில் மற்றுமோர் குறிப்பிடத்தக்க போக்காகக் காணப்பட்டது. அமேரிக்க



2017 ஆம் ஆண்டில் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்ததன் நோக்கத்தை ஆராய்ந்த பார்க்கும் போது பெரும்பான்மையான சுற்றுலா பயணிகள் 83.9% வருகை தந்திருப்பது ஓய்வை கழிப்பதற்காகவென தெரியவந்துள்ளதோடு, வர்த்தக நோக்கத்திற்காக வருகை தந்துள்ள சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை சதவீதம் 2.9% ஆகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களை சந்திப்பதற்காக, சமய கலாச்சார காரணங்களுக்காக மற்றும் சுகாதார



வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் கல்வி நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுக்கள் போன்ற ஏனைய பணிகளுக்கு வருகைதந்துள்ள சுற்றலா பயணிகளின் சதவீதம் 13.2% ஆகும்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் நடாத்தபட்ட புதிய வருடாந்த கணக்கெடுப்பிற்கமைய சுற்றுலா பயணிகளின் நாளொன்றிற்கான சாதாரண செலவிடல் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 168.2 டொலரிலிருந்த 2017 ஆம் ஆண்டினுள் 170.1 டொலர் வரை அதிகரித்துள்ளது. மேலும் 2016 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகள் நாட்டில் தங்கியிருப்பார்கள் என மதிப்பிடப்பட்ட பொதுவான கால பகுதியான 10.2 நாட்கள் ஒப்பீட்டளவில் 2017 ஆம் ஆண்டில் 10.9 ஆக காணப்பட்டது.

எதிர்வரும் வருடத்தில் இலங்கைக்கு வருகைதருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ள மொத்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2.78 மில்லியாகக் காணப்படுமென்பதோடு, வருகை தருகின்ற எண்ணிக்கையில் உயர் அதிகரிப்பொன்று காட்டப்படுகின்ற போதிலும், முன்னைய வருடத்தில் இக் காலப்பகுதியினுள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட தரப்படுத்தல் ஹோட்டல் அறைகளில் வசிக்கும் சதவீதம் 2016 இல் காணப்பட்ட 74.85% ஒப்பீட்டளவில் 2017 அம் ஆண்டில் 73.3% வரை சிறிய எண்ணிக்கையினால் வீழ்ச்சியடைந்துள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். இலங்கையின் முறைசாரா சுற்றுலாப் பிரிவின் தரப்படுத்தப்படாத அறைகளில் வசிக்கும் எண்ணிக்கை உத்தியோகபூர்வ கணக்கெடுப்பிற்கு உள்ளடங்காது என்பதால் அவ்வாறு முறைசாரா சுற்றுலா பிரிவின் தொடர்ச்சியான முன்னேற்றம் முன்னர் குறிப்பிட்ட தரப்படுத்தப்பட்ட ஹோட்டல் அறைகளில் தங்கும் விகிதாசாரத்தில் வீழ்ச்சி ஏற்படல் தொடர்பில் ஓரளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென அறியப்படுகின்றது.

இது தொடர்பில் ஆராயும் போது சுற்றுலா கைத்தொழிலின் மொத்த செயலாற்றுகை தொடர்பாக ஊக்கப்படுத்துகின்ற சிறிய ஊகத்தை வெளியீட்டு மீளாய்வு வருடத்தில் சுற்றுலா கைத்தொழில் சாரந்த உழைப்பு செயலாற்றுகை முன்னைய வருடத்தோடு ஒப்பிட்டளவில் 3.2% அதிகரிப்பொன்றை காட்டி 3.6% பில்லியன் அமேரிக்க டொலர் வரை விருத்தியடைந்ததோடு, அதன் மூலம் இலங்கை 3 ஆவது அதிகளவு வருமானம் உழைக்கின்ற தனது நிலையை பேணிக்கொள்வதற்கும் வெளிநாட்டு செலாவணி உழைப்பில் 14.2 % தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்வதற்கும் சாத்தியம் கிடைக்கின்றது.

2020 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகின்ற 4.5 மில்லியன் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக 75,000 ஹோட்டல் அறைகளை தாபிக்கின்ற அரசின் குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக சுற்றுலா கைத்தொழில் சிறப்பான முன்னேற்றம் ஒன்றை தொடர்ச்சியாக அடைந்து கொண்டுள்ள இவ்வாறான ஒரு சந்தர்பத்தில் சுற்றுலா கைத்தொழில் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயமாக காணப்படுவது, தற்போதுள்ள கேள்விக்கு ஏற்றவாறு பயிற்றுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் சுற்றுலாக் கைத்தொழிலின் சேவைக்கு இணைந்து கொள்வதில் உள்ள குறைபாடாகும். தேசிய அடிப்படையில் திறன் விருத்திப் பயிற்சி வாய்ப்புக்கள் உயர்ந்வடைந்து காண்படுகின்ற போதிலும் ஹோட்டல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சர்வதேச கம்பனிகள் அதிளவில் தமது வியாபார செயற்பாடுகளை எமது நாட்டினுள் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததை தொடர்ந்து எதிர்வரும் குறுகிய மற்றும் மத்திய காலப்பகுதியினுள் அந்த ஊழியர் பற்றாக்குறை மிகவும் தீவிரமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதாரத்தின் விளைதிறன் கொண்ட பிரிவுகளுக்கு தொழிலாளர்களை ஈடுபடுத்தும் நோக்கில் நாட்டில் ஊழியர் படையணியை பொருத்தமான விதத்தில் இணைப்புச் செய்வதற்காக போதுமான கட்டமைக்கப்பட்ட மாற்றங்களை மேற்கொள்வது கட்டயாமாகும்.

செயற்பாட்டு மீளாய்வு

மீளாய்வு வருடத்தினுள் ஹோட்டலில் புனரமைப்பு பணிகளின் முதலாவது கட்டத்தை நிறைவுசெய்துகொள்ளக் கிடைத்தமை ஹோட்டல் அடைந்து கொண்ட விசேட வெற்றியாகும். திசெம்பர் மாதத்தில் ஏற்படுகின்ற வேலைப்பழுமிக்க சுற்றுலா காலப்பகுதிக்கு முன்னர் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் திட்டமிடப்பட்டவாறு செயற்பாட்டு அலுவல்களை ஆரம்பிப்பதற்கு சாத்தியம் கிடைத்தது. ஹோட்டல் விறாந்தை மற்றும் பொது இடங்களை

முகாமைத்துவ மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு

அழகுபடுத்தும் அலுவல்கள் தொடர்பாக வருடத்தினுள் மேற்கொள்ள வேண்டிய புனரமைப்பு அலுவல்களின் பால் கவனம் செலுத்தப்பட்டது. இலங்கை விரித்தியடைந்த சூழல் உரிமை அனுபவம் கொண்டதென்பதால் முக்கியத்துவம் கொண்ட தேசிய அம்சங்களோடு, தேசிய சர்வதேச வடிவங்களை சேர்த்தல் ஹில்டன் கொழும்பு வியாபாரக் குறி மற்றும் அதனோடு இணைந்த அதி சுகபோக விருந்தோம்பல் என்பவற்றை வழங்கும் விசேட சேவையோடு அதன் பாகங்களை ஒன்றிணைப்பது இந்தப் புனரமைப்பின் முதன்மையான நோக்கமாகக் கொள்ளப்பட்டது.

கொழும்பு நகரத்தை அண்மித்த ஹோட்டல் துறையில் விசேடமானதாக தேசிய சுற்றுலாக் கைத்தொழிலில் காணப்படுகின்ற போட்டிதன்மை வேகமாக அதிகரித்து வருகின்றமை தொடர்பாக சிறந்த புரிந்துணர்வுடன் காணப்படுகின்ற ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் முகாமைத்துவம் ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் பிரதான பொது இடங்களை விரிவாக புனரமைப்பதற்கு ஆரம்பிப்பதற்கு முன்னோடியான நடவடிக்கைகள் பலவற்றை எடுத்திருந்தது. ஹோட்டல் துறையில் புதிதாக பிரவேசிப்போர்களோடு சிறப்பாக போட்டியிடுவதற்கும், ஹில்டன் கொழும்பு ஹோட்டல் தொடராக பேணிவருகின்ற முதன்மை நிலையைப் பாதுகாத்துக் கொண்டுள்ள, மிக விரைவாக விருத்தியடைந்து வருகின்ற கூட்டங்கள் ,ஊக்குவிப்புக்கள் ,மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளுக்காக குழுக்களாக வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளுக்காக சேவை வழங்கும் விரிவாக்கம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி, எதிர்வருகின்ற வருடங்களிலும் தனது வியாபாரக் குறியின் பெறுமானத்தை அவ்வாறே பாதுகாத்துக் கொள்வதற்கும் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் தன்வசமுள்ள சாத்தியப்பாடுகளை மேலும் வலுவாக்கம் செய்துகொள்ளும் நோக்கத்தோடு இந்த ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தேசிய அடிப்படையில் போன்று சர்வதேச கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றை நடாத்துவதற்காக முதன்மையாக தேர்ந்தெடுக்கப்படும் ஹோட்டல் ஒன்றாக தனது இடத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் ஹோட்டலுக்கு சாத்தியம் கிடைத்தமையும் இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு விடயமாகும். நாட்டின் வணிகத் தலைநகர் தொடர்ச்சியாக அபிவிருத்தியில் முன்னேறிக்கொண்டிருப்பதோடு, விசேடமாக கொழும்பு நகரத்தில் அமையப்பெற்றுள்ள ஹோட்டல் உள்ளடக்க சுற்றுலாப் பிரிவின் பாரிய பங்கொன்றின் கவர்ச்சியை வெற்றிகொள்ளல் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தி செயற்படுகின்ற ஒரு சூழ்நிலையினுள் இவ்வாறான வைபவ சந்தர்ப்பங்களுக்காக ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஹில்டன் கொழும்பு ஹோட்டல் தனவசமுள்ள சாத்தியப்பாட்டை தொடர்ந்தும் விருத்தி செய்துகொள்வதற்காக செய்யப்பட்ட முதலீடுகள் மூலம் ஹோட்டலின் வருமான உழைப்பு கொள்திறன் மேலும் மேலும் அதிகரிப்பதற்கு கனிசமானளவு பங்களிப்புச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சமகால சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களோடு ஒன்றிணைந்த ஹில்டன் ஹோனஸ்ட் லோயல்டி நிகழ்ச்சித் திட்டம் எமது கம்பனியின் மற்றுமொரு முக்கியமான அதேபோன்று உறுதியான வருமானம் உழைக்கின்ற வழியொன்றென்பதோடு, உலகம் பூராகவும் பரந்து காணப்படுகின்ற ஹில்டன் வியாபாரக் குறி தொடர்பில் நம்பிக்கை வைத்துள்ள சேவை பெறுனர்களைத் தொடர்ச்சியாக ஹில்டன் ஹோட்டலின் பால் கவர்ந்திழுப்பதற்கும் மற்றும் சிறந்த மதிப்பீட்டுக் கருத்து மற்றும் உலகின் பெயர் பெற்ற ஹில்டன் வியாபாரப் பெயர் மற்றும் அதன் தரத்திற்கு இசைவாக செயற்படுவதற்கும் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் ஒத்துழைப்பு வழங்கி வருமானத்தை அதிகரித்து கொள்வதற்கு இந்த நிகழ்ச்சித் திட்டம் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

செயலாற்றுகை நிகழ்வுகள் அதிகமாக கொண்ட வருடம்

அதிசொகுசு மற்றும் அதிவிசேட விருந்தோம்பல் சேவை தொடர்பாக ஹில்டன் கொழும்பு ஹோட்டல் வசம் காணப்படுகின்ற அதிசிறப்பான நற்பெயரின் ஊடாக நாட்டின் சமமான துறையில் பல்வேறு வைபவ சந்தர்ப்பங்கள் மற்றும் மனிதவாழ்வின் பல்வேறு மகிழ்ச்சிகரமான சந்தர்பங்களை வைபவ ரீதியாக நடாத்துவதற்கு எப்போதும் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் ஹோட்டலாக நாம் திகழ்கின்ற நிலையான நிலைமையை தொடர்ச்சியாக பேணிக் கொண்டு வந்துள்ளோம்.

தேசிய மற்றும் சர்வதேச கலாச்சார முக்கியத்துவம் கொண்ட வைபவங்கள் மற்றும் விசேட விழாக்களை கொண்டாடுவதற்காக எமது ஹோட்டலில் நடாத்தப்படுகின்ற உள்நாட்டு வெளிநாட்டவர்களின் வைபவங்களுக்காக அதன் விசேட அலங்காரங்களை ஒன்று சேரத்தோம். ஹோட்டலுக்கு சுற்றுலா பயணிகள் அதிகமாக வருகை தருகின்ற திசெம்பர் மாத்தில் நடாத்தப்பட்ட பண்டிகைக் கால வைபவங்களோடு இணைந்ததாக ஒழுங்கு செய்யப்பட்ட அந்த வைபவத் தொடர்கள் சிறப்பாக அமைந்தன. ஹில்டன் கொழும்பு ஹோட்டல் வசமுள்ள அதிவிசேட மூன்று உணவகங்கள் ஊடாக வழங்கப்பட்ட சுவைமிகு பல்வகையான உணவு குடிபானங்கள் மூலம் எமது ஹோட்டலின் பெறுமதி மிக உயர்ந்தமட்டத்தில் மேலும் மேலும் வலுவடைந்தது. எமது ஹோட்டல் உங்களுக்காகவே திறந்துள்ள, உங்கள் விருப்பத்திற்கேற்ற உங்களுக்கு தேரந்தெடுத்துக்கொள்ளக்கூடிய மூன்று உணவகங்களை கொண்டுள்ளது. கரீலீப் உணவகத்தில் பெரும்பாலானோர் விரும்புகின்ற உயர்தர இலங்கை உணவுகள் வழங்கப்படுவதோடு எமது விருந்தினர்களின் சுவை மற்றும் விருப்பத்திற்கு பொருத்தமானவாறு அவர்களால் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படுகின்ற மீன்வகை (கடலுணவு) உணவுகளும் அவர்களுக்கு முறையாக

தயாரித்துக் கொள்வதற்கான வாய்ப்பும் இங்கு காணப்படுகின்றது. ''கிரேஸ் கிச்சன்'' கொழும்பு ஹோட்டல் மிக அண்மையில் ஒன்றிணைக்கப்பட்ட விசேடத்துவமான இந்த உணவகம் இலங்கை உணவு வகைகளுக்கு மேலதிகமாக இந்தியா, சீனா, ஜப்பான், இத்தாலி, மத்திய தரை மற்றும் தாய்லாந்து விசேட உணவுவகைகளை கொண்டுள்ளதுடன் பல்வகையான உணவு வகைகளை அச்சந்தர்பத்திலேயே தயாரித்துக்கொள்வதற்கான வசதிகளை கொண்ட அதி விசேடமான உணவகமாகும். இங்கு உணவை உட்கொள்ளும் போது மிக அற்புதமான அபூர்வ அனுபவங்ளை உணர்ந்துகொள்ள முடியும்.

இல் போன்டே உணவகம் ஹோட்டலின் நீச்சல் தடாகம் நன்றாக தெரியக்கூடியவாறு ஒழுங்கமைக்கப்பட்ட அழகான அமைதியான சுற்றுச்சூழலைக் கொண்டு அமையப் பெற்ற பெஸ்ரா மற்றும் பிஸ்ஸா விறகு அடுப்பில் தயாரிக்கப்பட்ட இத்தாலிய விசேட உணவுகள் பலவற்றை உங்கள் விருபத்திற்கேற்றவாறு தேர்ந்தெடுத்துக்கொள்ளக்கூடிய இத்தாலி உணவுகளை சுவைப்பதற்காகவே ஒதுக்கப்பட்ட விசேடமான ஓர் உணவகமாகும்.

இங்கு உணவகம் ஹோட்டலின் மிகப் பிரபல்யமான ஓர் அங்கமான பார் மற்றும் லோங்ஹவ் என்ட் பார் என்பவற்றால் சூழப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்டுள்ளதோடு ஹோட்டலின் உளம் கவர் தாமரை தடாகமும் எதிரே தென்படக்கூடியவாறு அழகான நகர்புற பூங்காவின் வடிவமைப்பில் மிக அழகாக மீள் அமைப்புச் செய்யப்பட்ட உணவகம் ஹோட்டலின் உள்பக்கம் அமையப்பெற்றுள்ள முழுமையான சமூக மற்றும் வியாபார நிலையமொன்றாக மாறியுள்ளது.

மீளாய்வு வருடத்தினுள் மறுசீரமைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எமது வியாபார அலுவல்களில் அனைத்து பிரதான பிரிவுகளிலும் முன்னேற்றகரமான நிதி செயலாற்றுகையொன்றை அடைந்துகொள்வதற்கு எமது கம்பனியினால் முடிந்துள்ளது. இருப்பினும் வருடம் பூராகவும் ஓய்வை தேடி இங்கு வந்த சுற்றுலா பயணிகள் ஊடாக கம்பனிக்கு நன்மைகள் கிடைக்கப்பெற்றன.

வருமானம்

மீளாய்வு வருடத்தினுள் வருமானம் முன்னைய வருடத்தோடு ஒப்பீட்டளவில் 20% அதிகரித்து 3.02 பில்லியன் ரூபாவாக காணப்பட்டதோடு, அதற்காக 2016 ஆம் ஆண்டில் 1.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அறை வருமானம், 2017 ஆம் ஆண்டில் 1.32 பில்லியன் வரை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது. ஹோட்டலின் பல்வகை தன்மைகொண்ட உணவகம் எமது விருந்தினர்களை கவர்ச்சி கொள்ள முடிந்தமையினால் முன்னைய வருடங்களின் உணவு மற்றும் குடிபானங்களை வழங்குதல் மூலம் பெற்றுக்கொண்ட 1.33 பில்லியன் ரூபா வருமானம் 1.64 பில்லியன் ரூபா வரை அதிகரித்தது. அதேபோன்று ஏனைய தொழிற்பாட்டு வருமானமும் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 58.2 மில்லியன் ரூபாவிலிருந்து 63.1 மில்லியன் ரூபா வரை அதிகரித்து.

2017 ஆம் ஆண்டில் உறுதியான உயர்தர செயலாற்றுகை மொத்த இலாபம் 2.5 பில்லியன் ரூபாவரை அதிகரிப்பதற்கு உதவியாக அமைந்ததோடு மறுசீரமைக்கப்பட்ட சொத்து மூலதனமயமாக்கல் காரணமான் ஏற்பட்ட மேலதிகத் தேய்வு (100 மில்லியன் ரூபா) பெறுபேறாக வரிக்கு முன்னரான இலாபம் 173 மில்லியன் ரூபாவாக நிலையாக காணப்பட்டது.

வரி செலுத்திய பின்னர் இலாபம்

முன்னைய வருடத்தல் அறிக்கையிடப்பட்ட 141 மில்லியன் ரூபா தொகையோடு ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டு இறுதியல் வரி செலுத்தய பின்னர் இலாபம் 258 மில்லியன் ரூபா வரை குறிப்பிடத்தக்க விருத்தியொன்றை அவதானிக்க முடிந்தது.

பங்குதாரரின் பெறுமதியை தீர்மானித்தல்

2016 ஆம் ஆண்டின் அறிக்கையிடப்பட்ட ஒரு பங்குக்கான உழைப்பு 0.07 ரூபாலிருந்து மீளாய்வு வருட இறுதியில் 0.13 ரூபா வரை அதிகரித்தது.

எதிர்கால நோக்கு

நாட்டின் விருந்தோம்பல் துறையின் முதன்மையான வர்த்தகப் பெயராக ஹில்டன் கொழும்பு ஹோட்டல் தனது வர்த்தப் பங்கை நிலைபேறாக பேணிக் கொள்வதற்கும் விருத்தி செய்துகொள்வதற்கும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்ட முன்னர் குறிப்பிட்ட புணரமைப்பு அலுவல்கள் உதவியாக அமைந்தன. எதிர்வரும் நிதியாண்டினுள் தோன்றக்கூடிய சந்தர்ப்பங்களை உள்வாங்கும் பொருட்டு ஹில்டன் சர்வதேச வர்த்தகப் பெயர், வரவேற்பு மற்றும் அங்கீகாரம் அதன் அசாதாரண சேவை நிலைமை மற்றும் அதன் அமைதியான தன்மை போன்ற தரங்களின் அடிப்படையில் நம்பிக்கையோடு செயற்படுவதற்கு புத்துயிர் பெற்ற ஹில்டன் கொழும்பு ஹோட்டலுக்கு சாத்தியம் கிடைத்துள்ளது.

ஹோட்டலின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்புகளை ஆரம்பிப்பதற்கு கம்பனி தயாராகவுள்ளதோடு 2018 ஆம் ஆண்டு 03 ஆம் காலாண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள அந்த பழுதுபார்ப்பு அலுவல்கள் மூலம் ஹோட்டலின் உணவகம், போல்ரூம் மண்டபம் மற்றும் விருந்தினர்களின் அறைகள் ஆகியவற்றை மேலும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்

முன்னேற்றகரமான பொருளாதாரத்தின் சாதகமான விருத்தி மற்றும் ஓய்வை நாடியும், வியாபார அலுவல்களுக்காவும் இந்த நாட்டிற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு கொழும்பு நகரின் மத்தியில் அமையப்பெற்றுள்ள ஹில்டன் ஹோட்டல் தொடர்பில் சிறப்பான எதிர்வரும் ஆண்டொன்றைப் புலப்படுத்துகின்றது.

நிறுவன கல்லாளுகை

கொழும்பு பங்குப் பரிமாற்றத்தின் இணைந்த நிருவாகச் சட்டங்கள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணைந்த நிருவாகம் தொடர்பான நடைமுறைக்கோப்பின் ஏற்பாடுகளுக்கு இசைவாக இணைந்த நிருவாகம் தொடர்பாக உயர் தரத்தை பேணிக்கொள்ளல் போன்றே அதனை அவ்வாரே பேணிச் செல்லும் பொறுப்பும் ஹோட்டல் டிவலபோர்ஸ் லங்கா பிஎல்சீ கம்பனியின் பணிப்பாளர் சபைக்குரியது. தமது மொத்தப் பணிகளின் போது வியாபார நேர்மை, நல்லொழுக்கம், வெளிப்படைத் தன்மை மற்றும் தொழில் அனுபவம் தொடர்பான உயர் தரத்தைப் பேணிக்கொள்ளம் கம்பனிக்குரிய பொறுப்புக்களை குறைவின்றி நிறைவேற்றுகின்றதென பணிப்பாளர் சபையினால் உறுதி செய்யப்படல் வேண்டும்.

பணிப்பாளர் சபை

பணிப்பாளர் சபை கம்பனியின் தொழிற்துறை தலைமைத்துவத்தைக் கொண்டு செயற்படுவதோடு கம்பனியின் பங்குரிமையாளர்கள் தொடர்பில் கம்பனிக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு கம்பனிக்கு சாத்தியமான விதத்தில் உள்ளடக்க மூலோபாய நோக்கங்கள், பொறுப்புக்கள் மற்றும் தரங்களைத் தயாரித்தல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வு போன்ற பணிகள் பணிப்பாளர் சபையினால் ஆற்றப்படுகின்றன. 2017 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு கம்பனியின் பணிப்பாளர் சபை பின்வருமாறு.

திரு கிராசான்த பிரசாத் குரே -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

செல்வி தீசனா எஸ் அமரசேகர -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

திரு ஜே.யூ.எம்.பி.ஜயமக -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

திரு. அத்துல சேனாநாயக்க -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

செல்வி தெஹானி எஸ்.ஏ மெதிவ்ஸ் -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

திரு தினுக் கொலம்பகே -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

திரு ஷெஸ்மின் மன்சூர் -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

திரு. டப்ளிவ்.எஸ்.எல்.டீ.ஏ.ஆர். சமரசிங்க -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

செல்வி சொனாலி லியனமான -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

திரு. பிரவீர் தனோஸ் சமரசிங்ஹ -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

2017.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்தினுள் பணிப்பாளர் சபையின் ஒன்பது (09) கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு அந்தக் கூட்டங்களில் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பங்கேற்பு பின்வருமாறு.

பணிப்பாளரின் பெயர்	கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை
திரு கே.பீ. குரே *(2016 04 08 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்)*	09
செல்வி டீ.எஸ் அமரசேகர *(2015 04 07 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்)*	07
திரு ஜே.யூ.எம்.பி.ஜயமக *(2016 03 01 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்)*	09
திரு. அத்துல சேனாநாயக்க *(2016 04 08 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்)*	08
செல்வி தெஹானி எஸ்.ஏ மெதிவ்ஸ் *(2016 04 08 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்)*	06
திரு தினுக் கொலம்பகே *(2016 04 08 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்)*	09
திரு ஷெஸ்மின் மன்சூர் *(2016 04 08 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்)*	06
திரு. டப்ளிவ்.எஸ்.எல்.டீ.ஏ.ஆர். சமரசிங்க *(2016 04 08 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்)*	07
செல்வி சொனாலி லியனமான *(2016 04 08 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்)*	09
திரு. பிரவீர் தனோஸ் சமரசிங்ஹ *(2016 07 29 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்)*	07

மாதாந்த கணக்கறிக்கை மற்றும் நியதிச்சட்ட இணக்கப்பாட்டுக் கூற்று பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுவதோடு, பணிப்பாளர் சபை கூட்டங்களின் போது அனைத்து முக்கிய விடயங்களும் கலந்துரையாடப்பட்டு அது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. மேலும், பணிப்பாளர் சபையின் குறித்துரைக்கப்பட்ட அனுமதி தேவையான விடயங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபைப்பத்திரம் பணிப்பாளர் சபை கூட்டங்களுக்கு முன்னர் முன்கூட்டியே சமர்ப்பிக்கப்படுகின்றன. கம்பனிச் செயலாளரால் பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கைகள் உரிய விதத்தில் குறிக்கப்பட்டு, பேணப்பட்டு வருகின்றன.

உள்ளக கட்டுப்பாடுகளும் இடர்நிலை முகாமைத்துவமும்

கம்பனி பங்குரிமையாளர்களின் முதலீடுகள் மற்றும் கம்பனியின் சொத்துக்களை பாதுகாப்பதற்காகப் பணிப்பாளர் சபையினால் போதுமான உள்ளக நிருவாக மற்றும் ஆபத்து முகாமைத்துவ முறைமை அறிமுகம் செய்யப்பட்டள்ளது. உள்ளக நிருவாக முறைமைகளில் அதற்கே உரித்தான வரையறைகள் காணப்படுவதாகவும், ஊழல் மற்றும் தவறுகள் இடம்பெறவில்லையென ஒருமித்த சான்றிதழொன்றை அவற்றுக்கு வழங்க முடியாதென்பது பணிப்பாளர் சபை நன்றாக புரிந்துவைத்துள்ள ஓர் விடயமாகும்.

பணிப்பாளர் சபை முறையான அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட வரையறைகளினுள் கம்பனியின் மாதாந்த கணக்குகள் மற்றும் செயலாற்றுகையை மீளாய்வு செய்யப்படுகின்றது.

கணக்காய்வுக் குழு

2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்தினுள் கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்கம் பின்வருமாறு.

பணிப்பாளர்களின் பெயர்

திரு. பிரவீர் தனோஸ் சமரசிங்க -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் (தலைவர்)

திரு. ஜே.எம்.யூ.பீ ஜயமஹ -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் (உறுப்பினர்)

திரு. எம். ஷெஸ்மின் மன்சூர் -
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் (அங்கத்தவர்)

கம்பனியின் உள்ளக கணக்காய்வளர்களான ஏர்னஸ்ட் என்ட் யங் நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்ற ஹோட்டலின் வழிநடாத்தல் செயற்பாடுகளுக்குரிய உள்ளக நிருவாக முறை தொடர்பான அறிக்கை கணக்காய்வு குழுவினால் நன்றாக ஆராயப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்ட தன் பின்னர் ஹோட்டல் மற்றும் கம்பனியின் அலுவல்கள் கடுமையான நிருவாகத்திற்குட்படுத்தப்படுகின்றதென உறுதிசெய்யப்படுகின்றன. ஹோட்டல் / கம்பனியின் உள்ளக நிருவாக முறைமைக்கு தேவையான மேம்படுத்தல் தொடர்பாகக் கணக்காய்வுக் குழுவினால் பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. கொழும்பு பங்கு பரிவர்தனைக்கு அனுப்பிவைக்கப்படும் மும்மாத நிதிக் கூற்று பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை செய்வதற்கு முன்னரும் மற்றும் வருடாந்த நிதிக் கூற்று கணக்காய்வுக்கு சம்ரப்பிக்கப்படுவதற்கு முன்னரும் கணக்காய்வு குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றது.

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை இந்த அறிக்கையில் 48 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊதியக் குழு

2017, திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியோடு நிறைவடைந்த வருடத்தினுள் பணிப்பாளர் சபையினால் ஊதியக் குழு பின்வருமாறு தாபிக்கப்பட்டது.

பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர	நியமனம் செய்யப்பட்ட ஃ நீக்கப்பட்ட திகதி
திரு. அதுல சேனாநாயக்க (தலைவர்)	2016.04.28 ஆம் திகதி தொடக்கம் நியமனம செய்யப்பட்டார
திரு. தினுக் கொலம்பகே (அங்கத்தவர்)	2016.04.28 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்
திரு. டப்ளிவ். எஸ். எல்.டீ.ஏ.ஆர். சமரசிங்க	2016.04.28 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்
திரு கிரிஷாந்த குரே	2017.01.16 ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டார்

ஊதியக் குழு ஊதியம் தொடர்பான விடயங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபைக்குப் பரிந்துரைகளை முன்வைக்கும்.

கம்பனியின் செயலாளர்கள்

பணிப்பாளர் சபை மற்றும் அதன் குழுவினால் சிறப்பான நிருவாக நடைமுறைகள் பின்பற்றப்படுவதனை உறுதி செய்வதற்காக கம்பனியின் செயலாளர்களால் கம்பனிச் சட்டம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்தனை ஒழுங்கு விதிகள் என்பவற்றிக்கு ஏற்புடைய விடயங்கள் தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும்.

சட்டரீதியான தேவைகளுக்கான இணக்கம்

சகல பணிப்பாளர்களும் கம்பனியின் நிதி மற்றும் முகாமைத்துவத் தகவல்களை அறிந்து கொள்வதற்குப் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு உரித்துண்டு. கம்பனிச் சட்டம் மற்றும் விதிகள் அனைத்திற்கும் இசைவாகச் செயற்படுகின்றனர் என்பதனை உறுதி செய்துகொள்வதற்கும், கம்பனியின் அலுவல்களை முகாமைத்துவம் செய்யும் போது உரிய சுறுசுறுப்போடு மேற்கொள்ளப்படுவதற்கும் பணிப்பாளர் சபை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. இதற்கு மேலதிகமாக பணிப்பாளர் சபையின் கொள்கைகளுக்கு இசைவாக செயற்படுகின்றனர் என்பதனை உறுதிசெய்வதற்காக உரிய ஆய்வுகளும் கட்டுப்பாட்டு முறைமைகளும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மீளாய்வு வருடத்தினுள் கொழும்பு பங்குப் பரிவர்தனை பட்டியல் படுத்தப்பட்ட சட்டக் கோவையின் 7.10 பிரிவிகளுக்கமைய மற்றும் நிறுவன கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு இசைவாக செய்யப்பட்ட வெளிப்படுத்துகைகள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

நிறுவன கல்லாளுகை

சட்ட இல	விடயம்	குறிப்பிட்ட தேவைப்பாடு	இணக்கம் பற்றிய விபரம்	விபரம்
7.10.1	நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்	மொத்தப் பணிப்பாளர்களில் குறைந்தது 1/3 நிறைவேற்றுத் தரமல்லத பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டும்	இணக்கம் ஏற்பட்டது	சகல பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களாவர்
7.10.2 (அ) மற்றும் (ஆ)	சுயாதீனப் பணிப்பாளர்	நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் 2 பேர் அல்லது 1/3 என்பதில் அதிக எண்ணிக்கையானோர் சுயாதீனப் பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டும்	இணக்கம் ஏற்பட்டது	
		சகல சுயாதீன பணிப்பாளரகளும் உரிய படிவத்தின் பிரகாரம் சுயாதீன, சுயாதீனமல்லாத என உறுதியுரையை முன்வைத்தல் வேண்டும்	இணக்கம் ஏற்பட்டது	
7.10.3	பணிப்பாளர்களுடன் தொடர்பான வெளிப்படுத்தல்கள்	(அ) சுயாதீன பணிப்பாளர்களின் பெயர்கள் ஆண்டறிக்கையில் வெளியிடப்படுதல் வேண்டும்	இணக்கம் ஏற்பட்டது	தயவுசெய்து ஆண்டறிக்கையில் பணிப்பாளர்களின் மற்றும் சபை உப குழுக்களுடன் தொடர்பான தகவல்களைப் பார்க்கவும்
7.10.5	ஊதியக் குழு	குறைந்தது சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத இரண்டு பணிப்பாளர்களைக் கொண்ட ஊதியக் குழுவொன்று இருத்தல்	இணக்கம் ஏற்பட்டது	தயவுசெய்து ஆண்டறிக்கையில் பணிப்பாளர்களின் மற்றும் பணிப்பாளர் சபை உப குழுக்களுடன் தொடர்பான தகவல்களைப் பார்க்கவும்.
7.10.6	கணக்காய்வுக் குழு	கம்பனிக்கு கணக்காய்வுக் குழுவொன்று இருத்தல்	இணக்கம் ஏற்பட்டது	தயவுசெய்து ஆண்டறிக்கையில் பணிப்பாளர்களின் மற்றும் பணிப்பாளர் சபை உப குழுக்களுடன் தொடர்பான தகவல்களைப் பார்க்கவும்
	7.10.6 (அ) .கணக்காய்வுக் குழுவில் உள்ளடங்குவோர்	(அ) அது சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்	இணக்கம் ஏற்பட்டது	தயவுசெய்து ஆண்டறிக்கையில் பணிப்பாளர்களின் மற்றும் பணிப்பாளர் சபை உப குழுக்களுடன் தொடர்பான தகவல்களைப் பார்க்கவும்
		(அ) கணக்காய்வுக் குழுவின் தலைவர் அல்லது ஒரு அங்கத்தவர் தொழில்சார் கணக்கீட்டு சபையின் அங்கத்தவராக இருத்தல்.	இணக்கம் ஏற்பட்டது	கணக்காய்வுக் குழுவின் தலைவர்கணக்காய்வு நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும்

ஏனைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

சுயாதீன தொழில்சார் அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளல்

பணிப்பாளர் சபை தனது பணிகளை ஆற்றும் போது தேவையான சந்தரப்பங்களில் வெளித் தரப்பினர்களிடமிருந்து சுயாதீன தொழில்சார் அறிவுறுத்தல்களைக் கம்பனியின் செலவில் பெற்றுக்கொள்ளும்.

கம்பனி மற்றும் அதன் பணிப்பாளர் சபையின் நடவடிக்கைகளுக்கான அர்ப்பணிப்பு கம்பனி தொடர்பில் தமது கடமைகளை ஆற்றுவதற்காக பணிப்பாளர் சபை போதியளவு காலத்தை அரப்பணிக்கின்றது. கம்பனியின் அன்றாட செயற்பாடுகள் கம்பனியின் பிரதம வழிநடாத்தல் அலுவலர் நிதி அலுவலர் ஆகியோரிடம் கையளிப்பதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கையெடுத்துள்ளது.

ஹொட்டல் டிவலோபர்ஸ் (லங்கா கம்பனியின்) பணிப்பாளர் சபையின் கட்டளையின் பிரகாரம்,

தனுக்க ரன்ஜித் சமரசிங்க
பணிப்பாளர்

தினுக் கொலம்பகே
பணிப்பாளர்

2018, யூலை மாதம் 23 ஆம் திகதி

இடர்நிலை முகாமைத்துவம்

பல்வேறு சவால்கள்களுக்கு மத்தியில் பல்வேறு வகையான சுற்றுலா சந்தைகளை கவர்ந்து கொள்வதற்கும் தொடராக பேணிக்கொள்வற்கும் காணப்படுகின்ற கேள்வியை வெளிப்படுத்தும் உயர் போட்டித்தன்மை கொண்ட கைத்தொழிலில் முன்னணியில் இருந்து கொண்டு ஹில்டன் கொழும்பு ஹோட்டல் தனது பங்குதாரர்களுக்கு உயர் பெறுமதியொன்றை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சியின் ஓர் ஒன்றிணைந்த செயற்பாடாக ஆபத்து முகாமைத்துவம் கருதப்படுகின்றது. எதிர்பார்ப்புக்களுக்கு அப்பால் மாற்றங்கள் தர நியமங்களாக மாறியுள்ள தற்போதைய வர்த்தகச் சூழலினுள் வியாபார அலுவல்களை மேற்கொள்ளல் மற்றும் சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணக்கப்பாடு காட்டுதல் மற்றும் மூலோபாய திட்டமிடலுக்கிடையில் சமநிலையை பேணிக்கொள்வது தொடர்பில் ஹோட்டலினால் ஆற்றப்பட வேண்டிய முக்கிய பணிப்பொறுப்பு தொடர்பாக தொடர்ந்தும் புரிந்துணர்வோடு காணப்படுகின்றது. புத்திசாதூரியமான அறிவார்ந்த தீர்மானங்களை எடுப்பதற்காகவும் சந்தர்ப்பங்கள் மற்றும் அவற்றின் ஆபத்து மதிப்பிடல் என்பதற்காகவும, அதன் மூலம் வசதிகள் செய்யப்படுவதோடு, தனது முதன்மைச் சொத்துக்களை உரியவாறு பாதுகாத்துக்கொள்வதற்கும் அல்லது விருத்தி செய்துகொள்வதற்கும் ஹோட்டலுக்கு சாத்தியம் கிடைக்கும்

ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் இடர்நில முகாமைத்துவ ஏற்பாடு கம்பனியின் ஆபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புக்களை இனங்கண்டு அந்த சாத்தியப்பாடுகளை மதிப்பீடு செய்து அவற்றை கட்டுப்படுத்துவதற்கு அல்லது முகாமைத்துவம் செய்வதற்கு மூலோபாயத் திட்டங்களை தயாரிப்பதற்காக திட்டமிடப்பட்ட ஒன்றாகும். இடர்நில முகாமைத்துவம் எமது கம்பனியின் உள்ளடக்க நிருவாக கட்டமைப்பு மற்றும் மூலோபாய திட்டமிடல் செயற்பாடுகளின் கட்டாய பிரிவொன்றென்பதோடு, மொத்தச் செயற்பாட்டு துறையினுள்ளும் போதுமானளவு மற்றும் இணக்கப்பாட்டை உறுதி செய்துகொள்வதற்காக செய்யப்படுகின்ற சமகால மீளாய்வுடன் கூடிய தகமை முறைமை கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் சிறப்பான அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எமது செயற்பாட்டு முகாமைத்துவச் செயன்முறை வழிநடாத்தல் சூழலினுள் மாற்றமடைகின்ற ஆற்றல்களை தொடர்ந்தும் வெளிப்படுத்துகின்ற எமது ஆபத்து முகாமைத்துவ சட்டகம் எமது கொள்கைச் சட்டகம் போன்றே ஏற்புடையவாறு சர்வதேச சிறந்த நடைமுறைகளையும் பின்பற்றியொழுகியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் இடர்நில முகாமைத்துவ சட்டக மேற்பார்வை மற்றும் அது தொடர்பான இறுதிப் பொறுப்பு முகாமைத்துவத்தைச் சாரும்.

பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட இடர்நில முகாமைத்துவக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக மொத்தப் பொறுப்பும் ஆபத்து முகாமைத்துவக் குழுவுக்கு உரியதாகும்.

இடர்நிலை முகாமைத்துவச் கட்டமைப்பு

ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் இடர்நில முகாமைத்துவக் குழுவில் முதன்மையாளராகச் செயற்படுகின்ற பொது முகாமையாளர் தனது நியதிச்சட்ட, நம்பிக்கையான மற்றும் ஒழுங்குபடுத்தல் பொறுப்புக்களை சிறப்பாக தயாரிக்கப்பட்டுள்ள இடர்நில முகாமைத்துவ சட்டகமொன்றினுள் ஆற்றும் போது உலகளாவிய ஹில்டன் எமது தாய்க்கம்பனியோடு நெருக்கமாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. பொது முகாமையாளருடன் ஹோட்டல் பணியாட்குழுத் தலைவர்களை இடர்நில முகாமைத்துவக் குழு உள்ளடக்கியுள்ளது. உள்வுத் தகவல்களைச் சேகரித்தல், தர கணக்காய்வு, பாதுகாப்பு கணக்காய்வு, உள்ளகக் கணக்காய்வு மற்றும் வாடிக்கையாளர் பதிலளிப்பு மற்றும் நிகழ்வுகள் போன்ற வழிமுறைகளைப பயன்படுத்தி அனைத்து ஏற்புடைய உள்ளக மற்றும் வெளியக ஆபத்துக்கள் இனங்காணப்படுகின்றதென்பது மிக ஒழுங்குமுறையான செயற்பாடுகள் மூலம் உறுதிசெய்யப்படுகின்றது.

இவ்வாறு ஆபத்து தரப்படுத்தல்களின் பேராக உயர் ஆபத்துக்கள் தொடக்கம் முக்கியத்துவமற்ற ஆபத்துக்கள் வரை தொடரொழுங்கில் ஆபத்து பட்டியில் படுத்தப்பட்டுள்ளதோடு, அவை ஆபத்துக்களை முக்கியத்துவ ஒழுங்கில் முதன்மைபடுத்துவதற்கும் தீர்வு, பாதுகாப்பு, மறுசீரமைப்பு ஆகிய வகையீட்டுப் பணிகளை திட்டமிடலின் கீழ் ஆபத்துக்களை குறைத்துக்கொள்கின்ற மூலோபாயங்களை திட்டமிடுவதறகும் ஹோட்டலுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கின்றது. அவ்வாறு இனங்காணப்பட்ட ஆபத்துக்கள் ஹோட்டலின் இடர்நில முகாமைத்துவக் குழுவினால் மாதாந்த அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுவதோடு எவ்வாறாயினும் குறைத்துக்கொள்கின்ற திட்டமொன்றை மேற்கொள்ளும் பொறுப்பு குறித்த ஆபத்து உரிமை கையளிக்கப்பட்டுள்ள குழுவுக்குரியதாகும் ஆபத்து மீளாய்வு, இடர்நில முகாமைத்துவக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலில் உட்சேர்ப்பதற்கும் ஆபத்து முகாமைத்துவக் குழு நடவடிக்கைக்களை எடுக்கின்றது.

இடர்நிலை முகாமைத்துவம்

ஆபத்து வகை மற்றும் விபரம்	ஆபத்தைக் குறைப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அமுலாக்கல் திட்டம்
தொழில்நுட்ப மற்றும் தகவல் ஆபத்து	தகவல்கள் மற்றும் செயற்பாட்டு வினைத்திறன் தடைகளின்றி செயற்படுவதனை உறுதிப்படுத்தும் பூரணமாக ஒன்றிணைந்த சொத்துக்கள் முகாமைத்துவம், விற்பனை நிலையங்கள் மற்றும் நிதித் தகவல் தொகுதியை செயற்படுத்தல்
இலத்திரணியல் தொகுதிகளில் குறைபாடுகள் மற்றும் தகவல் தொகுதி போதுமானளவு இல்லாமை ஆபத்து	தொகுதியினுள் தடைகள் அல்லது குறைபாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் ஆபத்து தீர்வுத் திட்டத்தின் இருப்பு மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சி
	ஹோட்டலின் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் வீழ்ச்சிகளைக் குறைப்பதற்காக ஹோட்டலின் கணனித் தாபிப்புக்களை பாதுகாப்பதற்கு பொறிமுறைக் கட்டுப்பாடுகள் செயற்படுத்துவதுடன், செயற்பாடுகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. தகவல்களின் பாதுகாப்பு மற்றும் நேர்மையை உறுதிப்படுத்துவதற்காக வலையமைப்பு பாதுகாப்பு செயல்முறை சம்பந்தமாக தொடர்ச்சியாக மீளாய்வுக்குட்படுத்தல்.
உள்ளக செயன் முறைகள், நடைமுறைகள் நிதி நட்டம் மற்றும் வணிகத்திற்கு தடங்கள் ஏற்படல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு தடைப்படுவதற்கான ஆபத்து	தொடர்ச்சியான விளைதிறனுக்காக அவ்வப்போது மீளாய்வுக்குட்படுத்தப்படும் உள்ளக கட்டுப்பாடுகள் இயைபை உறுதிப்படுத்துவதற்காக தெளிவாக விபரிக்கப்பட்ட கட்டமைப்பு மற்றும் நடைமுறைகள் செயற்படுத்தப்படுகின்றன. ஹில்டன் வர்லட் வைட் இன் வெளிவாரியான கணக்காய்வுக் குழுவொன்றினால் முறையான மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த கட்டமைப்புக்களின் அளவு மற்றும் வினைத்திறன் மற்றும் இயைபு மட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.
இயற்கை அனர்தம் மற்றும் மனிதர்களின் நடத்தைகளால் ஏற்படுத்தப்பட்ட அனர்த்தங்கள் கணிசமான அளவினால் ஏற்படுத்தும் சொத்து மற்றும் உபகரணங்கள் பாதிப்பு	காப்பீட்டுப் பாதுகாப்புக்களின் அளவு பற்றித் தினமும் மீளாய்வு செய்யப்படுவதுடன், தேவையான சந்தரப்பங்களில் இற்றைப்படுத்தப்படும் செதத்துக்கள் மற்றும் துரித தீர்வுகளை பாதுகாப்பதற்காக பிரச்சினைகள் முகாமைத்துவம் மற்றும் சொத்துக்கள் பாதுகாப்புத் திட்டம் பயன்படுத்தப்படுகின்றது. இவை அவ்வப்போது மீளாய்வுக்குட்படுத்தப்படுகின்றது.
கடன் ஆபத்து கடனாளிகள் கடனை மீளச் செலுத்தாதிருப்பதனால் ஏற்படும் பாதுகாப்பின்மை மற்றும் நட்டம்	கடனை மீளச் செலுத்துவதனை தட்டிக்கழிக்கும் தாக்கத்தைக் குறைப்பதற்காகக் கடன் கொள்கை மற்றும் கடுமையான நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அறவிடல் இலக்கு மற்றும் தேவையான முன்னெடுத்துச் செல்லல் திட்டத்துடன் கடனாளிகளின் உண்மையான கடன் நிலுவைகள் பற்றிய ஒழுங்குபடுத்தல் மற்றும் மீளாய்வு செய்தல்
திரவத்தன்மை ஆபத்து உரிய தினங்களில் நிதி சார் கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாமை	திரவத் தன்மை மற்றும் இலாபத்துக்கிடையில் சமநிலையை ஏற்படுத்தும் முகமாக அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட இலக்குகளுக்கமைய கம்பனியின் செயற்றிறனை ஒழுங்குபடுத்துவதற்கு முறையான பொறிமுறையொன்று செயற்படுத்தபட்டு வருகின்றது. தீமை பயக்கும் அழுத்தங்களுடனான நிதிப் பாய்ச்சல்கள் ஏற்படாதிருப்பதற்கும் மற்றும் கம்பனியின் நிலைமையை முன்னெடுத்துச் செல்வதற்காக மூலதன முதலீடுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

ஹில்டன் வேர்லட் வைட் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டலுக்கிணங்க ஹோட்டலின் மூலோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் ஆபத்துக்கள் ஏற்படுவதை கணிசமானளவு குறைவடையச் செய்யும் சாத்தியமுள்ள ஆபத்துக்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கான செயன்முறையொன்று வருடம் முழுவதும் செயற்படுத்தப்படுகின்றன. இங்கு ஹோட்டல் கைத்தொழிலின் சிறந்த நடைமுறைகள் மற்றும் சாத்திய வள நிதி ஆபத்துக்கள் கருத்தில் கொளள்ளப்பட்டன. இடர்நில முகாமைத்துவக் குழு ஹோட்டலின் வர்த்தக ஆபத்து முகாமைத்துவ முறையை மீளாய்வுக்குட்படுத்தியுள்ளதுடன் ஆபத்து முகாமைத்துவ நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதென்பதை கவனத்தில் கொண்டுள்ளது.

2017.12.31 இல் முடிவடைந்த வருடத்தில் கொழும்பு ஹில்டன் ஹோட்டல் ஆபத்துக்கள் தொடர்பான அட்டவணையில் உள்ளடக்கியுள்ள பிரதான விடயங்கள் மற்றும் அவற்றின் நிலமைகள் மற்றும் அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கான மூலோபாயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆபத்து வகை மற்றும் விபரம	ஆபத்தைக் குறைப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அமுலாக்கல் திட்டம்
செயற்பாட்டு ஆபத்துக்கள்	
போட்டித் தன்மை இடர்நிலை சவால் சந்தைப் பங்கு குறைவடைதல் நவீனமயப்படுத்தல் திட்டங்கள் காரணமாக குறைந்தளவில் தங்குமிட வசதிகளைப் பெறல் மற்றும் அறைக் கூலி குறைவடைந்தமை காரணமாக போட்டித் தன்மை இல்லாமை	வழங்கப்படும் சேவைகள் மற்றும் பணத்தின் பெறுமதிக்காக மிகச் சிறந்த நிலைமையைப் பெற்றுக் கொடுப்பதற்காக சேவைத் தரங்களை கடுமையாகப் பின்பற்றுதல் வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் அதிகரித்தல் வர்த்தகப் பெயர் தரம் மற்றும் செயற்பாட்டுத் தரங்களைப் பின்பற்றுவதனை மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் போட்டியாளர்களை பாதுகாக்கும் மற்றும் அதற்கமைய உத்திகளைத் தயாரித்தல். உற்பத்திகள் மற்றும் சேவைகளின் தொடர்ச்சியான படைப்புக்கள் மற்றும் புத்தாக்க நடவடிக்கைகள் புதிதாக வருவோரின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கான திட்டங்கள் மற்றும் விருந்தாளிகளின் பதிலளிப்பைத் தொடர்ச்சியாக மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் திருப்திக்காக அவற்றுக்குப் பதிலளித்தல்
வர்த்தகப் பெயர் மற்றும் நற்பெயர் தொடர்பான இடர்நிலை சவால் கம்பனியின் வர்த்தகப் பெயருக்கு மற்றும் நற்பெயருக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் ஏதேனுமொரு நிகழ்வு மற்றும் செயற்பாடு மேற்கொள்ளப்படல்	HACCP மற்றும் ஏனைய தரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுதல் ஊடாக சூழலியில், சுகாதார மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான சிறப்பான நடைமுறைகளுடன் இசைவாகச் செயற்படல். உற்பத்திகள் மற்றும் சேவைகள் ஆகிய இரண்டு விடயங்கள் தொடர்பில் நன்மை பயக்கும் கைத்தொழில் பிரயோகங்களைப் பின்பற்றுதல் பிரதான முகாமைத்துவப் பதவிகளை ஹோட்டல் கைத்தொழில் சம்பந்தமான போதுமானளவு அனுபவத்துடனான தகமை பெற்ற பயற்சியளிக்கப்பட்ட பணியாட் குழுவே வகிக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தல் வர்த்தகப் பெயர் தொடர்பான நம்பிக்கையை பேணி நவீனமயப்படுத்தப்பட்ட சேவைகளைப் பெற்றுக்கொடுக்கும் சமூக உபசரணை சேவைகளின் ஊடாக பொறுப்பு வாய்ந்த நிறுவனத்தின் அங்கத்தவராக இருத்தல் செயற்திறன் மதிப்பீட்டு செயற்பாட்டின் ஊடாக எழும் கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் வெளிப்படையான பயிற்சிக்கான வாய்ப்புக்களை வழங்குதல்.
மனித வளங்கள் ஆபத்து பிரதான பணியாட் தொகுதி மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் இழக்கப்படும் ஆபத்து மற்றும் பொருத்தமற்ற தொழிலாளர் செயற்பாடுகள் பாதிப்புக்களுடன்கூடிய சேவை நிலைமைகள் இரசாயனப் பெருட்களுக்குப் பாதுகாப்பு இல்லாமையினால் ஊழியர்கள் காயத்திற்குட்படக்கூடிய உடல் நலப் பாதிப்பு ஆபத்துக்கள்	சிறந்த தொழில் திருனர் மற்றும் தொழிலாளி தொடர்புகள், ஊழியர் நலனோம்பல் வசதிகள் மற்றும் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக தொழிற் சங்கங்களுடன் பயன்மிக்க மற்றும் வெளிப்படையான தொடர்பாடலைப் பேணிவருதல் ஒன்றுகூடல்கள், சுற்றுப் பயணங்கள், குடும்ப அங்கத்தவர்கள் சகிதம் ஒன்றுகூடல் மற்றும் சமயம்சார் வைபவங்கள் ஊடாக நிறுவனம் பூராகவும் ஒற்றுமை சம்பந்தமான உணர்வுகள் மற்றும் சுய உரிமையை வளர்த்தல். சந்தையில் மிகவும் போட்டித் தன்மைமிக்க வகையில் முக்கிய குழு அங்கத்தவர்களின் சம்பள மட்டத்தை சீர்படுத்தல் விதிக்கப்பட்ட பாதுகாப்பு தரங்கள் மற்றும் நடைமுறைகளை தீவிரமாகப் பின்பற்றுதல்.

நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கையிடல்

ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் முகாமைத்துவ அலுவல்களை மேற்கொள்கின்ற ஹோட்டல் டிவலபர்ஸ் பிஎல்சீ (எச்டீஜ) கம்பனியினால் பொறுப்புக்கூற வேண்டிய விருந்தோம்பல் உபசரணைக் கைத்தொழிலின் புதிய அளவுகோள்களைத் தயாரிப்பதற்காக மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சியின் பயனாக செயற்படுத்தப்பட்டுள்ள நிலைபேறான மூலோபாயம் ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் வழிநடாத்தல் மூலம் ஏற்படுகின்ற அனைத்து விதமான குறிப்பிடத்தக்க பொருளாதார சமூக, சூழல் சார்புடைய தாக்கங்களை இனங்கண்டு அவற்றைப் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது.

இந்த மூன்று தூண்களின் மீது அமையப்பெற்றதாகச் செயற்படுகின்ற ஹில்டன் ஹோட்டலின் செற்பாடுகளுடன் தொடர்புடைய அனைத்து தரப்புக்களதும் வெளிப்படையான உரையாடல்களை கட்டியெழுப்ப உதவியாக அமைவதோடு நீண்டகால அடிப்படையில் நிலையான அபிவிருத்தியை உறுதி செய்யும் பொருளாதார, சமூக மற்றும் சூழல் தாக்கங்கள் முகாமைத்துவம் மற்றும் குறைத்துக்கொள்வதற்காக எதிர்கால விடயங்களை வெளிக்காட்டுவதற்கான வசதிகளை வழங்குகின்றது.

நிலைபேறான சுற்றுலா


இலங்கையில் பிரகாசிக்கின்ற அதிவிசேட விருந்தோம்பல் உபசார நிறுவனமொன்றாக 30 வருட பூர்த்தியைக் கொண்டாடுகின்ற ஹில்டன் கொழும்பு ஹோட்டல் பொறுப்புடைய நிறுவனமொன்று என்ற அடிப்படையில் தனது நீண்ட கால உரிமைகளை மேலும் விருத்திசெய்வதற்கு முழுமையாக அரப்பணிப்போடு செயற்படுகின்றது.

2017 ஆம் ஆண்டு தொடர்பாக குறிப்பாக ஆராயும் போது, ஐக்கிய நாடுகள் சபையினால் அவ்வருடம் சர்வதேச நிலைபேறான சுற்றுலா வருடமெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சந்தரப்பத்தில் உலகளாவிய அடிப்படையில் ஹில்டன் வியாபார நாமத்தை நிலைநிறுத்திக் கொண்டுள்ள, அதிசொகுசு விருந்தோம்பல் உபசாரம் மற்றும் பொருட்கள் கொண்ட நிலைபேறானது என்பது தொடர்பில் பேணப்பட்டு வருகின்ற உயர்தரங்களுக்கு இசைவாக உலக நிலைபேறான சிறப்பான நடவடிக்கைகளுக்கு இசைவாகச் செயற்படுவதற்கு ஹோட்டல் தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது.

மீளாய்வு வருடத்தினுள் ஹோட்டலின் மனித வளங்களை தொடர்ச்சியாக மேம்படுத்தும் நோக்கத்தோடு கூட்டு முயற்சிகளினூடாக நிலைபேறான முகாமைத்துவத்தின் புதிய அம்சங்களை வளர்ப்பதற்கு ஹோட்டலினால் சிறப்பான முய்ற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஹோட்டல் இந்த வெற்றிகளை விரிவான மக்களின் பங்கேற்புடன் பல கருத்திட்டங்களை மேற்கொண்டும், உள்நாட்டு பிரசைகளின் பால் நேர்க்கணியத் தாக்கங்களை ஏற்படுத்தியும், பங்குரிமையாளர்களுக்கு தொடர்ச்சியான நிதிப்பெறுகைகளை செய்து கொடுத்தும், ஹோட்டலுக்கு வருகைதந்த விருந்தினர்கள், பணியாட் குழுவினர், வழங்குனர்கள் மற்றும் வர்த்தக பங்குடமையாளர்களின் தேவைப்பாடுகளை உயிர்ப்பான வித்தில் பூர்த்தி செய்துகொள்கின்ற அடிப்படையிலும் தமது செயற்பாடுகளை சூழல் தாக்கத்தைக் குறைப்பதற்கான முதலீடுகளைச் செய்திருக்கின்ற ஒரு சூழ்நிலையினுள்ளாகும் என்பது விசேடமாகக் குறிப்பிடக் கூடிய ஓர் விடயமாகும்.

எமது பணியாட்குழு

கொழும்பு நகரில் ஹோட்டல் பிரிவின் சிறந்த முன்னோடி என்ற வகையில் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் உயர்ந்து மிளிர்கின்றது. அதிவிசேட சேவை தொடர்பாக எமக்குச் சொந்தமான நற்பெயர் எமது சிறந்த ஊழியர்கள் அனைவரதும் கூட்டு முயற்சியின் நேரடி பெறுபேறாகும். மேற்படி முயற்சிகள் வெற்றியடைவதற்கு ஊழியர்களின் பண்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் பலமான, தொழில் மற்றும் வாழ்க்கை என்பவற்றுக்கிடையில் நடுநிலைமைப் போக்கைப் பேணிக்கொள்வதற்கும் மற்றும் எதிர்வருகின்ற வருடங்களிலும் இத்துறையில் முன்னணியாளராக பயணிப்பதற்கு ஹோட்டலை வலுவாக்கம் செய்யும் நோக்கில் சேவையாற்றுகின்ற புதிய தலைமுறையினரை தோற்றுவிக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் சகிதம் ஆட்சேர்ப்பு, பயிற்சி, மற்றும் திறன்விருத்தி போன்ற அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய கட்டமைக்கப்பட்ட மற்றும் சிறந்த மனித வள முகாமைத்துவத்தை பேணிக்கொள்வதற்கு ஹில்டன் கொழும்பு ஹோட்டல் தொடர்ச்சியாக செயற்பட்டுவருகின்றது.



நீலப்பசுமை எரிசக்தி மூலங்களின் வளர்ச்சி

கடந்த வருடம் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் தொடர்ச்சியாக அனுபவிக்கின்ற அதி சிறந்த வெற்றி எமது மனித மூலதன அபிவிருத்தி மற்றும் தக்கவைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முற்போக்கான அணுகுமுறையின் நேரடியான பெறுபேறாகும். ஹோட்டலின் மேற்படி வெற்றி எம்மிடம் சமூகமளிக்கும் ஒவ்வொரு விருந்தினரையும் உயர் மட்டத்திலான திருப்தியை வழங்குவதற்கான எம்மிடமுள்ள சாத்தியவளப்பாட்டின் அடிப்படையில் தங்கியிருப்பதால், திருப்தி மற்றும் நம்பிக்கை தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர் திருப்தி தொடர்பாக நாம் தொடர்ந்து மேற்பார்வை செய்து வருகின்றோம். இதற்காக சேவைபெறுநர் அனுபவங்களை மேற்பார்வை செய்து, எமது சேவைகள் மற்றும் பெறுமதி சேர்த்தலை மேலும் மேம்படுத்துதற்காக பயன்படுத்தப்படுகின்ற முக்கிய போஷனைகளைப் பெற்றுக்கொள்ளல் வரை அளவிடப்படுகின்ற 10 புள்ளிகள் வரை வழங்குகின்ற விரிவான தரப்படுத்தல் வழிமுறையொன்று பயன்படுத்தப்படுகின்றது.

வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்தல் தொடர்பாக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் முக்கியமான பணியினை ஆற்றுவதோடு, கம்பனியின் உண்மையான வெற்றி தங்கியிருப்பது, அதன் பணியாட்குழுவின் அங்கத்தவர்களின் செயலாற்றுகையின் அடிப்படையிலாகும். எம்மிடம் வருகைதருகின்ற ஒவ்வொரு விருந்தினருக்கும் உரிய மரியாதை, நட்பான உயர் உபசரிப்பு கிடைக்கப்பெற்றுள்ளதென உணரச் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் ஹில்டன் வர்த்தகப் பெயர், உறுதியுரைக்கமைய பணியாட்குழு உறுப்பினர்கள் அனைவரும் செயற்படுவதையும் அதற்காக அர்ப்பணிப்புச் செய்வதையும் உறுதிசெய்கின்றது.

சமூகத் தொடர்புகள், குழுத் தொடர்புகள், வாடிக்கையாளர் தொடர்புகள் மற்றும் நிலைபேறான தன்மை ஆகிய



அமர்ந்திருத்தல் (இடமிருந்து வலமாக)
ஆர்.ஜே.பிரணாந்து (ரெட்கிளிப்) ரீ.என் த மெல் (டானியா) எம்.ரீ.போதினாகொட (போதி) எச்.சீ.டீ. பெரேரா (தேவிகா) எச்.ரீ.ஏ. மென்டிஸ் (ஹேதர்) கே.எஸ்.ஈ. மொஹொட்டி (கபில)

நிற்றல் (இடமிருந்து வலமாக)
வி.ஜீஎஸ். ரோகண (ரோகண) ஆர்.எம்.வயிஸ் (வயிஸ்) ஏ.செம்சன் (எலெக்ஸ்) டி.டி.உபாலி (உபாலி) என்.ஜே. தேசப்பிரிய (தேசப்பிரிய) ரீ.டீ.ஏ. ஜயந்த (ஜயந்த)

தூண்களின் அடிப்படையில் கட்டியெழுப்பி விருந்தினர்கள், பணியாட்குழு உறுப்பினர்கள் மற்றும் பிரசைகளுக்கு ஹோட்டல் மூலம் வழங்கப்படுகின்ற அனுபவம் தொடர்பில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தி, பெறுமதிகள் குறைவடையாமல் பேணிக்கொள்வதற்கும், வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் வெற்றிகள் தொடர்பான சுவையான விடயங்களை பகிர்ந்து கொள்வதற்கும் ஹோட்டல் ஊழியர்கள் வசமுள்ள ஆற்றலை மேம்படுத்துகின்ற சேவைக் கலாச்சாரத்தை பேணிக்கொள்ளும் குறிக்கோளுக்காக இந்த செயற்பாடுகள் நீலப்பசுமை எரிசக்தி எரிபொருள் குழு ஊடாக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

ஹில்டன் ஹோட்டல் மனித வளப் பிரிவின் தலைமையில் பல்வேறு திணைக்களங்களின் பணியாட்குழு உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 50 பேர் இந்தக் குழுவில் உள்ளடங்கியுள்ளதோடு ஹோட்டலின் பொதுமுகாமையாளர் மேற்படி குழுவின் தலைவராகச் செயற்படுகின்றார்.



நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கையிடல்

மீளாய்வு ஆண்டினுள் தாக்கம், ஆக்கத்தின் மற்றும் அர்த்தமுள்ள தொடர்புகள் மூலம் பணியாட்குழுவின அங்கத்தவர்களுக்கு சிறப்பாக வாழ்வதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதோடு ஊழியர்களின் நலனுக்காக தொடர்ந்து மேற்கொள்ளப்படும் முதலீடுகள் ஊடாக உடலியல், உளவியல் மற்றும் ஆண்மீக விருத்திக்கும், வளம் பெறுவதற்கும் பணியாட்குழு அங்கத்தவர்களுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பாக கவனம் செலுத்துகின்ற thrive@Hilton நடவடிக்கைகளை அமுல்படுத்தல் மேற்குறித்த பணிகளுக்குப் பலத்தை வழங்கியுள்ளது.

ஆட்சேர்ப்பு, பயிற்சிகள் மற்றும் திறன் விருத்தி

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கைத்தொழிலின் துரிதமாக வளர்ச்சியடையும் தேவைப்பாடுகளோடு ஒப்பீட்டளவில் ஹோட்டல் கைத்தொழில் துறையில் இணைந்து கொள்கின்ற பயிற்சியளிக்கப்பட்ட தொழில் வல்லுநர்களின் தட்டுப்பாடு மேலும் அதிகரித்துச் செல்கின்ற சூழ்நிலையொன்றினுள் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு சவால்மிக்கது போன்றே உயர் முதன்மைத்துவம் கொண்ட ஒரு பணியாகும். கொழும்பு ஹில்டன் ஹோட்டல் அனைவருக்கும் சமவாய்ப்புக்களை வழங்குகின்ற கொள்கைக்கு ஏற்ப மிகவும் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் தெரிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு பக்கச்சார்பற்ற நியதிகளின் அடிப்படையில் ஹோட்டல் பணியாட்குழு உறுப்பினர்களை ஆட்சேர்ப்புச் செய்து கொள்ளல் மேற்கொள்ளப்படுகின்றது. ஏதேனும் விசேட திறமைகள் மற்றும் அனுபவம் என்பன தேவையான பதவிகள் தவிர ஏனைய பதவிகளுக்காக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பயிலுநர்களாக ஆட்சேர்புச் செய்யப்படுகின்றனர்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கடந்த மூன்று தசாப்த காலச் செயற்பாடுகளின் போது இந்தக் கொள்கைகள் மூலம் பாரிய பல வெற்றிகளை அடைந்து கொள்வதற்குச் சாத்தியம் கிடைக்கப்பெற்றதோடு, ஹோட்டலுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பெரும்பாலான ஊழியர்கள் ஹோட்டலினால் வழங்கப்படுகின்ற சர்வதேச தரத்திலான தொழில் விருத்தி மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் மூலம் நன்மை பெற்று தலைமைத்துவப் பதவிகளுக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்ட செயற்றிறன் கொண்ட ஊழியர்களாக முன்னேறியுள்ளனர்.

அது தொடர்பாக ஆராந்து பார்க்கும் போது, ஹோட்டல் கைத்தொழிலில் பணியாட்குழுவினரைத் தக்க வைத்துக் கொள்ளும் வலுவான விகிதாசாரமொன்றைத் தொடர்ச்சியாகப் பேணிக் கொள்வதற்கு ஹில்டன் கொழும்பு ஹோட்டலுக்குச் சாத்தியம் கிடைத்ததோடு அது முதன்மையான மனித வள முகாமைத்துவத்திற்கான புதிய அளவுகோள்களை விதிப்பதற்கான தொடர்ச்சியான முயற்சியொன்றில் கொழும்பு ஹில்டன் ஹோட்டல் ஈடுபட்டுவருகின்றது.

மீயாய்வு ஆண்டில் ஹில்டன் கம்பனி உலக அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தொடரறாத் திறன்விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஹோட்டலினுள் ஒழுங்காக தினசரி நடைமுறைப்படுத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளின் கீழ் தற்போதுள்ள பணியாட்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்கள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

- தொழிநுட்பத் திறன்கள்
- பல்வேறு தரங்கள் மற்றும் பாதுகாப்புத் தரநியமங்களுக்குரிய பயிற்சிகள்
- மென் திறன்கள்
- தலைமைத்துவ விருத்தி

தொழில் பயிலுநர் பயிற்சிகள்

நிரந்தர பணியாட்குவினரின் திறன்களை விருத்தி செய்யும் அதே வேளை இளைஞர் சமூகத்தை இந்தக் கைத்தொழிலின் பால் கவர்ந்து கொள்வதனையும், கைத்தொழிலில் தக்க வைத்துக் கொள்வதனையும் குறிக்கோளாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஹோட்டல மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அத்தகைய செயற்பாடுகளில், முதன்மைத் தரம் கொண்ட விருந்தோம்பல் உபசார கல்வி நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்படுகின்ற உள்ளக, மற்றும் கைத்தொழில் பயிலுநர் பயிற்சி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் இதிலடங்கும்.

தேர்ச்சிமிக்க தொழில்களுக்கு இளைஞர்களைர் பயிற்சியளிப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களான தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழிநுட்ப பயிற்சி அதிகார சபையுடன் மிக நெருக்கமாகச் ஒத்துழைப்போடு செயற்பட்டு ஹோட்டலின் பல்வேறு திணைக்களங்கள் மூலம் ஐந்து தொழிற்பயிற்சி நிகழ்சித்திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி தொழிற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஐந்தினுள் கீழ் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களும் உள்ளடங்கும்:

- சமயலறை தொழிற்பயிலுநர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
  (பயிற்சிக் காலம்: 30 மாதங்கள்)
- பொறியியல் தொழிற்பயிலுநர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
  (பயிற்சிக் காலம்: 24 மாதங்கள்)
- வீட்டுப் பராமரிப்பு மற்றும் அழகுபடுத்தல் தொழிற்பயிலுநர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
  (பயிற்சிக் காலம்: 12 மாதங்கள்)
- உணவு மற்றும் குடிபானம் தயாரித்தல் தொடர்பான தொழிற்பயிலுநர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
  (பயிற்சிக் காலம்: மூன்று 18 மாதங்கள்)





- சமயலறை உதவியாளர் தொழிற்பயிலுநர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (பயிற்சிக் காலம்: 12 மாதங்கள்)

ஹில்டன் ஹோட்டல் வேலை வாய்ப்புக்கள் (Careers@Hilton)

விருந்தோம்பல் துறையில் காணப்படுகின்ற தொழில் வாய்ப்புக்கள் மற்றும் நன்மைகள் தொடர்பாக தேசிய இளைஞர் யுவதிகளுக்கு மற்றும் தொழில் தோடுவோரை மையமாகக் கொண்டு கல்வி மற்றும் ஊக்குவிப்பு நிகழ்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக உலகம் முழுவதிலுமுள்ள ஹில்டன் ஹோட்டல் அனைத்தையும் மற்றும் அவற்றின் உத்தியோகத்தர்களையும் இணைந்துக் கொண்டு வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகின்ற மே மாதத்தில் நடாத்தப்படுகின்ற Careers@Hilton நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. 2014 ஆம் ஆண்டில் ஹில்டன் பிரதான நிறைவேற்று அதிகாரி, கிரிஸ் நேசேட்டா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட Careers@ Hilton நிகழ்ச்சித்திட்டத்திற்கு உலகம் முழுவதிலுமுள்ள ஹில்டன் ஹோட்டல்களின் அனுசரனை கிடைக்கப்பெறுவதோடு 2019 ஆம் ஆண்டாகும் போது ஒரு மில்லியன் இளைஞர்களை தொடர்புபடுத்திக் கொள்வதற்கு, தயார் செய்வதற்கு அல்லது தொழிலில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு ஹில்டன் கம்பனியின் உண்மையான அர்ப்பணிப்பு ஒத்துழைப்பு வழங்க கிடைத்த பெறுமதிமிக்க சந்தர்ப்பமொன்றாக இதனைக் குறிப்பிட முடியும்.

ஹில்டன் கொழும்பு ஹோட்டல் தொழில் மற்றும் சமூக பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 2017/2018 ஆண்டு முழுவதும் செயற்படுத்தப்பட்டதோடு அவ்வாறு நடாத்தப்பட்ட விசேட முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் சில பின்வருமாறு:

- வாசிப்பதற்கு அறை: மொனராகலை மாவட்டத்தின் பெண் மாணவிகள் எமது ஹோட்டலில் நடாத்தப்பட்ட தொழில் அனுசரணை நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்டதோடு ஹோட்டலில் இரவைக் கழிப்பதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிட்டியது.
- வாசிகசாலைச் சுற்றுலா அநுராதபுரத்திற்கு: மே மாதம் 31 ஆம் திகதி நடைபெற்ற இந்த வாசிகசாலைச் சுற்றுலா நிகழ்ச்சித்திட்டத்தில் ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் ஊழியர்கள் கலந்து கொண்டனர். இந்த சுற்றுலாவின் போது தபுத்தேகம மற்றும் நொச்சியாகம பிரதேசப் பாடசாலைகளில் 60 மாணவிகள் உண்மையாகவே கல்வி கற்கும் விதம் தொடர்பாக அவதானிப்பதற்கும், அவர்களுடன் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கும், விருந்தோம்பல் கைத்தொழில் துறையில் காணப்படுகின்ற தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக அவர்களுக்கு விடயங்கள் தெளிவுபடுத்துவதற்கும் எமது குழுவினருக்குச் சந்தர்ப்பம் கிட்டியது.
- தொழில் வழிகாட்டல் செயலமர்வு மற்றும் பழக்கப்படுத்தல் சுற்றுலா: கொழும்பு, விருந்தோம்பல் சேவைகள் கல்வி நிறுவனத்தின் மாணவ

நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கையிடல்

மாணவிகள் விருந்தோம்பல் சேவைத் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களை அறியும் கூட்டமொன்றுக்கு ஹோட்டலுக்கு வருகை தருவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

- தொழில் வழிகாட்டல் செயலமர்வு: அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பிரதேசத்தில் 16 - 20 வயதுக்கிடைப்பட்ட 10 இளைஞர்கள் அடங்கிய குழுவொன்று தொழில் வழிகாட்டல் மற்றும் தொழில் பயிற்சி அமர்வொன்றில் பங்குபற்றுவதற்காக ஹில்டன் கொழும்பு ஹோட்டலுக்கு வருகை தந்ததோடு இரண்டு மணித்தியாலங்கள் வரை நடைபெற்ற மேற்படி அமர்வில் விருந்தோம்பல் சேவைகள் கைத்தொழிலில் மற்றும் இந்த ஹோட்டலிலுள்ள சந்தர்ப்பங்கள் தொடர்பாக சிறந்த புரிந்துணர்வொன்றை அவர்களுக்குப் பெற்றுக் கொள்ள முடிந்தது.
- இலங்கை சாரணர்களுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வு: நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் வருகைதந்த இளம் சாரணர்கள் 450 பேரின் பங்களிப்புடன் இலங்கை சாரணர்களுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வு மே மாதம் 21 ஆம் திகதி ஹில்டன் ஹோட்டலின் கிராண்ட்ட போல்ரூம் மண்டபத்தில் நடாத்தப்பட்டது. மேற்படி செயலமர்வில் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் மூலம் தொழில் வழிகாட்டல், உணவு பரிமாறல் முறைகள் மற்றும் விருந்தோம்பல் சேவைக் கைத்தொழிலிலின் எதிர்காலம் தொடர்பாக அமர்வுகள் நடாத்தப்பட்டன.
- ஹில்டன் கொழும்பு ஹோட்டல் இளைஞர் மாநாடு 2017: மே மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற நான்காவது வருடாந்த இளைஞர் மாநாட்டுக்கு நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் அமையப்பெற்றுள்ள பாடசாலைகள் மற்றும் நிறுவனங்கள் என்பனவற்றைப் பிரதிநிதிப்படுத்தி 359 மாணவர்கள் கலந்து கொண்டதோடு எதிர்காலம் என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த அமர்வு மனித பரிணாமம் முதல் முக்கியமான வரலாற்றுக் காலப்பகுதிகள் மற்றும் ஹில்டன் ஹோட்டலுக்கு முக்கியமான காலப்பகுதிகளை வெளிப்படுத்தும் வீடியோ காட்சியொன்றுடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் இறுதி வினா, விடை அமர்வின் போது ஹோட்டல் பொது முகாமையாளருடன் நேரடியாக கலந்துரையாடுவதற்கான அரிய சந்தர்ப்பம் கூட்டத்தில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு கிட்டியது. அங்கு எதிர்காலத்தில் நிகழக் கூடிய ஒரு சம்பவம் தொடர்பாக தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான செயற்பாடொன்றும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதோடு மாணவர்கள் அதில் மிகவும் உற்சாகத்தோடு கலந்து கொண்டனர். மிக வெற்றிகரமாக நடைபெற்ற இளைஞர் மாநாடு தொடர்பாக பங்குபற்றிய மாணவர்கள் அனைவரும் மிகவும் நேர்க்கணிய அடிப்படையில் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.
- தொழில் வழிகாட்டல் செயலமர்வு: மே மாதம் 23 ஆம் திகதி அம்பந்தோட்டை, செவனகல வித்தியாலயத்தில் க.பொ.த (உ/தரம்) பூர்த்தி செய்த 47 மாணவர்கள் பழக்கப்படுத்தல் சுற்றுலாவொன்றில் கலந்து கொண்டு அன்றய தினம் ஹில்டன் கொழும்பு ஹோட்டலில் நடைபெற்ற தொழில் வழிகாட்டல் செயலமர்வில் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட சகல மாணவர்களும் தமது அடிப்படைக் கல்வியைப் பூர்த்தி செய்துள்ள தொழில் எதிர்பார்ப்போடு உள்ளவர்களாவர். கொழும்புக்கு வருகை தந்த அவர்களுக்கு விருந்துபசாரக் கைத்தொழில் தொடர்பான அடிப்படை விடயங்கள் கற்பிக்கப்பட்டதோடு ஹோட்டலின் முக்கிய தொழிற்பாட்டு இடங்கள் உள்ளிட்ட அதன் அழகைப் பார்வையிடுவதற்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு விருந்தோம்பல் கைத்தொழில் துறையில் காணப்படுகின்ற வரையறைகளற்ற வாய்ப்புக்கள் தொடர்பாக அவர்களை தெளிவு படுத்துவதற்கான சாத்தியம் கிட்டியது.

பெண்களை பலமும் சக்தியும் பெறச் செய்வதற்கான செயற்பாடுகள்

மனித வளத்தின் சிறப்பான பயன்பாடு தொடர்பாக ஹில்டன் வியாபாரப் பெயர் பிரவேசம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட மற்றுமொரு முக்கிய பிரிவாக அமைத்தது, பெண்களை வலுவூட்டுவதற்காக தொடர்ந்து செயற்பட்டமையாகும். மார்ச் மாதம் 8 திகதிய சர்வதேச மகளிர் தினத்திற்கு இணையாக தென்கிழக்கு ஆசியா, இந்தியா ஆகிய நாடுகளில் அமைந்துள்ள ஹில்டன் ஹோட்டல் இணைந்து ஆண், பெண் சமத்துவம் மற்றும் பெண்கள் வலுவூட்டலுக்காக வழங்கும் உண்மையான அர்ப்பணிப்பை தீவிரப்படுத்தும் நோக்கில் சமூக கருத்திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டன.

2014 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பெண்களை வவலுவூட்டல் தொடர்பான கொள்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் தலைமை நிறைவேற்று அதிகாரி கூற்றில் கைச்சாத்திட்டுள்ள ஹில்டன் ஹோட்டல், பெண்கள் தலைமைத்துவம், வர்த்தக பங்காளர்கள் அடிப்படையில் பெண்களை தொடர்புபடுத்திக் கொள்ளல் மற்றும் கல்வி, பயிற்சி மற்றும் தொழில் அபிவிருத்தி மூலம் பெண்கள் சார்பில் முதலீடு செய்கின்ற சமூகப் பங்களிப்பை ஊக்குவித்தல் தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டது.

2017 ஆம் வருடத்தினுள் ஹோட்டல் மூலம் தற்போது பாடசாலைகள் மற்றும் ஹோட்டல் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவிகளை மையமாகக் கொண்டு செயலமர்வுகள், தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள் மற்றும்

பழக்கப்படுத்தல சுற்றுலாக்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் பல நடாத்தப்பட்டன. பணியாட்குழுவின் மகளிர் உறுப்பினர்கள் மூலம் ஆற்றப்படுகின்ற அனைத்துப் பணிகள் சார்பாகவும் அவர்களின் உண்மையான அர்ப்பணிப்பு மற்றும் நிருவாக முயற்சிகளைப் பாராட்டுவதற்காகவும், உயர் எதிர்பார்ப்புக்களுடன் கூடிய பெரிய கனவுகளைக் காண்பதற்காக அவர்களை ஊக்குவிப்பதற்காக செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. மேலும் உள்ளம், உடல் மற்றும் ஆன்மா நலம்பெறச் செய்தல்" எனும் கருப்பொருளின் கீழ் பல்வேறு அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டங்களுக்கு இணையாக, ஹில்டன் கொழும்பு ஹோட்டல், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞானப் பிரிவின் சுற்றுலாப் பொருளாதார மற்றும் விருந்தோம்பல் சேவைகள் முகாமைத்துவ அலகுடன் இணைந்து மார்ச் மாதம் 11 ஆம் திகதி ஹில்டன் கொழும்பு ஹோட்டலில் "சுற்றுலாக் கைத்தொழிலில் பெண்கள் தலைமைத்துவ மாநாடு" ஏற்பாடு செய்யப்பட்டது. மேற்படி மாநாட்டில் ஆண் பெண் சமத்துவம் மற்றும் பெண்கள் வலுப்பெறச் பெறச்செய்தல் ஆகிய தொனிப்பொருள் வலியுறுத்தப்பட்டது.

கொழும்பு, முதலாவது பெண் நகரபிதா மற்றும் நெதர்லாந்து இராச்சியத்தின் கௌரவத் தூதுவர் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் மனிதவளப் பிரிவு பெண் பணிப்பாளர் மற்றும் இலங்கை மகளிர் செயற்பாட்டாளர்கள் பலரின் பங்களிப்புடன் இரண்டு கலந்துரையாடல் அமர்வுகள் மற்றும் இரண்டு வினா, விடை அமர்வுகள் நடாத்தப்பட்டன. 2020 ஆம் ஆண்டாகும் போது உலக சுற்றுலாக் கைத்தொழிலில் அதிக மக்கள் தொகையினர் வருகைதரக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்ற நாடுகளில் ஒன்றான இலங்கையில் சுற்றுலாப் பிரிவுக்காக மகளிர் திறன்களை கூடிய அளவில் கவர்ந்து கொள்வதற்கும்.அதனுள் தக்கவைத்துக் கொள்வதற்கும் உதவக் கூடிய புதிய மூலோபாயங்களை வகுக்க வேண்டியதன் முக்கியத்துவம் இங்கு வலியுறுத்தப்பட்டது.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

அதிசிறந்த விருந்தோம்பல் சேவையொன்றை உறுதி செய்வதில் மிக முக்கியமான அம்சமொன்றான, எம்மிடம் வருகை தருகின்ற விருந்தினர்கள் மற்றும் ஊழியர்களின் சுகாதாரப் பாதுகாப்பின் பொருட்டு உரிய உயர் பாதுகாப்புத் தரங்களை கடுமையாகப் பின்பற்றுவதாகும். உலக ஹில்டன் வேல்ட்வைட் தரங்களுக்கு அமைய, ஹில்டன் ஹோட்டல் கூட்டுமொத்த உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகநலப் பாதுகாப்பு தரங்கள் மேற்பார்வை மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பவற்றுக்காக உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகநலப் பாதுகாப்பு முகாமையாளரொருவர் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் வசம் உள்ளால். அதற்கமைய சகல உணவு தயாரித்தல்/ களஞ்சியப்படுத்தல் உபகரணங்கள் உயர் மட்டத்தில் காணப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு தடுப்பு பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டம் உயர் தரங்களுக்கு ஏற்ப தொடர்ந்து திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், உணவுப் பாதுகாப்பு, சுகநலப் பாதுகாப்பு மற்றும் உணவு நஞ்சாகுதல் தொடர்பாக சமயலறை பணியாட்குழுவினருக்கு தொடர்ச்சியாகப் பயிற்சிகளை வழங்கி மேற்பார்வை செய்யப்படுவதுடன் அதன் மூலம் எமது விருந்தினர்களின் தேவைப்பாட்டை அவர்களின் விருப்பத்திற்கேற்ப எப்போதும் முழுமையாக நிறைவேற்றப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடிகின்றது.

சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தேவைப்பாடுகளை மேற்பர்வை செய்யும் பொருட்டு அதிகாரமளிக்கப்பெற்ற ஆய்வு கூடம் மூலம் குடிநீரின், நீச்சல் தடாக நீரின், குளிர்ச்சியூட்டும் தாங்கிகளில் உள்ள நீரின், விருந்தினர் அறைகளில் உள்ள நீரின் மற்றும் உணவு சமைக்கப் பெறுகின்ற நீரின் நுண்ணுயிர் மற்றும் இரசாயனப் பகுப்பாய்வு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற.

மேலும் உள்ளக வளி (காற்று) அளவினை (IAQ) தரங்களுக்கு இசைவாக உள்ளதென்பதை உறுதி செய்வதற்கு ஹோட்டல் மற்றும் அறைகளின் வளியின் தரம் தொடர்ந்து பரிசீலனை செய்து பார்க்கப்படுகின்றது. தீப்பிடித்தல் ஆபத்தை மட்டுப்படுத்துவதற்காக ஹோட்டல் பெனட்ஹவுஸ் மட்டத்தில் புதிய நீர்த் தெளிப்பு முறைமையை பொருத்தப்பட்டுள்ளது. ஒலி மாசடைதலைத் குறைத்தல் மூலம் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது எமது விருந்தினர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களைக் குறைப்பதற்கு எமக்குச் சாத்தியம் கிடைத்தது.

சமுதாயம்கூசமூகம்

நீலப் பசுமை சக்தி சமூகக் குழுவின் வழிகாட்டலின் கீழ் பணியாட்குழு அங்கத்தவர்களின் சுயவிருப்புடனான பங்குபற்றல் ஹோட்டல் சமூக நடவடிக்கை தொடர்பான மூலோபாயத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். சகல சமூகப் பணிகளின் போதும் தொண்டர் அடிப்படையில் அதில் கலந்து கொள்வதற்கு எமது ஊழியர்கள் காட்டுகின்ற ஆர்வம் காரணமாக அப் பணிகளை சிறப்பாக ஆற்றிக் கொள்வதற்கு முடிந்துள்ளது. ஹில்டன் கொழும்பு தொண்டர் வலையமைப்பு மூலம் தமது அன்றாடக் கடமைகளுகக்கு அப்பால் சென்று, சமூகத்தின் மற்றும் சூழலின் நலனுக்காக தனது பங்களிப்பை வழங்குவதற்கு பணியாட்குழு அங்கத்தவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. தனது சொந்த லீவுவை அதற்காகப் பெற்றுக்கொண்டு சமூகப் பணி நடவடிக்கைகளில் ஈடுவதற்கு ஹோட்டல் தனது பணியாட்குழு உறுப்பினர்களை ஆர்வமூட்டுகின்றது. நீண்ட கால அபிவிருத்தி வாய்ப்புக்களுக்கு

நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கையிடல்

உதவியளிக்கும் குறிக்கோள்களைக் கொண்ட திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக இலங்கை சமூகத்தவர்களை வலுவூட்டுவதற்காக இந்தப் பல்வகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

மீளாய்வு வருடத்தில் செயற்படுத்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள்

- **வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல்**

இந்த வருடத்தில் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்குக் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான நிவாரணம் வழங்குவதற்காக ஹோட்டல் மூலம் சமைத்த 7,000 உணவுப் பொதிகள் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் அடங்கிய 500 பொதிகள் வழங்கப்பட்டன. எமது பணியாட்குழுவினர் மூலம் சுயவிருப்பின் மூலம் வழங்கப்பட்ட அன்பளிப்புக்கள் இந்த நிவாரண உதவிகளை வழங்குவதற்கு பெரிதும் உதவியாக அமைந்ததோடு அவற்றை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

- **தேசிய புற்றுநோய் வைத்தியசாலைக்குச் செய்யப்பட்ட உதவி**

தனது 30 வருட நிறைவு தின விழாக் கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக எமது 5 பிராதன சமையற்கலை நிபுநர்கள் மற்றும் 35 பணியாட்குழு உறுப்பினர்கள் இணைந்து தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் 1,100 நோயார்களுக்கு வைத்தியசாலையில் உணவு சமைப்பதற்கு உதவி செய்ததோடு வைத்தியசாலையின் சிறுவர் வாட்டில் சிகிச்சை பெறுகின்ற பிள்ளைகளுக்கு

விசேட பரிசுப் பொருட்களையும் அன்பளிப்புச் செய்தனர். அதற்கு மேலதிகமாக, ஹோட்டல் மூலம் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான அத்தியவசிய மருந்துப் பொருட்களும் புற்றுநோய் மருத்துவமனைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

- **வெலிஓய பாடசாலையொன்றிட்கு வகுப்பறைக் கணினி வழங்குதல்**

தேசிய மற்றும் உலக பொருளாதாரத்தின் ஒவ்வொரு மட்டங்களையும் நிதியடிப்படையில் வலுவாக்கம் செய்வதற்காக முதன்மை மாற்றங்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பவற்றை உருவாக்குதல் தொடர்பில் தொழில்நுட்பம் ஆற்றுகின்ற பணிகளின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்ற நிலைமையொன்றினுள், ஹோட்டல் தொழிநுட்ப விடயத்தை விசேடமாகக் கொண்டு கல்வி அடிப்படையில் பாரிய பெறுமதியொன்றை வைத்துக் மேலும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த அர்ப்பணிப்பை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக, மீளாய்வு வருடத்தில் ஹில்டன் கொழும்பு ஊழியர்களிலிருந்து அதற்காக சுயமாக இணைந்து கொண்டவர்களின் பங்களிப்பு மூலம் வலுவான நிலையை அடைந்து வெலிஓய, பிரதேசத்தின் கல்யானிபுர வித்யாலயத்தின் கணினி ஆய்வு கூடத்திற்கு 6 கணினிகள் மற்றும் அதற்குத் தேவையான நாற்காலிகள், மேசைகள் என்பனவும் வழங்கப்பட்டன.

- **மாற்றுத் திறனாளிப் பிள்ளைகளுக்காக நடாத்தப்பட்ட சன்சயின் கேம்ஸ் விளையாட்டுப் போட்டிக்காக வசதிகளை வழங்குதல்**

ஹில்டன் கொழும்பு ஹோட்டல் ரொட்டரி கழகத்தோடு இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு, 10 - 21 வயதுக்கிடைப்பட்ட விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட சன்சயின் கேம்ஸ் - 2018 விளையாட்டுப் போட்டியை நடாத்துதல் மற்றும் 550 பகல் உணவுப் பொதிகளை வழங்குதல். பணியாட்குழுவினரின் அயராத முயற்சியின் பயனாக அதனை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்குச் சாத்தியம் கிடைத்தது.

- **வலது குறைந்தோர்களுக்கான விளையாட்டுப் போட்டிக்கு பங்களிப்பு வழங்குதல்.**

ஹில்டன் கொழும்பு ஹோட்டல் கொழும்பு கலண மித்துரு சங்கத்துடன் இணைந்து செயற்பட்டு, வலது குறைந்தவர்களுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கு - ஜெயிப்பூர் பாத நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு 800 உணவுப் பொதிகளை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

- **கொழும்பு நவம் மஹா பெரஹரவுக்கு போஷாக்குப் பொதிகளை வழங்குதல்**

இலங்கையின் வளர்ச்சியடைந்த பண்டைய விசித்திர சடங்குகள், கலாசார சம்பிரதாயங்களை முழுமையாக பேணிவருவதில் ஈடுபட்டுள்ள ஹில்டன் கொழும்பு ஹோட்டல் கொழும்பு நவம் மஹா பெரஹர நடைபெற்ற இரண்டு தினங்களிலும் பெரஹராவில் கலந்துகொண்டவர்களுக்கு 550 பகல் உணவுப் பொதிகளையும் மற்றும் 550 இரவு உணவு பொதிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

- **அறக்கட்டளை நிதி சேகரிப்புக்காக நடாத்தப்பட்ட ஆடைஅலங்கார (வடிவமைப்பு) கண்காட்சிக்கு அனுசரனை வழங்குதல்.**

அறக்கட்டளை நிதி சேகரிப்பிற்காக “Rock the Runway” என்ற பெயரில் விசேட ஆடை அலங்கார கண்காட்சியொன்று ஹில்டன் கொழும்பு ஹோட்டல் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டதுடன் அதன் மூலம் கிடைத்த வருமானம் அனுராதபுரம் மாவட்டத்தின் விலச்சிய பிரதேசத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டினால் அவதிப்படுகின்ற மக்களுக்கு தண்ணீர் சேகரித்து பங்கிடும் கருத்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டது.

- **சுனேர மன்றத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட ஆடை அலங்கார மற்றும் ஆபரணக் கண்காட்சிக்கு அனுசரனை வழங்குதல்.**

சுனேர மன்றத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட ஆடை அலங்கார மற்றும் ஆபரணக் கண்காட்சி மற்றும் 400 பேர் வரையில் பங்குபற்றிய உயர் தர தேநீர் விருந்துபசாரத்திற்கு ஹில்டன் கொழும்பு ஹோட்டல் மூலம் அனுசரனை வழங்கப்பட்டதோடு அங்கு சுனேர மன்றத்திற்கு1.29 மில்லியன் ரூபா அறக்கட்டளை நிதியைச் சேகரிக்க முடிந்தது.

- **அனுராதபுரம் மாவட்டத்தின் ஒரு கிராமத்திற்கு சுழு நீர் சுத்திகரிப்பு இயந்திரமொன்றை அன்பளிப்புச் செய்தல்.**

அனுராதபுரம் மாவட்டத்தின் பின்தங்கிய பாடசாலை ஒன்றின் 300 மாணவர்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பான சுத்தமான குடி நீர் வசதிகளை வழங்குவதற்காக RO தொழிநுட்பத்தில் நீர் சுத்திகரிப்பு செய்கின்ற கருத்திட்டத்திற்காக ஹில்டன் கொழும்பு ஹோட்டல் நிதிப் பிரிவின் பணியாற்றொகுதியின் பூரண பங்களிப்புடன் 350,000 ரூபா தொகை அன்பளிப்புச் செய்யப்பட்டது.

- **இலங்கையில் எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமத்திற்கு போஷாக்கு உதவி வழங்குதல்**

நிர்க்கதியற்ற,கைவிடப்பட்ட அல்லது பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத பெற்றோர்களின் பிள்ளைகளுக்காக குடும்பமொன்றை அமைத்துக் கொடுத்து மற்றும் கல்வி வழங்கி மேற்படி பிள்ளைகளை சிறந்த முறையில் சமூகமயப்படுத்துவதற்காக சிறுவர்கள் தொடர்பாக செயற்படுகின்ற அறக்கட்டளை நிறுவனமொன்றான இலங்கை எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமத்திற்காக" அன்பின் வெளிப்பாடு" (Expression of love) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பணியாட்குழுவின் 5 உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் 100 சிற்றுண்டிப் பொதிகள் வழங்கப்பட்டன.

- **சிறுவர் இல்லங்களுக்கு உதவி வழங்குதல்**

பீட்டர் வீரசேகர சிறுவர் இல்லத்தில்" கமே பொல" நடாத்துவதற்காக மேற்படி சிறுவர் இல்லங்களுக்கு உதவி செய்யும் பொருட்டு கம்பனியினால் எமது பணியாட்குழுவின் அங்கத்தவர்களின் பங்களிப்பின மூலம் லினன் புடவைகள் வழங்கப்பட்டன.

- **விருந்தோம்பல் துறையின் மூடநம்பிக்கைகள் பற்றிய சொல்லாடல் அமர்வு**

ஹில்டன் கொழும்பு ஹோட்டல், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் மற்றும் கொழும்பு விருந்தோம்பல் முகாமைத்துவ கல்வி நிலையத்துடன் இணைந்து பாடசாலை மாணவிகள் 35 பேருக்கு விருந்தோம்பல் துறையின் புனைகதைகளைத் தகர்த்தல் என்ற தலைப்பில் சொல்லாடல் அமர்வு ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் பெண் செயற்பாட்டாளர்கள் பத்துப் பெயர் மூலம் நடாத்தப்பட்டது.

பெண் செயற்பாட்டாளர்கள் ஐந்து பேரின் பங்களிப்புடன் மார்ச் மாதம் 9 ஆம் திகதி கொழும்பு பெண்கள் கல்லூரியில் விருந்துபசார சேவைகள், தொழிலிலுள்ள வாய்ப்புக்கள் மற்றும் மூடநம்பிக்கைகள்" எனும் கருப்பொருளில் மேலுமொரு சொல்லாடல் அமர்வு நடாத்தப்பட்டது.

பணந்துறை ஸ்ரீ சுமங்கள பெண்கள் கல்லூரியின் 60 மாணவத் தலைவிகள் ஹில்டன் கொழும்பு ஹோட்டலில் அரை நாள் முழுவதும் நடாத்தப்பட்ட செயலமர்வில் கலந்து கொண்டதோடு அங்கு ஹோட்டல் கைத்தொழில் தொடர்பான சிறந்த புரிந்துணர்வு மற்றும் தொழில் வழிகாட்டல் வழங்கப்பட்டு பெண்கள் தலைமைத்துவம் மேம்படுத்தப்பட்டது.

சுற்றுச் சூழல்

சேவை பெறுநர் சமூகம் தொடர்பான எமது அர்ப்பணிப்பின் ஓர் அங்கம் என்ற வகையில் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் மூலம் உலகமெங்கும் அரவணைப்பு மற்றும் ஒளி பரப்புகின்ற ஒரு வழிமுறையொன்றாக, நீர், சக்தி பாதுகாப்பு மற்றும் ஏனைய பயனுள்ள நிலையான பயன்பாட்டை நடைமுறைப்படுத்துவதாகும்.

குறைந்த சக்தி நுகர்வை ஊக்குவிக்கின்ற"டுபொவளவயல" நிகழ்ச்சித் திட்டம் மூலம் சக்திப் பாதுகாப்பு.

"லயிட்ஸ்டே" நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நீர், எரிசக்தி நுகர்வு உள்ளிட்ட தனது சுற்றாடல் செயலாற்றுகையை மதிப்பீட்டுக் கொள்வதற்காக உலகம் பூராகவும் பரந்து காணப்படுகின்ற 4,440 வரையான ஹில்டன் ஹோட்டல்களுக்கு சாத்தியப்பாட்டை ஏற்படுத்திக் கொடுத்து தனது முறைமை மற்றும் தொழிநுட்பத்தை உயர்வடையச் செய்வதற்கு ஹில்டன் கம்பனி ஆர்வத்தோடு செயற்பட்டுள்ளது "லயிட்ஸ்டே" நிகழ்ச்சித் திட்டம் என்பது வானிலை, ஹோட்டலில் தங்கியிருக்கின்ற விருந்தினர்களின் எண்ணிக்கை, மற்றும் ஏனைய தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு நீர், எரிசக்தி நுகர்வை அளவீடு செய்து பார்த்தல் மற்றும் முன்னறிவிப்புச் செய்வதற்கு ஒவ்வொரு ஹோட்டலுக்கும் வாய்ப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ள புதிய ஹோடலுக்குள்ளேயே பயன்படுத்திக்கொள்ளகூடிய ஓர் மதிப்பீட்டு முறையாகும். மொத்த செயலாற்றுகை மற்றும் நுகர்வு தொடர்பாக செயலாற்றுகை ஆபத்து அறிவிப்பை முகாமைத்துவத்திற்கு வழங்கவும், எதிர்கால செயலாற்றுகை தொடர்பில் நேர்க்கணியத் தாக்கம் ஏற்படுத்தும் வகையில் மீளாய்வு நடவடிகக்கைகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்ட அறிவார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆர்வத்தை ஊக்குவித்தல் மற்றும் அதற்காக உதவி செய்தல் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கையிடல்

தற்போது மேற்கொள்ளப்படுகின்ற புனரமைப்புப் பணிகள் மூலம் ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் பழுதுபார்ப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுகின்ற பிரதேசங்களின் திட்டத்தில் புதிய சக்தி சிக்கணப்படுத்தல் உதிரிப்பாகங்கள் பல உட்சேர்க்கப்பட்டுள்ளன. மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பழுதுபார்ப்பு நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக செயற்திறன்மிக்க குளிரூட்டி முறைமை மற்றும் LED மின்குமிழ் போன்ற சக்திப் பயன்பாட்டு சிக்கண புதிய உபகரணங்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுவதோடு ஹில்டன் கொழும்பு ஹோட்டல் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லும் போது அது மேலும் விருத்தி செய்யப்படும். சுற்றுப்புற அறை வெப்பநிலை மற்றும் ஏனைய சக்தி சிக்கணப்படுத்தல் அதிநவீன உபகரணங்கள் மறசீரமைப்பு நடவடிக்கைகளின் போது புதிதாக பொருத்தப்படவுள்ளன.

விளைதிறன்மிக்க கழிவு முகாமைத்துவம்

சிறந்த சூழல் தரங்களை பேணிக் கொள்வதை உறுதி செய்து கொள்வதற்காக ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மேலதிக பண்பொன்றாக சேதன மற்றும் அசேதன கழிவுப் பொருட்களை அகற்றுவதற்குரிய கழிவு முகாமைத்துவத்தைக் குறிப்பிட முடியும். சேதன கழிவுப் பொருட்களை சேகரித்து பின்னர் கொம்போஸ்ட் உரம் மற்றும் விலங்கு உணவுகள் என்பன தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

மிஞ்சுகின்ற ஏனைய கழிவுகள், கண்ணாடி வகைகள் ,உலோகக் கழிவுகள் என்பன வேறு பிரிக்கப்பட்டு மேலும் உலர்ந்த மற்றும் ஈரமான கழிவுகள் என்ற அடிப்படையில் வேறு பிரிக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாடுகளின் போது கழிவுகள் அவை ஒன்றுசேரும் இடங்களிலேயே அதாவது சமயலறை, உணவகம் மற்றும் குடிபானசாலை ,லினன் அறை ,பராமரிப்புப் பரிவு களஞ்சியசாலை ,மனையியல் களஞ்சியசாலை மற்றும் விருந்தினர்கள் தங்குகின்ற அறை போன்ற அனைத்துப் பிரிவுகளிலும் கழிவுகள் உடனுக்குடன் வேறு பரிக்கப்படுகின்றன. இந்தக் கழிவு வேறுபடுத்தல் அன்றாடம் ஹோட்டல் வளாகத்தினுள் மேற்கொள்ளப்படுகின்றது. இரண்டாம் தரப்பு மீள் சுழற்ச்சி கம்பனியொன்றுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பதத்தின் பிரகாரம் பிலாஸ்டிக் போத்தல்கள் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன.

அது மாத்திரமன்றி ஹோட்டலின் முழுமையான வழிநடாத்தலினுள் கழிவுப் பொருட்களைக் குறைத்துக்கொள்ளும் நோக்கத்துடன், வேறு பயிற்சியளிக்கப்பட்ட மற்றும் முகாமைத்துவ கோட்பாடுகளோடு ஒன்றிணைந்து உணவுகள் வீண்விரயமாகமை தொடர்பாக பணியாட்குழுவின் அங்கத்தவர்களை அறிவுறுத்தும் நோக்கில் சுவரொட்டிகளை வெளியிடுகின்ற நடவடிக்கையொன்றும் ஹோட்டல் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் சூழலை பாதுகாக்கும் பிரிவின் மூலம் இயற்கை வளங்கள் பொறுப்புக்கூற வேண்டிய மற்றும் நிலைபேறான அடிப்படையில் பயன்படுத்துவதனை வலியுறுத்துகின்ற பாதுகாப்பு பிரவேசமொன்றும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கையில் விருந்துபசார துறையில் முன்னோடி என்ற அடிப்படையிலும் தேசிய கைத்தொழில் பிரிவில் முக்கிய முதன்மையாளர் என்ற அடிப்படையிலும் நிலைபேறான தன்மை மற்றும் சூழல் தாக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாத இற்றைக்கு இரண்டு தசாப்தங்களுக்கு அண்மித்த காலத்திற்கு முன்பிருந்தே ஹோட்டல் மூலம் தாபிக்கப்பட்ட பெறுமதிகளுக்கு இசைவாக இங்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. விரிவான சூழல் பாதுகாப்பு செயற்பாடுகள் பலவற்றின் முதன்மையாளராக செயல்பட்ட ஒரு நிறுவனம் என்ற வகையில் ஹில்டன் கொழும்பு ஹோட்டல் வளங்கள் பயன்பாட்டை மேலும் குறைத்துக்கொள்ளல் மற்றும் கழிவு மீள்சுழற்சிப் பொறிமுறையை வலுப்படுத்தல் மற்றும் குளிரூட்டுவதற்காக மத்திய வலையமைப்பு குளிரூட்டியை பயன்படுத்தல் போன்ற நிலையான எரிசக்திப் பாதுகாப்பு ந.டவடிக்கைகள் திட்டமிடல் மற்றும் ஊக்குவித்தல் தொடர்பில் புதிய வழிமுறைகளை ஆய்வு செய்து கொண்டிருக்கின்ற அதேவேளை அவ்வாறு செயற்படும் நீண்டகால நோக்கமாக அமைவது உலகளவில் காபன் நிலைமையை குறைத்தல் தொடர்பில் முக்கியமான வகிபாகமொன்றை ஆற்றுவதாகும்.

சக்திப் பாதுகாப்புக் கருத்திட்டம் தொடர்பில் தவறான நடத்தைகள் மூலம் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பாக பணியாட்குழுவின் அனைத்து உறுப்பினர்கள் போலவே விருந்தினர்களையும் அறிவுறுத்தல் மற்றும் பணியாட்குழு அங்கத்தவர்கள் சூழல் தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினரெனவும், வழங்குநர்கள் மற்றும் விருந்தினர்களுடன் அவர்கள் அலுவல்களை மேற்கொள்ளும் போது இக்கோட்பாடுகளுக்கு இசைவாக செயற்படுகின்றமையை உறுதிப்படுத்தல் இந்த மூலோபாயத்தில் உள்ளடங்கும்.

கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

ஹோட்டல் டிவலப்பரஸ் (லங்கா) பீஎல்சீ இன் பணிப்பாளர் சபை 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பான அவர்களது அறிக்கை மற்றும் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களை முன்வைப்பதில் பெரும் மகிழச்சியடைகின்றது.

1. ஆண்டு தொடர்பான மீளாய்வு

2017, திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டில் கம்பனியின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் அதன் செயலாற்றுகை சம்பந்தமான மீளாய்வுடன் நிதி விளைவு மற்றும் எதிர்கால மூலோபாய ரீதியிலான அபிவிருத்திகள் சம்பந்தமாக தலைவரின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது (பக்கம் 19)

2. முக்கிய செயற்பாடுகள்

கம்பனியின் முக்கிய செயற்பாடாக அமைவது, கம்பனியின் உரிமையாளர்கள் மற்றும் காணி, கட்டிடங்கள், ஏனைய ஆதனங்கள் தொடர்பான வியாபார அலுவல்களை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை மேம்படுத்தல் மற்றும் தயார்படுத்தல், பூரணப்படுத்தி நிறைவு செய்தல் என்பனவாகும்.

3. நிதிக்கூற்று

கம்பனியின் நிதிக்கூற்று 62 முதல் 90 ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

4. தொடர்ச்சியான இருப்பு

முன்கூட்டியே அனுமானித்துக் கொள்ள முடியுமான எதிர்கால நிலைமையின் போது வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதுமானளவு வளங்கள் இந்தக் கம்பனியிடம் இருப்பதாகப் பணிப்பாளர்கள் திருப்தியடைகின்றனர். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்று தொடர்ச்சியான இருப்பு பற்றிய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

5. கணக்காய்வாளர்களின் அறிக்கை

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வாளர்களின் அறிக்கை 60 ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது பயன்படுத்தியுள்ள முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கம் 67 இல் குறிப்பு இலக்கம் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. வரி செலுத்தல்

நிதிக்கூற்றுக்களில் 26 ஆம் இலக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வீதங்களுக்கமைய வரி ஒதுக்கீடுகள் கணக்கிடப்பட்டுள்ளன.

8. இலாபப் பங்குகள்

கம்பனியினால் தற்போது 52 மில்லியன் ஐ.அ.டொ மதிப்பீட்டுச் செலவொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டம் காரணமாக 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக பொதுவான பங்குகள் அடிப்படையில் இலாபப் பங்கினைப் பணிப்பாளர்கள் சிபாரிசு செய்யவில்லை.

9. பணிப்பாளர் சபை மற்றும் அவர்களின் பங்குரிமைகள்

2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கம்பனியின் பணிப்பாளர்கள் பற்றிய விபரம்

திரு. கிரிஷாந்த பிரசாத் குரே	- தலைவர்
செல்வி. தீஷான அமரசேக்கர	- பணிப்பாளர்
திரு. ஜே.எம்.யூ.ஜீ. ஜயமஹ	- பணிப்பாளர்
திரு. அத்துல சேனாநாயக்க	- பணிப்பாளர்
செல்வி. தெஹானி எஸ்.ஏ. மெதிவ்ஸ்	- பணிப்பாளர்
திரு. தினுக் கொலம்பகே	- பணிப்பாளர்
திரு. ஷெஸ்மின் மன்சூர்	- பணிப்பாளர்
திரு. டப்.எஸ்.எல்.ஏ.டீ.ஆர். சமரசிங்க	- பணிப்பாளர்
செல்வி சொனாலி வியனமாக	- பணிப்பாளர்
திரு. பிரவீர் தனுஷ் சமரசிங்க	- பணிப்பாளர

மேள் குறிப்பிட்ட பணிப்பாளர்கள் எவரும் பங்குகள் வைத்திருக்கவில்லை.

10. உரிமைகள் பதிவேடு

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 192 (2) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பணிப்பாளர் பொதுவான வெளிப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளனர். அதற்கமைய அவர்களுக்கு பிணைப்பு காணப்படும் தொடர்புகள் சம்பந்தமான விபரங்கள் (இருப்பின்) நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 34.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

11. பணிப்பாளர்களின் ஊதியம்

கணக்கீட்டுக் காலப் பகுதியில் பணிப்பாளர்களின் ஊதியம் மற்றும் ஏனைய அனுகூலங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

பணிப்பாளர்களின் ஊதியம் 4,853,000/-

கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

12. பணிப்பாளர்களின் பிணைப்பு / தொடர்புடைய தரப்பினர்களுடனான பரிமாற்றல்கள்

மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 34 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்களுக்கும் ஏதேனும் ஒப்பந்தப் பணிகள் அல்லது அவற்றுடனான நேரடி அல்லது மறைமுகமான பிணைப்புக்கள் எதுவுமில்லை.

13. கணக்காய்வாளர்களுக்கான செலுத்துகைகள்

2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக கணக்காய்வாளர்களுக்கு செலுத்திய அல்லது செலுத்த வேண்டிய தொகை ரூபா 2,469,000/- ஆகும்

14. நன்கொடைகள்

கம்பனி 2017 திசெம்பர் 31 ஆண்டினுள் எவ்விதமான நன்கொடைகளையும் மேற்கொள்ளவில்லை.

15. நிறுவன நல்லாளுகை

கம்பனி நன்மை பயக்கும் நிறுவனம் சார்ந்த நிர்வாகக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துமுகமாக செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளை செயற்படுத்தியுள்ளது. கம்பனியியில் பயனபடுத்தப்பட்ட அவ்வாறான பிரயோகங்கள் சம்பந்தமான பகுப்பாய்வொன்று ஆண்டிறிக்கையின் பக்கம் 38 முதல் 40 வரை விபரிக்கப்பட்டுள்ளது.

16. கணக்காய்வு குழு

கீழ் குறிப்பிடப்படும் விதத்தில் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டில் பல்வேறு சந்தரப்பங்களில் பணிப்பாளர் சபையினால் கணக்காய்வுக் குழு தாபிக்கப்பட்டுள்ளது.

திரு. பிரவீர் தனோ' சமரசிங்ஹ -

சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் (தலைவர்)

திரு. ஜே.எம்.யூ.ஜீ. ஜயமஹ -

சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் (அங்கத்தவர்)

திரு. எம்.ஸ்மின் மன்சூர -

சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் (அங்கத்தவர்)

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை ஆண்டறிக்கையின் 57 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

17. ஊதியக் குழு

கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் 2017 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபையினால் ஊதியக் குழு அமைக்கப்பட்டது.

பணிப்பாளரின் சபை அங்கத்தவரின் பெயர்	நியமிக்கப்பட்ட / நீங்கிய திகதி
திரு. அத்துல சேனாநாயக்க	2016.04.28 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்
திரு. தினுக் கொலம்பகே	2016.04.28 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்
திரு. டப்ளிவ்.எஸ்.எல்.ஏ.டீ.ஆர். சமரசங்க	2016.04.28 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்
திரு. கிரிஷாந்த குரே	2017.01.16 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்

18. மூலதனச் செலவினம்

முக்கிய மூலதனப் பிணைப்பு சம்பந்தமான விபரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 31 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

19. சொத்துக்கள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள், இயந்திரங்கம் மற்றும் உபகரணங்கள் சம்பந்தமான விபரம் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 12 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

20. வெளியிடப்பட்ட மூலதனம்

2017. திசெம்பர் 31 ஆம் திகதியன்று கம்பனியின் வெளியிடப்பட்ட மூலதனம் 20,466,456,858 ரூபாவாவென்பதோடு, 10 ரூபா கொண்ட சாதாரண பங்குகள் 2,046,645,686 இணைக் கொண்டிருந்தது.

21. நிதி அறிக்கைப்படுத்தலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

கம்பனியின் நடவடிக்கைகள் சம்பந்தமாக உண்மையான மற்றும் நியாயமான நோக்கினை வெளிப்படுத்துவதற்காக நிதிக் கூற்றுக்ககளைத் தயாரிக்கும் பொறுப்பு பணிப்பாளர்களுடையதாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு தரங்களுக்கு மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கு இயையாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர்கள் நம்புகின்றனர். அதற்கமைய முன்வைக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் 2017 திசெம்பரம் 31 ஆம் திகதியன்று கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பில் உண்மையான மற்றும் நியாயமான நோக்கினை வெளிப்படுத்துவதாக பணிப்பாளர்கள் திருப்பதியடைகின்றனர்.

22. சட்ட ரீதியான செலுத்துகைகள்

பணிப்பாளர்களின் அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைய அரசாங்கத்திற்கு, மற்றும் கம்பனியின் ஊழியர்களுக்கு உரிய காலப் பகுதிக்குள் செலுத்தப்பட வேண்டிய சகல செலுத்துகைகளையும் செலுத்த முடிந்தமை சம்பந்தமாக அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

23. இருப்புத் தாள் (ஐந்தொகை) தினத்தின் பின்னரான நிகழ்வுகள்

கணக்குகள் தொடர்பான குறிப்பு 30 இல் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் தவிர அறிக்கைப்படுத்தப்படும் திகதியின் பின்னர் கணக்குகளில் சீர்படுத்தலை மேற்கொள்ளவதற்கோ நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு ஏதுவான முக்கிய நிகழ்வுகள் ஏற்படவில்லை.

24. கணக்காய்வாளர்கள்

அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 19 ஆவது திருத்தத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி தொடர்ந்தும் கம்பனியின் கணக்காய்வாளராகச் செயலாற்றுவார்

25. பொதுக் கூட்டம் சம்பந்தமான அறிவித்தல்

கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டம் சம்பந்தமான அறிவித்தல் ஆண்டறிக்கையின் 95 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்
ஹோட்டல் டிவலப்பர்ஸ் (லங்கா) பீஎல்சீ

தனுக்க ரஞ்ஜித் சமரசிங்க
பணிப்பாளர்

தினூக் கொலம்பகே
பணிப்பாளர்

எஸ்.எஸ்.பீ. கோப்பரேட் சர்விசஸ் (பிரைவட்) லிமிடட்.
கம்பனிச் செயலாளர்கள்.

2018 யூலை 23 ஆம் திகதி
கொழும்பு

நிதி அறிக்கையிடல் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்பு

2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் தரங்கள், கொழும்பு பங்குப் பரிவர்த்தணையின் பட்டியல்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைகளுக்கமைய தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதிக் கூற்றுக்களிலிருந்து மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் மற்றும் நிலைமை தொடர்பிலான உண்மையான மற்றும் நியாயமான நோக்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

போதுமானளவு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமான முறைகள் மற்றும் நடைமுறைகளை பணிப்பாளர்கள் செயற்படுத்தியுள்ளதுடன், அதனூடாக கணக்கைச் சீராகப் பேணிவருவதற்கு இலகுவாக இருக்கும்.

பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளன.

கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு. செயற்பாட்டுத் தரவுகளின் நேர்மைத்தன்மை, மிகச் சரியாக இருத்தல் மற்றும் பாதுகாப்மை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் மோசடி மற்றும் ஏனைய சீர்கேடுகளை தவிர்ப்பதற்கு மற்றும் கண்டறிவதற்கு எல்லா வகையான நேர்மையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்தாக பணிப்பாளர்கள் நம்புகின்றனர்.

அத்துடன் ஐந்தொகை (இருப்பு மீதி) திகதியன்று கம்பனி செலுத்த வேண்டிய அனைத்து வரிகள், சுங்கக் கட்டணம் மற்றும் வரிகள் செலுத்தப்பட்டிப்பதனை அல்லது குறிப்பிட்ட ஒதுக்கீடுகளை மேற்கொள்ளப்பட்டிருப்பதனை பணிப்பாளர்களின் அறிவுக்கமைய அவர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

கம்பனியின் நிதி மற்றும் ஏனைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்களின் கருத்து சுயாதீனமாக கணக்காய்வாளர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபைக்காக

தனுக்க ரஞ்ஜித் சமரசிங்க
பணிப்பாளர்

தினுக் கொலம்பகே
பணிப்பாளர்

2018 யூலை மாதம் 23 ஆம் திகதி
கொழும்பு

கணக்காய்வு குழு அறிக்கை

கணக்காய்வுக் குழுச் சாசனம்.

கணக்காய்வுக் குழுச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டள்ள ஏற்பாட்டுக் கட்டளைக்கமைய கம்பனியின் நிதி நடவடிக்கைகளுடன் தொடர்பான விடயங்களை பரீட்சிப்பதற்கு மற்றும் நிதி அறிக்கை மீளாய்வு மற்றும் ஒழுங்குபடுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் உப குழுவொன்றாக கணக்காய்வுக் குழு செயற்படுகின்றது.

கணக்காய்வு குழுவின் அலுவல்கள்

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாக நிதி அறிக்கைப்படுத்தலின் தரத்தை உறுதி செய்து பணிப்பாளர் சபைக்கு அவர்களுக்குரிய பொறுப்புக்களை மேற்கொள்ளும் போது அவர்களுக்கு உதவி புரிவதற்காக பயன்மிக்க குழுவொன்றாக கணக்காய்வுக் குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

- கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு மற்றும் நிதி நிர்வாகக் கட்டமைப்பு சம்பந்தமான கம்பனியின் நேர்மைத் தன்மை.
- உள்ளக கணக்காய்வாளர்களின் செயலாற்றுகை
- கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான வருடாந்த சுயாதீனமான கணக்காய்வு
- உள்ளக மற்றும் வெளிவாரியான கணக்காய்வு சம்பந்தமான அறிக்கையை பச்சச்சார்பின்றி மீளாய்வு செய்தல்
- நியதிச் சட்ட தேவைப்பாடுகளுடன் கம்பனியின் இணக்கப்பாடு
- பணிப்பாளர் சபையின் தீர்மானங்களைப் பின்பற்றுதல்

கணக்காய்வுக் குழுவில் உள்ளடங்குபவர்கள் (உள்ளடக்கம்) சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்கள் மூவரைக் கணக்காய்வுக் குழு உள்ளடக்கியுள்ளது

கணக்காய்வுக் குழுவின் கூட்டமைப்பு கீழுள்ளவாறாகும்.

- திரு. பிரவீர் சமரசிங்க - தலைவர் (சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்)
- திரு. எம். ஷெஸ்மின் மன்சூர் - (சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்)
- திரு. பிரியந்த. ஜயமஹ - (நிறைவேற்று தர்மல்லாத பணிப்பாளர் மற்றும் பொதுத் திறைசேரிப் பரதிநிதி)

திரு. பிரவீர் சமரசிங்க இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவர் என்பதோடு வியாபார முகாமைத்து முதுநிலைப் பட்டதாரியாவார்.சிரேட்ட முகாமைத்து மட்ட பதவிகளை வகித்து 30 வருடத்திற்கு மேற்பட்ட தொழிற்துறை மற்றும் வணிக அலுவல்கள் தொடர்பான அனுபவத்தை அவர் கொண்டுள்ளார்.

திரு. ஜே.எம்.யூ.ஜீ. ஜயமஹ இலங்கை கணக்காளர் சேவையின் ஓர் அலுவலர் என்பதோடு அரச துறையின் நிதி முகாமைத்துவம் சம்பந்தமாக பல வருட கால அனுபவத்தை இவர் கொண்டுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக் கற்கைகள் சம்பந்தமான முதுமாணிப் பட்டம் இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவம் சம்பந்தமான பட்டப்பின் கற்கை டிப்ளோமா மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் அரச நிதி முகாமைத்துவம் சம்பந்தமான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அதிகாரச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

திரு. எம். ஷெஸ்மின் மன்சூர் ஐக்கிய இராச்சியத்தின் எரிசோனா பிராந்திய பல்கலைக்கழகத்தில் விநியோக முகாமைத்துவைத்தை பிரதான விடயமாக கற்று விஞ்ஞானப் பட்டமொன்றை பெற்றுக்கொண்டுள்ள திரு மன்சூர் அவர்களுக்கு பட்டப்படிப்பை தொடர்வதற்காக புலமை பரிசில் கிடைக்கப்பெற்றதோடு சிறப்பான கல்விப் பெறுபேறு தொடர்பாக வழங்கப்படுகின்ற கௌரவ பிரிவுத் தலைவர் பட்டியலில் அவரது பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வுக் குழுக் கூட்டம்

2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டில் 04 கணக்காய்வுக் குழு கூட்டங்களை நடாத்தியுள்ளதுடன் தகுதிபெற்ற அதிகாரி, பணிப்பாளர் சபையின் ஆலோசகர், தலைமை செயற்பாட்டு உத்தியோகத்தர், தலைமை நிதி அலுவலர், ஹோட்டல் டிவலப்பர்ஸ் கம்பனியின் கணக்காளர், ஹில்ட்டன் கொழும்பு ஹோட்டலின் பொது முகாமையாளாளர் மற்றும் நிதிப் பணிப்பாளர்,உள்ளகக் கணக்காளயர்வாளர்களான அர்னஸ்ட் என்ட் யங் நிறுவனம், வெளிவாரியான கணக்காய்வாளர்களின் மற்றும் ஹிலட்டன் கொழும்பு இன் முகாமைத்துவக் கணக்காயவ்வாளர்களின் பிரதிநிதிகள் அழைப்பின் பிரகாரம் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்

வெளிவாரி கணக்காய்வாளர்கள் மாற்றமடைதல்

அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 19 ஆவது திருத்தத்துடன் கணக்காய்வாளர் நாயகம் அவர்கள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் கம்பனியின் வெளிவாரி கணக்காய்வாளராக மாறினார் அதற்கமைய 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றை கணக்காய்வாளர் அவர்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தினார். அன்று முதல் கணக்காய்வாளர் நாயகத்தின் தலைமை அதிபதியின் பிரதிநிதியொருவர் அவதானிப்பாளராக கணக்காய்வுக் குழுவில் பங்குபற்றுகின்றார்.

உள்ளக நிர்வாகக் கட்டமைப்பு மீளாய்வு

கம்பனியின் உள்ளக கணக்காய்வாளர்களான அர்னஸ்ட் எனட் யங் கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட

கணக்காய்வு குழு அறிக்கை

கணக்காய்வுத் திட்டத்திற்கமைய ஹோட்டலின் செயற்பாடுகள் சம்பந்தமாக விபரமாக கணக்காய்வொன்றை மேற்கொண்டனர். முகாமையினால் தாபிக்கப்பட்ட உள்ளக நிர்வாகக் கட்டமைப்பு சம்பந்தமாக சுயாதீன மீளாய்வொன்றை மேற்கொள்ளல் மற்றும் அலுவலுக்காகப் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் நிர்வாகத்துடன் இணைந்து செல்லும் அளவைத் தீர்மானித்தல் உள்ளகக் கணக்காய்வின் நோக்கமாகும். உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் கண்டறிதல்கள் மற்றும் உள்ளடக்கப்பட்டுள்ள முகாமைத்துவத்துடன் கலந்துரையாடப்பட்டதுடன், காலத்தின் அடிப்படையில் சீர்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

காலாண்டு நிதிக் கூற்று மீளாய்வு

கணக்காய்வுக் குழுவினால் கம்பனியின் காலாண்டு ரீதியிலான நிதிக் கூற்றுக்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கு (CSE) விடுவிப்பதற்கு முன்னர் அங்கீகாரத்திற்காகப் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

சர்வதேச நிதி அறிக்கையிடல் தரங்கள்/ இலங்கை நிதி அறிக்கையிடல் தரங்கள் (IFRS/SLFRS) இனைப் பின்பற்றுதல்

இதுவரையான அனைத்து கால எல்லைக்கும் ஏற்புடையதாகும் வகையில் இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கு இணங்க அதன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன.

சர்வதேச நிதி அறிக்கைப்படுத்தல் தரங்களுடன் இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் ஒன்றிணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தற்போது நிலவும் புதிய இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் அனைத்தும் இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் தரம் (SLFRS) மற்றும் இலங்கை கணக்கீட்டுத் தரம் (LKAS) (இந்த நிதிக் கூற்றுக்களில் "இ.நி.அ.த" என) குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 2012 ஏப்ரல் 01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் நிதிக் காலஎல்லை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அந்த திருத்தப்பட்டவாறான இலங்கை கணக்கீட்டு தரங்களின் (LKAS/SLFRAS) தேவைகளுக்கு கம்பனி இயைபடைவது கட்டாயமாகியது. புதிய/ திருத்தப்பட்ட நிதி அறிக்கைப்படுத்தல் சட்டகத்தை பயன்படுத்துவதற்காக கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் பரிமாற்றல்கள் மற்றும் இருப்பை இனங்கண்டுகொள்ளல் மதிப்பீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடிப்படைக்கு திருத்தம் தேவையாக இருந்ததுடன் அவை தொடர்பாக உரிய அவதானம் செலுத்தப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களில் முறையாக வெளிப்படுத்தப்பட்டு அதற்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிய / திருத்தம் செய்யப்பட்ட கணக்கீட்டுத் தரத்தை பயன்படுத்துவதனால் ஏற்படும் தாக்கம் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களால் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது.

இணக்கப்பாட்டுக் கூற்று மீளாய்வு

கம்பனி தேவையான நியதிச் சட்டத் தேவைப்பாடுகளுக்கு இசைவாகச் செயற்படுகின்றதென்பதை உறுதிப்படுத்துவதற்காக குழுவினால் குறித்த இனக்கப்பாட்டு கூற்று மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக கம்பனி பணிப்பாளர் சபையின் தீர்மானங்களுக்கு இசைவாகச் செயற்படுகின்றது என்பது தொடர்பில் குழு திருப்பதியடைகின்றது.

2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிக் கூற்றுக்கள் மீளாய்வு

ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் கணக்காய்வுக் குழு, வெளி கணக்காய்வாளர்கள், உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வாளர்களுடன் இணைந்து. கம்பனியுடன் தொடர்பான 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிக் கூற்றை மீளாய்வுக்குட்படுத்தியது கணக்காய்வுத் குழுவுக்கு தேவையான பிரகாரம் உறுதிப்படுத்தல்கள் மற்றும் கூற்றுக்கள் தலைமை நிதி அலுவலரால் வழங்கப்பட்டது. இலங்கை கணக்கீட்டு தரங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட அந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளுக்கு அமைய அதில் காணப்படும் தகவல்களிலிருந்து அத்திகதியன்று கம்பனியின் நடவடிக்கைகளின் நிலைமை மற்றும் மீளாய்வாண்டினுள் கம்பனியின் நடவடிக்கைகள் சம்பந்தமாக உண்மையான மற்றும் நியாயமான நோக்கினை சமர்ப்பிப்பதற்காக கணக்காய்வுக் குழு மீளாய்வு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததோடு, கம்பனியின் உறுதிப்பாடு தொடர்பாகவும், கம்பனியின் நடவடிக்கைகள் தெடர்பாகவும்உண்மையன மற்றும் நியாயமான கருத்துத் தெரிவித்தலொன்று அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

முடிவுரை

கம்பனியின் சொத்துக்கள் மற்றும் நிதி உறுதிப்பாடு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக போதுமானளவு கட்டுப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும் கணக்காய்வுக்குட்படுத்திய கணக்குகளில் வெளிப்படுத்தப்படும் நிதி நிலைமை மற்றும் விளைவு கணிசமானளவு தவறான கூற்றுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதென்பது கணக்காய்வுக் குழுவின் கருத்தாகும்.



பிரவீர் சமரசிங்க
தலைவர்

கணக்காய்வுக் குழு
2017 யூலை 23 ஆம் திகதி

நிதிக்
கூற்றுக்கள்

சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. MED/C/HDL/1/17/ FA-01

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 03 July 2018

ஹோட்டல்ஸ் டிவலொப்ர்ஸ் (லங்கா) பீஎல்சி கம்பனியின் பங்குரிமையாளர்களுக்கு

ஹோட்டல்ஸ் டிவலொப்ர்ஸ் (லங்கா) பீஎல்சி கம்பனியின் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ஹோட்டல்ஸ் டிவலொப்ர்ஸ் (லங்கா) பீஎல்சி கம்பனியின் ("கம்பனி") 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு, 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்றில் மற்றும் விரிவான வருமான கூற்றில், பங்குத் தொகை மாற்றங்கள் தொடர்பான கூற்றில் முன்னர் குறிப்பிட்ட திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிப் பாய்ச்சல் கூற்றில் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கை சுருக்க அறிக்கை மற்றும் வேறு விடயங்கள் தெளிவுபடுத்தும் குறிப்புக்கள் ஆகியவற்றை உள்ளடங்கியுள்ளதோடு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154 (1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளைப் படி இந்த கணக்காய்வுகள் செய்யப்பட்டன.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு தரங்களுக்கு ஏற்ப இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சிறப்பாக முன்வைத்தல் தொடர்பாக, மோசடியான அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க பிழைகளற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு வாய்ப்பளிப்பதற்காக அவசியமாகுமென சபை தீர்மானிக்கின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில், பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்புக் கூறல் வேண்டும்.

கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்க ஏற்ப எனது கணக்காய்வை மேற்கொண்டேன். கணக்காய்வு ஒழுக்க நெறிகளுக்கு இணங்க செயலாற்றுவதற்கும், நிதிக் கூற்றுக்கள் முக்கியமான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கான நியாயமான உறுதியொன்றைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கணக்காய்வை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கும், அத்தரங்கள் மூலம் எனக்கு விதிக்கப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிப் பெறுமதிகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுதல் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்படுகின்றன. மோசடியான அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் முக்கியமான பிறழ் கூற்றுக்கள் உள்ளடக்கப்படும் ஆபத்து மதிப்பீடு உள்ளிட்ட கணக்காய்வாளரின் தீர்மானம் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி ஒழுங்குவிதிகள். தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி ஆபத்து மதிப்பீடு செய்யும் போது, கணக்காய்வாளரினால் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின் செயற்றின் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடும் நோக்கத்திற்காகவன்றி ஒவ்வொரு சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான நிலையான கணக்காய்வு செயல் ஒழுங்கு விதிகளைத் திட்டமிட்டுக் கொள்ளும் பொருட்டு கம்பனியினால் நிதிக் கூற்றுக்கள் தயாரித்தலுடன் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் கருத்திற் கொள்ளப்படும். பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளின் பொறுத்தப்பாடு மற்றும் பணிப்பாளர் சபையினால் தயாரிக்கப்படுகின்ற கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை கணக்காய்வு மூலம் மதிப்பீடு செய்யப்படுவதோடு நிதிக் கூற்றுக்களின் முழுமொத்தப் சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்படும்.

என்னால் சேகரித்துக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்கள் எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்குப் போதுமானதெனவும் மற்றும் பொருத்தமானதெனவும் நான் நம்புகின்றேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

அபிப்பிராயம்

இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கு ஏற்ப நான் கொண்டுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படையில், ஹொட்டல்ஸ் டிவலொப்மர்ஸ் (லங்கா) பீஎல்சி கம்பனியின் 2017, திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிதி நிலைமை தொடர்பாகவும், நிதிச் செயலாற்றுகை மற்றும் குறித்த தினத்தில முடிவடைந்த ஆண்டின் நிதிப்பாய்ச்சல் தொடர்பாகவும் உண்மையான மற்றும் நியாயமான கருத்தொன்று நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

விடய வெளிப்படுத்தல்

1,986,019.251 ரூபா செலவுக்கு முழுமையாக பெறுமானத் தேய்வளிக்கப்பட்ட எனினும் கம்பனி மூலம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் 12.3 குறிப்பு தொடர்பில் கவனத்தை ஈர்க்கின்றேன். கம்பனியினால் பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளர்களின் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு சொத்துக்கள் தொடர்பாகவும் விரிவான சொத்துக்கள் உண்மைக் கணக்கெடுப்பொன்று செய்யப்பட்டுள்ளதோடு இந்த கைமாற்றல் அதன் ஒப்பிடல் இறுதி கட்டத்திற்கு வந்துள்ளது இந்த விடயம் தொடர்பாக எனது அபிப்பிராயம் வரையறுக்கப்பட்டதொன்றல்ல.

ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 163 (2) பிரிவின் விதிகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படுத்துகைகளை வெளியிடுகின்றேன்.:

அ. கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படை, கணக்காய்வு விடயப் பரப்பு மற்றும் வரையறைகள் பின்வருமாறாகும்.

ஆ. எனது அபிப்பிராயத்தின் படி,

- கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் விடயங்களைத் தெளிவுபடுத்திக் கெள்ளல் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு எனது பரிசீலனையின் போது தெரியவந்த விதத்தில் கம்பனியினால் கணக்கீட்டு அறிக்கைகள் சிறப்பாகப் பேணப்பட்டுள்ளன.
- கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு இசைவுடையதாகும்.

பாராளுமன்றத்திற்குச் அறிக்கையிடல்

அரசியல் அமைப்பின் 154 (6) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டிய எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எச்.ஏ.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் நாயகம்

விபரமான வருமானக் கூற்று

	குறிப்புக்கள்	வருட முடிவில் 31.12.2017 ரூபா.'000	31.12.2016 ரூபா.'000
வருமானம்	05	3,015,362	2,540,680
விற்பனைக் கிரயம்		(550,824)	(440,698)
மொத்த இலாபம்		**2,464,538**	2,099,982
முதலீட்டு வருமானம்	06	25,533	27,575
ஏனைய இலாபம் மற்றும் நட்டம்	07	29,429	39,914
நிர்வாக செலவினம்		(1,491,586)	(1,331,329)
தேய்மானம்		(461,542)	(368,254)
ஏனைய செலவுகள்		(383,491)	(294,905)
நிதிசார் செலவினம்	08	(9,905)	(38)
வரிக்கு முந்திய இலாபம்	**09**	**172,976**	172,945
வருமான வரிச் செலவினம்	10	85,041	(31,933)
ஆண்டிற்கான இலாபம்		258,017	141,012
ஏனைய விபரமான வருமானம்			
ஊழியர் அனுகூல பொறுப்புக்கள் மீதான உண்மையுரிமை ஈட்டல்/ (நட்டம்)		2,415	(5,065)
கால எல்லைக்கான ஏனைய விபரமான வருமானம் / (செலவு)		**260,431**	135,947
பங்கொன்றின் ஈட்டல் - அடிப்படை (ரூ)	11	0.13	0.07

கணக்கீட்டுக் கொள்கை மற்றும் 1 முதல் 35 வரையான குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் அத்தியாவசியப் பகுதியை உருவாக்குகின்றது.

நிதி நிலைமைக் கூற்று

சொத்துக்கள்		அன்று உள்ளவாறு 31.12.2017 ரூபா.'000	அன்று உள்ளவாறு 31.12.2016 ரூபா.'000
அசையாச் சொத்துக்கள்			
சொத்துக்கள், இயந்திரகம் மற்றும் உபகரணம்	12	7,818,434	7,449,712
குத்தகைக் காணி	13	6,610,530	6,681,237
முடிவுறுத்தப்படாத மூலதனம்		243,414	215,747
மொத்த அசையாச் சொத்துக்கள்		14,672,378	14,346,696
அசையும் சொத்துக்கள்			
மொத்தப் பொருட்கள்	14	58,009	51,488
வணிக மற்றும் ஏனைய பெறுகைகள்	15	151,640	148,843
தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை	16	1,354	1,767
ஏனைய சொத்துக்கள்	17	183,520	216,145
நிலவும் நிதிசார் சொத்துக்கள்	18	135,608	202,660
பணம் மற்றும் வங்கி மீதி	19	225,599	395,104
மொத்தச் அசையாச் சொத்துக்கள்		755,730	1,016,007
மொத்தச் சொத்துக்கள்		15,428,109	15,362,703
பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்			
பங்குரிமையாளர்களின் பங்குகள்			
வெளியிடப்பட்ட மூலதனம்	20	20,466,456	20,466,456
இருப்புக்கள்	21	161,348	21,896
திரண்ட நட்டம்		(6,594,476)	(6,715,455)
மொத்தப் பங்குகள்		14,033,329	13,772,897
அசையாப் பொறுப்புக்கள்			
ஓய்வூதிய அனுகூலப் பொறுப்புக்கள்	22	122,581	125,326
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	23	396,570	499,215
தக்கவைத்துக் கொள்ளும் கட்டணம் - மறுசீரமைப்புத் திட்டம்		-	103,208
மொத்த அசையாப் பொறுப்புக்கள்		519,152	727,749
அசையும் பொறுப்புக்கள்			
வணிக மற்றும் ஏனைய செலுத்துகைகள்	24	479,574	511,209
தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகை	25	12,558	10,598
தக்கவைத்துக் கொள்ளும் கட்டணம் - மறுசீரமைப்புத் திட்டம்		111,028	-
வங்கி மேலதிகப் பற்று		272,468	340,250
மொத்த அசையும் பொறுப்புக்கள்		875,628	862,057
மொத்தப் பொறுப்புக்கள்		1,394,780	1,589,806
மொத்தப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்		15,428,109	15,362,703
பங்கொன்றின் தேறிய சொத்து (ரூ)		6.86	6.73

இந்த நிதிக் கூற்று 2017 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைகளுடன் இயைந்து செல்வதாக நான் உறுதிப்படுத்துகின்றேன்.

நிதிப் பிரதானி

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்குப் பணிப்பாளர் சபை கடமைப்பட்டுள்ளது பணிப்பாளர் சபைக்காக 2018 ஆம் மாதம் 28 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டது.

பணிப்பாளர் **பணிப்பாளர்**

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 1 முதல் 35 வரையிலான குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் அத்தியாவசிய பகுதியை வகிக்கின்றன.

பங்கு மாற்றல் பற்றிய கூற்று

	வெளியிடப்பட்ட மூலதனம்	தளபாடம் பெருத்துகைகள், உப கரணங்கள் புணரமைப்பு இருப்பு	திரண்ட நட்டம்	மொத்தம்
	ரூபா.'000	ரூபா.'000	ரூபா.'000	ரூபா.'000
2016 சனவரி 31 ஆம் தகதியன்று மீதி	20,466,456	117,421	(6,946,927)	13,636,951
12 மாத கால எல்லைக்கான இலாபம்	-	-	141,012	141,012
ஊழியர் அனுகூல பொறுப்புக்கள் மீதான உண்மையயுரிமை ஈட்டல் / (நட்டம்) , வரியலிருந்து தேறிய நட்டம்			(5,065)	(5,065)
தளபாடம், பொருத்துகைகள், உபகரணங்கள் பதலீடு	-	(203,914)	203,914	-
தளபாடம் பொருத்துகைகள், உபகரணங்கள் இருப்புக்கு மாற்றல்	-	108,389	(108,389)	-
2016 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மீதி	20,466,456	21,896	(6,715,455)	13,772,897
12 மாத கால எல்லைக்கான இலபம்	-	-	258,017	258,017
ஊழியர் அனுகூல பொறுப்புக்கள் மீதான உண்மையுரிமை ஈட்டல் / (நட்டம்) , வரியிலிருந்து தேறிய நட்டம்	-	-	2,415	2,415
தளபாடம், பொருத்துகைகள், உபகரணங்கள் பதிலீடு	-	(128,983)	128,983	-
தளபாடம், பொருத்துகைகள், உபகரணங்கள் இருப்புக்கு மாற்றல்	-	268,435	(268,435)	-
2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மீதி	20,466,456	161,348	(6,594,476)	14,033,329

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 1 முதல் 35 வரையிலான குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் அத்தியாவசியப் பகுதியை வகிக்கின்றது.

நிதிப் பாய்ச்சல் கூற்று

	குறித்த வருட முடிவில்	
	31.12.2017	31.12.2016
	ரூபா.'000	ரூபா.'000
வரிக்கு முந்திய இலாபம்	172,976	172,944
சீர்படுத்துகைகள்		
தேய்மானங்கள்	461,542	368,254
நிர்ணயிக்கப்படட அனுகூலத் திட்டமிடலுக்கான ஒதுக்கீடுகள்	22,576	18,307
உடைப்புக்களுக்கான ஏற்பாடுகள்	1,329	(98)
வட்டிச் செலவினம்	9,905	38
சொத்துக்கள், இயந்திரகம் மற்றும் உபகரணங்கள் விற்பனை மூலமான இலாபம்	(6,620)	(4,238)
கடனாளிகளால் சேதம்	-	(9,158)
கைமாறாத வரிமாற்றல் இலாபம்	(884)	(9,428)
வட்டி வருமானம்	(25,533)	(27,575)
தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்பாட்டு இலாபம்	635,291	509,047
பொருட்கள் இருப்பு (அதிகரிப்பு / குறைவு)	(6,521)	(13,378)
பெறுகைகள் (அதிகரிப்பு / குறைவு)	(2,797)	10,551
தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகையின் (அதிகரிப்பு / குறைவு)	2,373	(6,872)
ஏனைய சொத்துக்களின் (அதிகரிப்பு / குறைவு)	(2,570)	191,714
வணிக மற்றும் ஏனைய செலுத்துகைகளின் (அதிகரிப்பு / குறைவு)	(32,963)	114,162
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஈட்டிய தொகை	592,813	805,223
செலுத்திய வரி	(20,737)	(45,366)
ஓய்வூதிய அனுகூலங்களைச் செலுத்துதல்	(22,907)	(2,571)
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஈட்டிய தேறிய தொகை	549,169	757,286
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான பண பாய்ச்சல்		
சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு	(111,128)	(181,729)
முடிவுறுத்தப்படாத மூலதனத்தின் முதலீடு	(629,947)	(1,325,914)
சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விற்பனை மூலம் பெற்ற தொகை	6,620	4,238
நிதிச் சொத்துக்களில் முதலீடு	-	561,334
வட்டி வருமானம்	25,533	27,575
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய பணம்	(708,923)	(914,495)
நிதிசார் நடவடிக்கைகளில் காசுப் பாய்ச்சல்		
நிதிச் செலவு	(9,905)	(38)
நிதிசார் நடவடிக்கைகளில் பயன்படுதிய தேறிய பணம்	(9,905)	(38)
பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகளின் தேறிய (அதிகரிப்பு / குறைவு	(169,659)	(157,247)
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் (குறிப்பு 27.1)	258,398	414,761
கால எல்லை இறுதியில் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் (குறிப்பு 27.2)	**88,739**	257,514

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 1 முதல் 35 வரையிலான குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் அத்தியாவசியப் பகுதியை வகிக்கின்றது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2017, திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த 12 மாதங்களுக்கானது

1. நிறுவனம் சார்ந்த தகவல்கள்

1.1. பொதுவான விடயங்கள்

ஹோட்டல் டிவலபோர்ஸ் (லங்கா) பீஎல்சீ இலங்கையில் அமைந்துள்ள கூட்டிணைக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட ஒரு கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் பிரதான வர்த்தக நிலையம் கொழும்பு 2, சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை, இலக்கம் 02 எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

1.2. அடிப்படை அலுவல்கள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

ஹோட்டல் டிவலபோர்ஸ் (லங்கா) பீஎல்சீ விருந்தோம்பல் உபசார வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதுடன். ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் உரிமையைக் கொண்டுள்ளது.

1.3 வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட திகதி

2018 மே மாதம் 28 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் நிதிக் கூற்றை வெளியிடுவதற்கான அதிகரம் ஒப்படைக்கப்பட்டது.

2. கணக்குகளைத் தயாரிகும் அடிப்படை

2.1 இயைபாக்கம் சம்பந்தமான கூற்று

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் (நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, பங்குகளின் மாற்றம் சம்பந்தமான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்புக்கள்) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள இ.நி.அ.த எனும் பெயரில் பொதுவாக அறிமுகஞ் செய்யப்படும் இலங்கை கணக்கீட்டு தரங்களுக்கமைய மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைகளுக்கிணங்க தயரிக்கப்பட்டுள்ளது.

2.2 மதிப்பீடு செய்யும் அடிப்படை

நிதி நிலைமைக் கூற்றில் கீழ் குறிப்பிடப்படும் முக்கிய விடயம் தவிர வரலாற்று அடிப்படையில நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

- தீர்மானிக்கப்பட்ட அனுகூலங்களுக்கான பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்பட்ட அனுகூல பொறுப்புக்கள் நிகழ் கால பெறுமதியின் பிரகாரம் இனங்காணப்படும்.

2.3 செயற்பாடு மற்றும் சமர்பிப்பதற்கு ஏற்புடையதாகும் பிரயோகப் பணம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்படுவதுடன் அது கம்பனியின் செயற்பாடு மற்றும் சமர்ப்பித்தலுடன் தொடர்பான பயன்படுத்தப்படும் நிதியாகும். இலங்கை ரூபாக்களில் முன்வைக்கப்பட்டள்ள நிதித் தகவல்கள் வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டாலன்ற அண்மித்த ஆயிரம் ரூபாவில் குறிப்பிடப்படுள்ளது.

2.4 ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள்

நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பித்தல் தொடர்பாக IKAS 01 இற்கிணங்க கம்பனியினால் கணக்கீட்டுக் கொள்கை முன்னைய நிதிக் கூற்றுக்களுடன் பயன்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

2.5. அளவு மற்றும் தகவல் தொகுப்பு

நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் சம்பந்தமாக இலங்கை கணக்கீட்டுத் தரம் இலக்கம் 01 இற்கமைய அளவு சாரந்த ஒரே வகையான சம பொருட்கள் நிதிக் கூற்றுகளால் வெவ்வேறாக முன்வைக்கப்படுள்ளது.

ஈடு செய்வதற்காக வலுப்பெற் செய்ய முடியுமான சட்ட ரீதியான உரிமை இருத்தல். தேறிய அடிப்படையில் செலுத்துவதற்கான நோக்கம் இருத்தல் அல்லது சொத்துக்களை விற்று ஒரேயடியாகப் பொறுப்புக்களிலிருந்து விடுபடுவதற்கு நோக்கம் இருத்தல் போன்ற சந்தர்ப்பங்கள் மாத்திரம் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் ஈடு செய்யப்பட்ட தேறிய பெறுமதி நிதி நிலைமையாக கூற்றில் வெளியிப்படுத்தப்படுள்ளது. கணக்கீட்டு தரம் அல்லது பொருள் விளக்கம் ஊடாக கட்டளையிப்பட்டு அல்லது அனுமதிகயளிக்கப்படாதிப்பின் மற்றும் விசேடமாக கணக்கீட்டுக் கொள்கையை விட வெளிப்படுத்தப்பட்டிருந்தாலன்றி இலா நட்டக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவு ஈடுசெய்யப்படவில்லை.

3. முக்கிய கணக்கீட்டு முடிவுகள், மதிப்பீடு மற்றும் அனுமானிப்புக்ககள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது எதிர் காலத்துடன் தொடர்புடைய சில முக்கிய கணக்கீட்டு அனுமானிப்புக்களைப் பயன்படுத்துதல் அவசியமாகும். அத்துடன். அறக்கைப்படுத்ததும் கால எல்லை முடிவில் வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் சாத்தியமற்ற பொறுப்புக்கள் என்பவற்றை வெளிப்படுத்தல் சம்பந்தமாக அறிக்கைப்படுத்தும் அளவுகளில் தாக்கம் செலுத்தும் முடிவுகள் மதிப்பீடுகள் மற்றும் அனுமானிப்பதறந்கு கம்பனியின் முகாமைத்துவத்திற்கு அவசியமாக்கின்றது. ஆனாலும், அனுமானிப்பு மற்றும் மதிப்பீடு சம்பந்தமாக நிச்சயமற்றதன்மை எதிர் காலத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுபக்களின் ஏற்றுக்கொள்ளும் பெறுமதிக்கு முக்கியமான சீர்படுத்தல்கள் தேவைப்படும் பெறுப்புக்களுக்கு காரணமாக இருக்கலாம். இதனால் உண்மையான அனுபவம் மற்றும் பெறுபுக்கள் இவ்வாறான முடிவுகள் (தீர்மானங்கள்) மற்றும் மதிப்பீடுகளிலிருந்து மாற்றமடையலாம்.

கம்பனியின் கணக்கீட்டுச் கொள்கைகளைப் பிரயோகிக்கும் போது செயற்பாட்டில் முகாமைத்துவத்தினால் கீழ் குறிப்பிடப்படும் முடிவுகள் (தீர்மானங்கள்) மதிப்பீடு மற்றும் அனுமானிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதில் நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட அளவுகளில் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அ) வரி செலுத்தல்

கம்பனி பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி உட்பட வருமான வரிகளுக்கு மற்றும் ஏனைய வரிகளுக்கு உட்படுகின்றது. வரி விதிப்பு நோக்கத்திற்காக நதிக் கூற்றுக்கள் மற்றும் வரியாக்கிக்கொள்ள முடியுமான இலாபத்தினுள் இ.க. தரத்தைப் பயன்படுத்தும் தீர்வு மீது வரி வழிகாட்டலுக்கமைய செலவு செய்யும் தற்போதைய நிறுத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்காக மொத்த ஒதுக்கீடுகளையும் தீர்மானிப்தற்காக முக்கிய தீர்மானங்கள் அவசியமாகின்றன. இந்த நிதிக் கூற்றை தயாரிக்கும் சந்தரப்பத்தில் வரிச் சட்டங்களை பயன்படுத்தல் சம்பந்தமான வரைவிலக்கணங்களுடன் தொடர்பாக நிசசயமற்ற நிலைமைகள் நிலவுகின்றன.

மேலதிக வரி செலுதத வேண்டியேற்படுமா என்பது சம்பந்தமாக அனுமானிப்பின் அடிப்படையில் தற்போதயை நிறுத்திவைககப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்காக கம்பனி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை இனங்கண்டு கொள்ளும் இறுதி வரிப் பெறுபேறு நாம் ஆரம்பமாக அறிக்கைப்படுத்திய அளவுகளிலிருந்து வேறுபடும் சந்தரப்பத்தின் போது தீர்மானம் எடுக்கும் காலப் பகுதிக்குள் வருமானம் நிறுத்தி வைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரி அளவுகளின் மீது அந்த வேறுபாடுகள் தாக்கம் செலுத்தும்.

ஆ) சொத்துக்கள் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பயன்மிக்க ஆயுட்காலம்.

கம்பனியினால் சகல அறிக்கைப்படுத்தும் தினத்திலும் சொத்துக்களின் பெறுமதி பயன்மிக்க ஆயுட் காலம் மற்றும் தேய்மானம் அளவிடப்படும் முறை மீளாய்வுக்குட்படுத்தப்படும் இந்த பெறுமதிகள் வீதங்கள் முறைகளை மதிப்பீடு செய்யும் போது முகாமைத்துவத்தினால் தீர்ப்புக்கள் பயன்படுத்தப்படுவதனால் அவை நிச்சயமற்றவைகளாக இருக்கும்.

இ) தொடர்ச்சியான நிலைத்திருப்பு

தொடர்ச்சியான நிலைத்திருப்புடன் கம்பனியை நடாத்துவதற்கான அற்றலை பணிப்பாளர் சபை மதிப்பீடு செய்துள்ளதுடன், அறிந்து கொள்ள முடியுமான எதிர்காலத்திற்கு வணிகத்தை நடாத்துவதற்காக தேவையான வளத்தை அது கொண்டிருப்பதாக திருப்தியடைகின்றது. தொடர்ந்து நடாத்துதல் சம்பந்தமாக கணிசமானளவு அளவு சார்ந்த நிச்சயமற்ற தன்மைகள் சநம்பந்தமாக பணிப்பாளர் சபை அறியாதிருப்பதுடன், கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு அல்லது நிறைவு செய்வதற்கான தேவை அவர்களுக்கு இல்லை. அதனால் இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்ச்சியான நிலைத்திருப்பை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஈ) நிதிச் சொத்துக்கள் மீதான பாதிப்பு (சேதம்) நட்டம்

விபரமான வருமானக் கூற்றில் அறிக்கைப்படுத்தப்பட வேண்டிய தேங்களுக்கான நட்டம் ஒவ்வொரு அறிக்கைப்படுத்தும் திகதி அல்லது அதற்கு முன்னர் இடம்பெறற்றுள்ளதா என்பது சம்பந்தமாக ஏதேனும் விடயத்துடன் தொடர்புடைய சாட்சிகள் இருக்கின்றதா என்பதனைத் தீர்மானிப்பதற்காக நிதமும் கம்பனி மதிப்பீடுகளை மேற்கொள்ளும்.

உ) நிர்ணயிக்கப்பட்ட அனுகூலத் திட்டம்

நிர்ணயிக்கப்பட்ட அனுகூலத் திட்டத்தில் செலவானது காப்பீட்டு பகுப்பாய்வு பியோகத்தினால் தீர்மானிக்கப்படும். காப்பீட்டு பகுப்பாய்வு எதிர்காலத்தில் உண்மையான அபிவிருத்தி நடவடிக்கைகளினால் மாற்றமடையக்கூடிய பல்வேறு அனுமானங்களுடன் சம்பந்தப்படும். இதற்கு கழிவு வீதத்தை தீர்மானித்தல் எதிர்கால சம்பள அதிகரிப்பு இறப்பு வீதம் என்பன உள்ளடக்கப்படும் மதிப்பீட்டு சிக்கல் தன்மை முக்கிய அனுமானிப்புக்கள் மற்றும் அவற்றின் நீண்டகாலத் தன்மை காரணமாக நிர்ணயிக்கப்பட்ட அனுகூலத் திட்டம் இந்த அனுகூல மாற்றங்களுக்கு மிகவும் உணர்வுபூர்வமானதாக இருக்கும் அனைத்து அனுமானங்களும் அனைத்து அறிக்கைப்படுத்தல் திகதியிலும் மீளாய்வுக்குட்படுத்தப்படும்.

பொருத்தமான கழிவுத் தொகையைத் தீர்மானிக்கும் போதும் நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டத்தின் எதிர்பாரக்கும் கால எல்லைக்கு நேரொத்த வகையில் மேலதிக கால எல்லைகளுடன் இலங்கை அரசாங்கத்தின் பிணைப் பத்திரங்களின் பயனை முகாமைத்துவம் கவனத்திற் கொள்ளும் இறப்பு வீதம் இறப்பு வீத அட்டவணையை அடிப்படையாயக் கொண்டதாக இருக்கும் எதிர்கால சம்பள அதிகரிப்பானது எதிபார்க்கும் எதிர்கால பணவீக்க வீதம் மற்றும் கம்பனியின் எதிர்பார்க்கப்படும் எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

4. முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு

கம்பனி அதன் நிதிக்கூற்றைத் தயாரிக்கும் போது கம்பனியால் பயன்படுத்திக்கொள்ளப்படும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே உள்ளடக்கப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் வேறு வகையில் குறிப்பிட்டாலேயன்றி இந்த நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் சகல காலகட்டத்திற்கும் நேரொத்த வகையில் பயன்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

4.1 வருமானத்தை இனங்காணல்

எதிர்கால பொருளாதார ரீதியிலான இலாபம் கம்பனிக்கு கிடைப்பதற்கான அதிக வாய்ப்புக்கள் இருப்பின் மற்றும் வருமானம் மற்றும் அதனுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவிருக்கும் செலவுகளை நம்பகத்தன்மையுடன் மதிப்பீடு செய்ய முடியுமான அளவுக்கு மாத்திரம் வருமானம் இனங்காணப்படும். வணிகக் கழிவு மற்றும்

விற்பனை வரிகளிலிருந்து தேறிய அல்லது கிடைக்கப்பெற வேண்டிய அடிப்படையில் நியாயமான பெறுமதிக்கு வருமானம் மதிப்பீடு செய்யப்படும். கீழ் குறிப்பிடப்படும் விபரக் குறிப்புக்கள் வருமானத்தை இனங்கண்டுகொள்ளும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும்.

அ) சேவைகள்

சேவைகளை நிறைவேற்றுவதன் ஊடாக கிடைக்கப்பெறும் வருமானம் சேவையை வழங்கும் அல்லது நிறைவேற்றும் கணக்கீட்டுக் கால ல்லையினுள் இனங்கண்டுகொள்ளப்படும்.

ஆ) அறைகள் மற்றும் வியபார கூடங்களின் வருமானம்

அறைகளுக்கான வருமானம் நாளாந்த அடிப்படையில் வசிக்கும் அறைகள் தொடர்பில் இனங்கண்டு கொள்ளப்படுவதுடன் உணவு மற்றும் பானங்கள் மீதான வருமானம் விற்பனை செய்யும் சந்தரப்பத்தில் கணக்கிடப்படும்.

இ) வட்டி

பயன்மிக்க வட்டி வீத முறையை (EIR) பயன்படுத்தி வட்டி வருமானம் கணக்கிடப்படும்

ஈ) வாடகை வருமானம்

வாடகை வருமானம் உண்மை உரிமை அடிப்படையில் கணக்கிடப்படும்

4.2 செலவினத்தை இனங்கண்டு கொள்ளல்

மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் வருமானத்தின் விசேட விடயங்களில் ஈட்டல்களிடையே நேரடி தொடர்புகளின் அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றில் செலவுகள் இனங்கண்டுகொள்ளப்படும்.

வர்த்தகத்தை முன்னெடுத்துச் செல்லும் போது மற்றும் வினைத்திறன் மட்டத்தில் சொத்துக்கள் இயந்திரங்கள் மற்றும் உபகணங்ளைப் பேணிவரும் போது மேற்கொள்ளப்படும் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்படும் விபரமான வருமானக் கூற்றினை சமர்பிக்கும் நோக்கத்திற்காக "செலவுகளின் பணிப்பொறுப்பு" முறை கம்பனி செயற்திறனில் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படும். அடிப்படையில் பயன்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

வருமான வரிச் செலவுகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வரிகளைக் கொண்டதாகும். வருமான வரிச் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் கணக்கிடப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

4.3. வரி செலுத்தல்

4.1.1 நடைமுறை வரி

நடைமுறை வரியானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடப்பு ஆண்டு தொடர்பான உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து மீள அறவீட்டுக் கொள்வதற்கு அல்லது செலுத்துவதற்கு எதிர்பார்க்கும் அளவுகளிலிருந்து மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய வரிகள் மீதான சீர்படுத்தல்களை உள்ளடக்கியுள்ளது. அளவைக் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்படும் வரி வீதம் மற்றும் வரிச் சட்டங்கள் அறிக்கைப்படுத்தப்படும் திகதியன்று விதிக்கப்பட்டுள்ள அல்லது அதன் பின்னர் விதிக்கப்படும் சட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

4.3.2 நிறுத்திவைக்கப்பட்ட வரிகள்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அமைப்பு மற்றும் நிதி அறிக்கைப்படுத்தல் நோக்கத்திற்காக அவற்றின் இயலளவுக்கிடையே அறிக்கைப்படுத்தும் திகதியன்று தற்காலிகமாக மாற்றங்களின் மீதான பொறுப்புக்கள் பயன்பாட்டிலிருந்து நிறுத்திவைக்கப்பட்ட வரி வேறுபடுத்தப்படும்.

சகல குறைக்க முடியுமான மாற்றங்களுக்காக நிறுத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் இனங்காணப்படும் குறைக்க முடியுமான தற்காலிக மாற்றங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி வரவு மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டம் பயன்படுத்த முடியுமான அளவுக்கமைய வரியாகப் பெற முடியுமான இலாபத்தை பெற்றுக்கொள்வதற்கு ஆற்றல் நிலவும் அளவு வரை பயன்படுத்தாத வரி வரவு மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும்.

போதுமானளவு வரியாகப் பெற முடியுமான இலாபத்தை நிறுத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்காக முழுமையாக அல்லது பகுதியாகப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கும் அளவுக்கு நிறுத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தின் இயலளவுப் பெறுமதி மீளாய்வுக்குட்படுத்தப்படும் இனங்காணப்படாத நிறுத்திவைப்பட்ட வரியை ஈடு செய்துகொள்வதற்கு முடியுமான அளவில் இனங்காப்படும். அறிக்கைப்படுத்தும் திகதியன்று விதிக்கப்பட்டுள்ள வரி வீதம் மற்றும் வரிச் சட்டத்தின் அடிப்படையில் சொத்துக்களை இனங்காணப்படும் போது அல்லது பொறுப்புக்களை தீர்த்துக்கொள்ளும் போது ஆண்டில் பயன்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் வரி வீதத்திற்கு நிறுத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மதிப்பீடு செய்யப்படும்.

4.4 நிதியல்லாத சொத்துக்கள்

4.4.1. சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

அ) இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தல்

சொத்துக்களுடன் பிணைந்துள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறும் மற்றும் சொத்துக்களுக்கான செலவு இ.க.த.16 சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் எனும் அடிப்படையில் நம்பகத்தன்மையுடன் அளக்க முடியுமான அளவில் சொத்துக்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் இனங்காணப்படும் அடிப்படையாக சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் கிரயத்திற்கு மதிப்பீடு செய்யப்படும்.

கிரய (செலவு) முன்மாதிரி

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அன்றாடம் சேவையாற்றுவதற்கான செலவு குறைக்கப்பட்ட திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட சேதப் பெறுமதியை நீக்கி கிரயத்தில் குறிப்படப்படும். அந்த செலவுக்கு இனங்காணப்படும் அளவுகோல் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் அந்தச் செலவு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் உபகரணத்தின் மீளத்தாபிக்கப்பட்ட / பொருத்தப்பட்ட பகுதியின் செலவும் உள்ளடக்கப்படும்.

பின்னர் மேற்கொள்ளப்படும் கிரயம்

வர்த்தகத்தைக் கொண்டு நடாத்தும் அல்லது வர்த்தகத்தின் ஈட்டல் திறனை அதிகரிக்கும் நோக்கில் நிரந்தர அடிப்படையில் சொத்துக்களை கையகப்படுத்தல், வரிவுபடுத்தல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் பிந்திய காலத்தில் மேற்கொள்ளப்படும் செலவுகள் மூலதனச் செலவினமாக கவனத்திற்கொள்ளப்படுவதுடன், அவ்வாறான செலவுகள் சொத்தொன்றின் இயலளவுப் பெறுமதியில் இனங்காணப்படும் சொத்துக்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்களின் மூலம் அன்றாடம் சேவைகளை ஆற்றிக்கொள்ளும் என்பவற்றுடன் பிணைந்துள்ள செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

தேய்மானம்

சொத்துக்கள் மற்றும் உபகரணங்களுக்கான செலவின் அடிப்படையில் அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ஆயுட்காலம் பூராகவும் பதிவழிக்கப்படுவதற்காக இலகுவான முறையொன்றைப் பயன்படுத்தி தேய்மானம் கணக்கிடப்படும் சொத்தை கொள்வனவு செய்த திகதி முதல் சதவீத அடிப்படையில் அவற்றைப் பாவனையிலிருந்து ஒதுக்கும் வரை தேய்மானம் அறவீடு செய்யப்படும் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்மிக்க ஆயுட் காலத்தின் அடிப்படையிலான தேய்மானம் வீதம் கீழே குறிப்பிடப்படுள்ளது.

சொத்து வகை	%
கட்டிடம்	2.5
இயந்திரகம் மற்றும் இயந்திரங்கள்	7.5
உபகரணங்கள்	7.5
கணனி மற்றும் தொலைக்காட்சி	20
மோட்டார் வாகனம்	25
வீட்டுத் தளபாடங்கள், பொருத்துகைகள் மற்றும் உபகரணங்கள்	10
செயற்பாட்டு உபகரணங்கள்	33

சொத்துக்களின் தேய்வுப் பெறுமதி, பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் தேய்மானம் செய்யும் முறை மீளாய்வுக்குட்படுத்தப்படுவதுடன் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் பொருத்தமான முறையில் சீராக்கம் செய்யப்படும்.

மீள இனங்காணல்

சொத்துக்கள, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றைப் பாவனையிலிருந்து ஒதுக்குதல் அடிப்படையில் அல்லது அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத சந்தரப்பங்களில் மீண்டும் இனங்கண்டுகொள்ளப்படும் சொத்துக்களை மீள இனங்காண்டு கொள்வதன் மூலம் ஏற்படும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (ஒதுக்கியதன் மூலம் பெற்ற தொகை மற்றும் சொத்தின் இயலளவைப் பெறுமதி என்பற்றுக்கிடையிலான வேறுபாடாக கணக்கிடப்பட்ட) சொத்துக்கள் மீண்டும் இனங்கண்டுகொள்ளப்படும் ஆண்டில் விபரமான வருமானக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு வருமானத்தினுள் மீள இனங்காணப்படும்

4.4.2 நிதியல்லாத சொத்துக்களின் சேதம் (பாதிப்பு)

கம்பனி அனைத்து அறிக்கைப்படுத்தல் திகதியின் போது சொத்துக்கள் சோதத்திற்குட்படல் சம்பந்தமான குறிப்பு இருக்கின்றதா என்பது தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்ளும். ஏதேனுமொரு குறிப்பொன்று இருப்பின் அல்லது சொத்தொன்றுக்காக வருடாந்த பாதிப்பு பற்றிய ஆய்வு தேவைப்படின் கம்பனி சொத்தின் மீள அறவீட்டுக்கொள்ள முடியுமான மதிப்பீட்டை மேற்கொள்ளும்.

4.5 முன்னர் செலுத்திய குத்தகை தவணைகள்

குத்தகையில் பெற்றுக்கொண்ட காணியின் குத்தகைக் காலஎல்லையான 99 வருடங்கள் பூராகவும் சமமான ஆண்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கை 2012 ஆம் ஆண்டு யூன் முதல் ஆரம்பிக்கப்பட்டது.

4.6 பொருட்கள் இருப்பு

காலங்கடந்த மற்றும் குறைந்த மதிப்பீட்டுப் பெறுமதியைக் கொண்ட பொருட்களுக்கு உரிய தேய்மானத்தை மேற்கொண்டதன் பின்னர் செலவின் கீழ் பொறுமதிக்கு மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட தேறிய பெறுமதிக்கு பொருட்கள் இருப்பு மதிப்பீடு செய்யப்படும். மொத்தப் பொருட்கள் விடுவிப்பதற்கான செலவு மற்றும் அவற்றின் நிலைமையை விற்க முடியுமான நிலைமைக்கு மாற்றுவதற்கான செலவுக்கு இடமளித்ததன் பின்னர் பொதுவான வர்த்தக நடவடிக்கை முறைகளில் பொருட்கள் தொகையை விற்பனை செய்ய முடியுமான விலை தேறிய தேறிய பெறுமதியாகும்.

இருப்புப் பொருட்களின் ஒவ்வொரு வகையின் செலவு எடை போடப்பட்ட பொதுவான அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

4.7 நிதிச் சொத்துக்கள், இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தல்

4.7.1 ஆரம்ப இனங்காணல்

அனைத்து நிதிச் சொத்துக்களும் கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்த திகதியில் அதாவது நிதிச் சொத்துக்களின் ஒப்பந்த அடிப்படையிலான ஏற்பாடுகளுக்கு கம்பனி ஒரு தரப்பாகும் தினத்தில் ஆரம்பமாக இனங்கண்டுகொள்ளப்படும் "முறையான விதத்தில் மேற்கொள்ளப்பட்ட வியாபார அலுவல்கள்", இதில் சந்தையில் ஏற்படுத்திக்கொள்ளும் இணக்கபாட்டின் மூலம் பொதுவாக தாபிக்கப்பட்ட கால வரையறைக்குள் விநியோகிக்கப்படுவதற்கு தேவையான நிதிச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் அல்லது விற்றல் போன்ற ஒழுங்கு முறையொன்றின் கீழான கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கப்படும்.

4.7.2 ஆரம்ப மதிப்பீடு

ஆரம்ப இனங்காணலின் போது நிதி உபகரணங்களை வகைப்படுத்தல், அவற்றின் நோக்கம், சிறப்பம்சங்கள் மற்றும் அவற்றைக் கையகப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் விருப்பத்திலேயே தங்கியுள்ளது. நியாயமான பெறுமதி ஊடாக இலாபம் நட்டம் ஏற்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தவிர கொடுக்கல் வாங்கல் செலவுகள் உட்பட சகல நிதிச் சொத்துக்களும் நியாயமான பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படும்.

4.7.3 பிந்திய மதிப்பீடு

கம்பனியானது மூலதனத்திலிருந்து வருவிக்கப்படாத நிதிச் சொத்துக்கள் நியாயமான பெறுமதியின் ஊடாக இலாப நட்டத்திற்குட்பட்ட நிதிச் சொத்துக்கள், முதிர்ச்சி வரை தங்க வைத்துக்கொள்ளும் முதலீடுகள் கடன் மற்றும் பெறுகைகள் மற்றும் விற்பனைக்கான நிதிச் சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டு பிந்திய காலங்களில் மதிப்பிட்டுக்குப்படுத்தப்படும்.

அ) நியாயமான பெறுமதியின் ஊடாக இலாப நட்டத்திற்குட்பட்ட நிதிச் சொத்துக்கள் (FVTPL)

நியாயனமான பெறுமதியின் ஊடாக இலாப நட்டத்திற்குட்பட்ட நிதிச் சொத்துக்கள் பரிமாற்றலுக்காகக் காணப்படும் அல்லது நியாயமான பெறுமதி ஊடாக இலாப நட்டத்திற்குட்பட்ட நிதிச் சொத்துக்கள் என வகைப்படுத்தப்படும்.

ஆ) முதிர்ச்சி வரை தக்கவைத்துக்கொள்ளும் முதலீடுகள்

முதிர்ச்சி வரை தக்கவைத்துக்கொள்ளும் நிதி முதலீடுகள் நிலையான அல்லது நிர்ணயிக்கப்பட்ட முடியுமான செலுத்துகைகள் மற்றும் நிலையான முதிர்ச்சிகளுடனான மூலத்திலிருந்து வருவிக்கப்படாத நிதிச் சொத்துக்களாக இருப்பதுடன், கம்பனி விரும்பினால் முதிர்ச்சி வரை தக்கவைத்துக்கொள்ளும் ஆற்றல் உண்டு.

ஆரம்ப இனங்காணலின் பின்னர் முதிர்ச்சி வரை தக்கவைத்துக்கொள்ளும் நிதி முதலீடுகள் சேதம் குறைக்கப்பட்ட பயன்மிக்க வட்டி வீதம் (EIR) பயன்பாட்டினால் தேய்மானச் செலவு மீது மதிப்பீடு செய்யப்படும்.

இ) கடன்கள் மற்றும் பெறுகைகள்

கடன்கள் மற்றும் பெறுகைகள் செயற்பாடுமிக்க சந்தையில் விலை நிர்ணயிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்க முடியுமான செலுத்துகைகளுடனான கீழ் குறிப்பிடப்படும அடையாளங்கள் உள்ளடக்கப்படாத மூலத்திலிருந்து வருவிக்கப்படாத நிதிச் சொத்துக்களாகும்

- உடனடியாக அல்லது விரைவாக கம்பனியினால் விற்பனைக்கு விடுவிப்பதற்கு கருதும் கடன்கள் மற்றும் பெறுகைகள் மற்றும் ஆரம்ப இனங்காணலின் அடிப்படையில் நியாயமான பெறுமதி ஊடாக இலாபம் அல்லது நட்டம் என பெயர் குறிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் பெறுகைகள்
- ஆரம் இனங்காலின்போது விற்பனைக்கென பெயர் குறிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் பெறுகைகள்
- கடன் வீழ்ச்சி தவிர கம்பனிக்கு ஆரம்ப முதலீட்டின் ஊடாக கணிசமானளவினால் ஒப்பந்தம் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் ஊடாக மீளப் பெற்றுக்கொள்ள முடியாத கடன்கள் மற்றும் பெறுகைகள்

ஆரம்ப இனங்காணலின் பின்னர் கடன்கள் மற்றும் பெறுகைகள் பயன்மிக்க வட்டி வீதத்தின் கீழ தேய்மானக் கிரயத்திலிருந்து சேதத்திற்கான நிதி ஏற்பாட்டை குறைத்ததன் பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்யபடும். பயன்மிக்க வட்டி வீதத்தின் அத்தியாவசியப் பகுதியான கையகப்படுத்தல் அடிப்படையில் சில மட்டங்கள் அல்லது தவணைகள் மற்றும் கட்டணங்கள் மற்றும் கிரயத்தைக் கவனத்திற்கொண்டு தேய்மானக் கிரயச் செலவு கணக்கிடப்படும் விபரமான வருமானக் கூற்றில் வட்டி வருமானத்தினுள் தேய்மானப் பெறுமதி சேர்க்கப்படுகின்றது. சேதம் காரணமாக ஏற்படும் இலாப நட்டக் கூற்றில் கடன் மற்றும் பெறுகைகளினால் சேதத்திற்கான இலாபம் / நட்டம் என இனங்காணப்படும்.

குறுகிய காலத்திற்குள் விற்பனை செய்வதற்கான கருத்து நிலவுவதனால் குறைப்பு ஆரம்பிக்கப்பட்ட கடன் பரிமாற்றல்களுக்காக வைகப்பட்டிருப்பதாக வகைப்படுத்துவதற்கு கருதும் சந்தர்ப்பத்தில் கம்பனிக்கு சில கடன் பிணைப்புக்களுக்கு உள்வாங்குவதற்கு முடியும். கடன் கொடுப்பதற்கான இந்த பொறுப்புக்கள் மூலத்திலிருந்து வருவிக்கப்பட்டதாக அறிக்கைப்படுத்தப்படுவதுடன், இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்படும்.

குறைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட கடன்களை கம்பனியினால் தக்கவைத்துக்கொள்வதற்கு மற்றும் குறுதிய காலத்தில் விற்பனை

செய்யாதிருப்பதற்கு கருதும் சந்தர்ப்பத்தில் பொறுப்புக்கள் நட்டமொன்று ஏற்பட முடியுமான பொறுப்பு வாய்ந்த ஒப்பந்தமாகும். சந்தர்ப்பத்தில் மாத்திரம் அறிக்கைப்படுத்தப்படும்.

ஈ) விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் நிதிச் சொத்துக்கள்

விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் நிதி முதலீடுகள் என்பது, வியாபாரத்திற்காக அல்லது இலாபம் அல்லது நட்டத்தினால் நியாயயமான பெறுமதி குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத நிதிச் சொத்துக்களாகும். கம்பனி கடன் அல்லது பெறுகைகள், விற்பனைக்காக வைக்ப்பட்டிருப்பதாக எதனையும் வகைப்படுத்தபடவில்லை.

ஆரம்ப இனங்காணலின் பின்னர் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் நிதி முதலீடுகள் நியாயமான பெறுமதியல் மதிப்பீடு செய்யப்படும். கைத்தேறாத இலாப மற்றும் நட்டத்திற்காக காணப்படும் இருப்புக்குள் பங்குகள் "விற்பனைக்காக உள்ள ஒதுக்கம்" (ஏனைய விபரமான வருமானம் இனங்கண்டு கொள்ளப்படும்.) முதலீடுகளை விடுவிக்கும் சந்தர்பத்தில் பங்குகளில் இதற்கு முன்னர் இனங்கண்டு கொள்ளப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம் ஏனைய செயற்பாட்டு வருமானத்திற்குள் விபரமான வருமானக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படும்.

4.7.4 நிதிச் சொத்துக்கள் மீள வகைப்படுத்தல்

ஆரம்ப இனங்காணலின் பின்னர், சில சந்தர்ப்பங்களில் கம்பனியினால் இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதியில் விற்பனைக்காகவுள்ள நிதிச் சொத்துக்கள் (FVTPL) தவிர மூலத்திலிருந்து வருவிக்கப்படாத நிதிச் சொத்துக்களை மீண்டும் வகைப்படுத்த முடியும்.

- பரிமாற்றலுக்காக வைக்கப்பட்டிருக்கும் மற்றும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் நிதிச் சொத்துக்கள் கடன்கள் மற்றும் பெறுகைகள் அல்லது முதிர்ச்சி வரை தக்க வைத்துக்கொள்ளும் வகைகள்
- விற்பனைக்காக வைக்கபட்டிருக்கும் வகைகள் மற்றும் கடன் மற்றும் பெறுகைகள் பரிமாற்றலுக்காக வைக்கப்பட்டிருக்கும் வகைகள் அல்லது முதரிச்சியடையும் வரை வைத்திருக்கும் வகைகள் மீண்டும் வகைபடுத்தும் திகதியல் நியாயமான பெறுமதிக்கு மீண்டும் வகைப்படுத்தல் குறிப்பிடப்படுவதுடன், அது புதிய தேய்மானச் செலவாக மாறும் விறபனைக்காக வைக்கப்பட்டிருக்கும் வகையிலிருந்து வெளிவாரியாக மீண்டும் வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களுக்காக பங்குகளில் இனங்காணப்பட்ட அந்தச் சொத்துக்கள் மீதான ஏதேனும் முன்னைய இலாபம் அல்லது நட்டம் பயன்மிக்க வட்டி வீதப் பயன்பாட்டின் மூலம் முதலீட்டின் மீதி ஆயுட்காலம் பூராகவும் இலாபம் அல்லது நட்டத்திற்கு தேய்வுக்குட்படுத்தப்படும். புதிய தேய்மானச் செலவு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சலுக்கிடையே ஏதேனும் மாற்றங்கள் பயன்மிக்க வட்டி வீதப் பயன்பாட்டினால் சொத்தின் மீதி ஆயுட்காலம் பூராகவும் தேய்மான்திற்குட்படுத்தப்படும். சொத்துக்கள் பிந்திய காலங்களில் சேதத்திற்குட்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்படின் அப்போது பங்குகளில் குறிப்பிடப்பட்ட அளவு விபரமான வருமானக் கூற்றில் மீள் சுழற்சி செய்யப்படும்.
- கொடுக்கல் வாங்கல்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் வகைகள் மற்றும் கடன் மற்றும் பெறுகைகள் பற்றிய வரைவிலக்கணத்தை பூர்த்தி செய்தால் மற்றும் கம்பனி எதிர் காலத்தை காண முடியுமான காலம் அல்லது முதிர்ச்சி வரை நிதிச் சொத்துக்களை வைத்துக்கொள்வதற்கான துற்துணிவு மற்றும் ஆற்றல் காணப்படும் கொடுக்கல் வாங்கலுக்காக வைக்கப்பட்டிருக்கும் வகை மற்றும் கடன் பெறுகைகள் நிதிச் சொத்துக்களை மீண்டும் வகைப்படுவதாயின் மற்றும் பணப்பெறுகைகளின் அதிகளவு அறவீடகளின் பெறுபேறாக எதிர்கால பணப் பெறுகைகள் பற்றிய மதிப்பீட்டை அதிகரிக்கும்

மீள வகைப்படுத்தல் முகாமைத்துவத்தின் விருப்பத்தின்பேரில் காணப்படுவதுடன், உபகரணத்திற்கு உபகரணம் எனும் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

4.7.5 நிதிச் சொத்துக்களை மீள இனங்காணல்

நிதிச் சொத்தொன்று (அல்லது ஏற்புடைத்தாகும் இடங்களில் நிதிச் சொத்தொன்றின் பகுதி அல்லது சமமான நிதிச் சொத்துக்கள் குழுமத்தின் ஒரு பகுதி) கீழ் குறிப்பிடப்படும். சந்தரப்பங்களில் மீண்டும் இனங்கண்டு கொள்ளப்படும்.

- சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல் மூலமான பெறுகைகளின் உரிமை நிறைவு செய்யபட்டிருக்கையில்
- கம்பனி சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல் மூலமான பெறுகைகளின் உரிமையை மாற்றியிருக்கும் அல்லது பின்னர் அனுப்பும் முறையின் கீழ் மூன்றாம் தரப்பினருக்கு கணிசமானளவு தாதங்களின்றி முழுமையாகப் பெற்ற காசுப் பாய்ச்சலை செலுத்துவதற்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லையென ஏற்றுக்கொள்ளும் போது
- கம்பனி சொத்தின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் உதவித் தொகைகள் கணிசமானளவினால் மாற்றியருக்கும் போது
- கம்பனி சொத்தின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் உதவித் தொகைகளை கணிசமானளவினால் மாற்றியிருக்கும் போது மாற்றியிருக்காத

மற்றும் தக்கவைத்திராத
ஆனாலும் சொத்தின் நிர்வாகத்தை
மாற்றியிருக்கும் போது மாற்றப்படாத
மற்றும் தக்கவைத்திராத
ஆனாலும் சொத்தின் நிர்வாகத்தை
மாற்றியிருக்கும் போது

கம்பனி அதன் சொத்திலிருந்து
காசுப்பாய்ச்சலைப் பெற்றுக்கொள்ளும்
உரிமையை மாற்றியிருக்கும்
போது அல்லது பின்னர் அனுப்பும்
ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருக்கும்
போது அல்லது கம்பனி சொத்தின்
அனைத்து ஆபத்துக்கள் மற்றும்
நன்கொடைகளை கணிசமானளவினால்
மாற்றியிருக்கும் போது மாற்றப்படாத
மற்றும் தக்கவைத்திராத ஆனாலும்
சொத்தின் நிர்வாகத்தை மாற்றியிருக்கும்
போது சொத்தின் நிர்வாகத்தை
மாற்றியிருக்கும் போது சொத்தில்
கம்பனியின் தொடர்ச்சியான தலையீட்டின்
அளவுக்கு சொத்துக்கள் இனங்காணப்படும்
அவ்வாறான சந்தர்ப்பங்களில் கம்பனி
தொடர்புடைய பொறுப்பையும் இனங்கண்டு
கொள்ளும்.

மாற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும்
தொடர்புடைய பொறுப்புக்களை
கம்பனி தக்கவைத்திருப்பவைகளின்
உரிமைகளுடனான பொறுப்புக்களை
வெளிப்படுத்தும் அடிப்படையில் மதிப்பீடு
செய்யப்படும் மாற்றப்பட்ட சொத்துக்கள்
சம்பந்தமாக பிணையொன்றின் விதத்தில்
எடுக்கப்படும் தொடர்ச்சியான தலையீடானது
சொத்தின் ஆரம்ப கொள்வனவு
பெறுமதிக்கு குறைவான மற்றும் கம்பனிக்கு
மீளச் செலுத்த முடியுமான மாற்றத்திற்கு
உச்சளவுக்கு மதிப்பீடு செய்யப்படும்.

4.7.6. சேதத்தை இனங்கண்டுகொள்ளல், பெறுமதியை மதிப்பீடு செய்தல்

அறிக்கைப்படுத்தும் சகல தினங்களிலும்
கம்பனியானது இலாபம் அல்லது நட்டத்தின்
ஊடாக நியாயமான பெறுமதியில்
கொள்ளப்படாத நிதிச் சொத்துக்கள்
சேதமடைவதாக விடயத்துடன்
தொடர்புடைய சாட்சியமொன்று
இருக்கின்றதா என்பது சம்பந்தமாக
மதிப்பீடு செய்யப்படும். சொத்து
(சொத்துக்கள்) ஆரம்ப இனங்காணலின்
பின்னர் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மற்றும்
நம்பகத்தன்மையுடன் மதிப்பீடு செய்ய
முடியாத சொத்தின் (சொத்துக்களின்)
எதிர்கால நிதிப் பாய்ச்சல்கள் மீதான
நட்டம் ஏற்படுவதனால் தாக்கம்
ஏற்படுவதாக விடயத்துடன் தொடர்புடைய
சாட்சி சுட்டிக் காட்டும் சந்தர்ப்பத்தில் நிதிச்
சொத்து அல்லது நிதிப் சொத்துக்கள்
மீதான சேதம் ஏற்படும்.

சேகரிக்க முடியாதென கம்பனி
தீர்மானிக்கும் சந்தர்பத்தில் கடன் மற்றும்
முற்பணங்கள் மற்றும் முதலீட்டு பிணைப்
பத்திரங்கள் பதிவழிக்கப்படும்.

4.8 பணம் மற்றும் வங்கி மீதிகள்

பணம் மற்றும் வங்கி மீதிகள், கையிலுள்ள
காசு மற்றும் வங்கி மீதி எனப் பொருள்
கொள்ளப்படும் காசுப் பாய்ச்சல் கூற்றின்
நோக்கத்திற்காக காசு மற்றும் காசுக்குச்
சமமானவைகள், கையிருப்புத் தொகை
மற்றும் வங்கி மேலதிகப் பற்றுக்களிலிருந்து
தேறிய வங்கி சேமிப்பைக் கொண்டிருக்கும்.
கையகப்பத்திக்கொள்ளப்படும்
தினத்திலிருந்து மூன்று மாதங்கள் அல்லது
அதனிலும் குறைவான காலஎல்லைக்குள்
குறுகியகால முதிர்ச்சியுடன் முதலீடுகளும்
காசு மற்றும் சமமான சொத்துக்களாகக்
கருதப்படும்.

4.9 பிரகடனப்படுத்தப்பட்ட மூலதனம்

பொதுவான பங்குகளாக மீண்டும்
வகைப்படுத்தப்படும் பங்கு உபகரணங்களை
வெளியிடும் நேரடி கிரயமின்றி
கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கப்பெற
வேண்டிய காசு அல்லது ஏனைய
மூலங்களின் நியாயமான பெறுமதிக்கு
மதிப்பீடு செய்யப்படும்.

4.10 ஓய்வூதிய அனுகூலப் பொறுப்புக்கள்

4.10.1 நிர்ணயிக்கப்பட்ட அனுகூலத் திட்டம் - பணிக்கொடை

நிதி நிலைமைக் கூற்றில் இனங்காணப்பட்ட
பொறுப்புக்கள் கணிக்கப்பட்ட அலகுகள்
கடன் முறைப் பயன்பாட்டின் ஊடாக
உண்மை உரிமை மதிப்பீட்டின்
அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு
அறிக்கைபடுத்தப்பட்ட திகதியில்
நிர்ணயிக்கப்பட்ட அனுகூலங்களின்
தற்போதைய மதிப்பீட்டை பிரதிபலிக்கும்.
உண்மையுரிமை மதிப்பீட்டு மட்ட வீதம்
மற்றும் எதிர்கால சம்பள அதிகரிப்பு
சம்பந்தமான அனுமானிப்புக்களை
மேற்கொள்ளலுடன் தொடர்புடையதாகும்
நிர்ணயிக்கப்பட்ட அனுகூலப்
பொறுப்பு இந்த அனுமானிப்புக்களின்
வேறுபாடுகளுக்கு உயர்ந்தளவில்
உணர்வுபூர்வமாக இருக்கும் இந்த
அனுகூலங்களுக்காக வெளிவாரியாக நிதி
பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கம்பனி ஏனைய விபரமான வருமானக்
கூற்றுக்குள் ஒரே தடவையில்
நிர்ணயிக்கப்பட்ட அனுகூலத் திட்டத்தினால்
ஏற்படும் உண்மையுரிமை இலாபம் மற்றும்
நட்டம் அனைத்தையும் இனங்கண்டு
கொள்ளப்படும்.

எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12
ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல்
சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை
செலுத்தும் பொறுப்பு தொடர்ச்சியான
5 வருட சேவைக் காலத்தைப் பூரத்தி
செய்திருந்தால் மாத்திரமே ஏற்படுகின்றது.

4.10.2 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்
சேவையின் பின்னரான அனுகூலத்
திட்டமாகும். அதன் கீழ் நிறுவனமொன்று
வேறொரு நிறுவனமொன்றுக்கு நிலையான
பங்களிப்புத் தொகையை செலுத்துவதுடன்,
மேலதிகப் பணத்தைச் செலுத்துவதற்காக
சட்ட ரீதியான அல்லது அரத்தமுள்ள
பொறுப்பொன்று இல்லை. நிர்ணயிக்கப்பட்ட

பங்களிப்புத் திட்டத்திற்கான பங்களிப்புக்கான பொறுப்புக்கள் ஊழியர்களால் சேவையாற்றும் சகல எல்லைக்குள் விபரமான வருமானக் கூற்றில் ஊழியர் அனுகூலச் செலவாக இனங்கண்டுகொள்ளப்படும்.

அ) ஊழியர் சேமலாப நிதியம்

அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களின் சம்பளத்தில் கம்பனி மற்றும் ஊழியர் முறையே 12% மற்றும் 8% பங்களிப்பு வழங்கப்படும்.

ஆ) ஊழியர் நம்ப்பிக்கைப் பொறுப்பு நிதியம்

ஊழியர் நம்ப்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு கம்பனியினால் ஒவ்வொரு ஊழியரதும் சம்பளத்திலிருந்து 3% பங்களிப்புத் தொகை வழங்கப்படும்.

4.11 நிதிப் பொறுப்புக்கள்

4.11.1 ஆரம்ப இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தல்

கம்பனி ஒப்பந்த வேலைத் திட்டத்தின் உட்பொருள் மற்றும் நிதிப் பொறுப்புக்களுக்கான வரைவிலக்கணத்திற்கமைய, இலாபம் அல்லது நட்டதின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிப் பொறுப்புக்கள் (FVTPL) அல்லது ஏனைய நிதிப் பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படும்.

நிதிப் பொறுப்பின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு கம்பனி ஒரு தரப்பாகும் போது நிதி நிலைமைக் கூற்றில் கம்பனி அந்த நிதிப் பொறுப்புக்களை இனங்கண்டுகொள்ளும்.

அ) இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிப் பொறுப்புக்கள் (FVTPL)

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பொறுமதியல் நிதிப் பொறுப்புக்கள் (FVTPL) உள்ளடக்கப்படும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் நிதிப் பொறுப்புக்கள் அல்லது ஆரம்ப இனங்காணலின் அடிப்படையில் அவ்வாறு பெயர் குறிப்பிடப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் உள்ளடக்கப்படும். ஆரம்ப இனங்காணலின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியல் நிதிப் பொறுப்புக்கள் (FVTPL) நியாயமான பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படும்.

ஆரம்ப இனங்காணலின் பின்னர் கையகப்படுத்திக் கொள்வதற்காக நேரடியான கொடுக்கல் வாங்கல்கள் செலவை மேற்கொள்ளப்பட்டதாக இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக இனங்கண்டுகொள்ளப்படும். ஆரம்ப இனங்காணலின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிப் பொறுப்புக்களை பெயர் குறிப்பிடும் அளவுகோல் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதியல் நிதிச் சொத்துக்களுடன் சமமானதாக இருக்கும்.

ஆ) ஏனைய நிதிப் பொறுப்புக்கள்.

கம்பனியினால் வெளியிடப்பட்ட செயல்மதிப்பு மற்றும் கடன் உட்பட ஏனைய நிதிப் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய கடனாகப் பெற்ற நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு நேரடியாக தாக்கம் செலுத்தும் கொடுக்கல் வாங்கல் செலவு குறைக்கப்பட்ட நியாயமான பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்கண்டுகொள்ளப்படுவதுடன் பயன்மிக்க வட்டி வீத முறையைப் பயன்படுத்தி தேய்மானக் கிரயத்திற்கு பிந்திய காலங்களில் மதிப்பீடு செய்யப்படும். வெளியிடல் மீதான கழிவுகள் அல்லது தவணை மற்றும் பயன்மிக்க வட்டி வீதத்தின அத்தியாவசியப் பகுதியான கிரயத்தை கவனத்திற்கொண்டு தேய்மானக் கிரயம் கணக்கிடப்படும்.

4.11.2 நிதிப் பொறுப்புக்களை மீள இனங்கண்டு கொள்ளல்

பொறுப்புக்களின் கீழ் பிணைப்பை விடுவிக்கும் அல்லது இரத்துச் செய்யும் அல்லது முதிர்ச்சியடையும் சந்தர்ப்பத்தில் நிதிப் பொறுப்பு மீண்டும் இனங்கண்டுகொள்ளப்படும் தற்போது நிலவும் நிதிப் பொறுப்பொன்று பிந்திய காலங்களில் வேறு விதிமுறைகளின் அடிப்படையில் அந்தக் கடனாளியிடமிருந்து பிறிதொரு பொறுப்பினால் மீளமைக்கப்படும் சந்தர்பத்தில் அல்லது நிலவும் பொறுப்பொன்றின் விதிமுறைகள் பிந்திய காலங்களில் மாற்றமடையும் சந்தர்ப்பத்தில் அவ்வாறான பரிமாற்றல் அல்லது மாற்றமடையச் செய்தல் ஆரம்ப பொறுப்பை மீண்டும் இனங்கண்டு கொள்ளல் மற்றும் புதிய பொறுப்பை இனங்கண்டுகொள்ளல் எனக் கருதப்படும் ஆரம்ப நிதிச் சொத்தின் ஏற்றுக்கொள்ளும் பெறுமதி மற்றும் செலுத்திய மறுசீரமைப்புத் தொகைக்கிடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டமாக இனங்காணப்படும்.

4.12 ஒதுக்கீடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் பெறுபேறாக நிகழ்காலத்தின் பொறுப்பொன்று (சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான) கம்பனிக்கு ஏற்படும் மற்றும் பொருளாதார அனுகூலங்களைக் கொண்டிருக்கும் உபகரணமொன்றின் வெளியேற்றம் பொறுப்பை தீர்ப்பதற்கு தேவைப்பட முடியுமான மற்றும் பொறுப்பின் அளவு தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்ள முடியுமான சந்தர்ப்பத்தில் ஒதுக்கீடு இனங்கண்டுகொள்ளப்படும் ஒதுக்கீடுகளுடன் தொடர்பான செலவுகள் ஏதேனும் ஈடுசெய்தல்கள் சம்பந்தமாக விபரமான வருமானக் கூற்றில் முன்வைக்கப்படும்.

4.13 காசுப் பாய்ச்சல் கூற்று

இலங்கை கணக்கீட்டு கொள்கை - 7 (IKAS -7) காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நேரடி முறையினைப் பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாக கையிலுள்ள காசு, வங்கிப் பணம் மற்றும் வங்கி மேலதிகப் பற்று என்பன உள்ளடக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2017, திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த 12 மாதங்களுக்கானது

4.14 பிரிவுகளுக்கமைய தகவல்கள்

பரிவு என்பது சேவைகளை வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மாற்ற முடியுமான கூறுகளாக இருப்பதுடன் ஏனைய பிரிவுகளிலிருந்து வேறுபடும் ஆபத்துக்கள் மற்றும் ஈடுசெய்தல்களுக்கு உட்பட்டதாகும். கம்பனியின் சகல செயற்பாடுகளும் ஒரு பிரிவாக கவனத்திற் கொள்ளப்படுவதனால் பிரிவுகளாக இனங்கண்டுகொள்ள முடியுமான மாற்ற முடியுமான கூறுகள் கம்பனியிடம் இல்லை.

4.15 வெளியிடப்பட்ட ஆனால் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத தரங்கள்

வெளியிடப்பட்ட போதிலும் ஹோட்டல் நிதிக் கூற்றுக்கள் விநியோகிக்கப்படுகின்ற வரையில் வலுவாக்கம் செய்யப்படாத தர நியமங்கள் மற்றும் வரைவிலக்கணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அவை செயல் வலுவாக்கம் செய்யப்பட்ட பின்னர் உரிய வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஹோட்டல் எதிர்பார்க்கின்றது.

நிதி உபகரணங்கள் தொடர்பான SLFRS 9 தரம்

நிதி உபகரணங்கள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பான தற்போதைய வழிகாட்டி IKAS 39 இற்குப் பதிலாக சார்பாக SLFRS 9 பதிலீடு செய்யப்பட்டுள்ளது. நிதி உபகரணங்கள் வகுப்பீடு மற்றும் மதிப்பீடு தொடர்பான திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டல்கள், நிதி சொத்துக்கள் கழிவு கணக்கிடும் புதிய எதிர்பார்க்கும் கடன் நட்டம் மாதிரி மற்றும் புதிய பொது எதிர்கால காப்புக் கணக்கீட்டுத் நியதிகள் SLFRS 9 இல் அடங்கும். நிதி உபகரணங்கள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் நீக்கம் செய்தல் தொடர்பாக IKAS 39 வழிகாட்டல் இதன் மூலம் அவ்வாரே பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

